
டிராகன் நகரம்!
லயன்
காமிக்ஸ்
லயன் 50-வது இதழ்!
காய விளையாட்டு
ப்ரீ!
ரூ. 5/-



அடுத்த வெளியீடு!
மிஸ்டர் ஜெட்!
லயன் காமிக்ஸ்
ரூ. 2-50

மே 1988

காமிக்ஸ் ரசிகர்களே,

உங்கள் அபிமான லயன் காமிக்ஸின் இப்போதைய ஸ்கோர் - 50 not out.........!

நேற்றுத் தான் ''கத்தி முனையில் மாடஸ்டி''க்கான (வெளியீடு நெ: 1) வேலைகளைத் தொடங்கியது போல உள்ளது-ஆனால் அதற்குள் ஐம்பது இதழ்களும், கிட்டத்தட்ட நாலு வருஷங்களும் பறந்து விட்டன!

இந்த ஐம்பது வெளியீடுகளுக்கு மத்தியில் தான் எத்தனை அனுபவங்கள்!

ஆரம்ப கால விற்பனைப் பிரச்சனைகளிலிருந்து — எவருமே எட்டிப் பார்க்க முடியாத எவரெஸ்ட் உச்சியான பத்து ரூபாய் (**தீபாவளி**) மலர் வரை எல்லாவித ups and downs ஐ நமது லயன் பார்த்து விட்டது!

'கத்தி முனையிலிருந்து-கொலைப்பசி' வரையிலான இந்தக் காமிக்ஸ் யாத்திரையில் உடனிருந்து ஊக்குவித்து வரும் வாசக நண்பர்களுக்கு எங்களது நன்றிகள் என்றும் உண்டு! தொடரும் எங்களது முயற்சிகளுக்கு இதே ஆதரவைக் கோருகிறோம்.

சமீபத்தில் வந்ததொரு வாசகர் கடிதத்தை இங்கே பிரசுரித்தால் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

● ஆர். அமுதா, வடகெவிருட்சியூர்.

**1988 மே மாத 50-வது லயன் இதழுக்கு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளும் நான், 1992 ஜூலை மாதத்தில் மலர இருக்கும் 100 வது லயன் இதழுக்கும், 2000 நவம்பர் மாதத்தில் மலர இருக்கும் 200-வது லயன் இதழுக்கும் அட்வான்ஸாக என் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்!**

கடவுள் துணையும், இது போன்ற வாசகர்களின் ஆதரவும் இருக்கும் வரை இன்னும் பல மைல் கல்களை லயன் தாண்டப் போவது உறுதி!

அன்புடன்,
S. விஜயன்

## இலவச தாய விளையாட்டு




வாங்கி விட்டீர்களா?



92-1

## ஜூன் '84 கத்தி முனையிலிருந்து......கொலைப் பசி வரை...!

1) கத்தி முனையில் மாடஸ்டி பிளைஸி
2) மாடஸ்டி IN இஸ்தான்புல்
3) ஸ்பைடர்— எத்தனுக்கு எத்தன்
4) டாக்டர் டக்கர்
5) இரும்பு மனிதன் (தீபாவளி மலர்)
6) கபாலர் கழகம்
7) பாதாளப் போராட்டம்
8) கொலைப் படை (பொங்கல் மலர்)
9) பயங்கர நகரம்
10) கடத்தல் குமிழிகள்
11) மரணக் கோட்டை
12) பழி வாங்கும் பொம்மை
13) சதி வலை (கோடை ஸ்பெஷல்
14) காணமல் போன கடல்
15) சைத்தான் விஞ்ஞானி (ஆண்டு மலர்)
16) உலகப் போரில் ஆர்ச்சி
17) யார் அந்த மினி-ஸ்பைடர்?
18) இஸ்தான்புல் நாடகம்
19) தலைவாங்கிக் குரங்கு (தீபாவளி மலர்)
20) ஆப்பிரிக்க சதி
21) மனித எரிமலை (பொங்கல் மலர்)
22) சதுரங்க வெறியன்
23) மாஸ்கோவில் மாஸ்டர்
24) தங்க வேட்டை
25) கோடை மலர் '86
26) அதிரடி வீரர் ஹெர்குலஸ்
27) பளிங்குச் சிலை மர்மம் (ஆண்டு மலர் II)
28) மர்ம எதிரி
29) நீதிக் காவலன் ஸ்பைடர்
30) யார் அந்த ஜூனியர் ஆர்ச்சி?
31) தீபாவளி மலர் '86
32) மீண்டும் ஹிட்லர்!
33) பழி வாங்கும் பாவை
34) புரட்சித் தலைவன் ஆர்ச்சி
35) மரண மாஸ்டர்
36) கோடை மலர் '87
37) காணமல் போன கோடீஸ்வரர்
38) கல் நெஞ்சன்
39) அதிரடிப் படை (ஆண்டு மலர் *III*)
40) பயங்கர நாடகம்
41) கராத்தே டாக்டர்
42) லயன் சூப்பர் ஸ்பெஷல் (தீபாவளி மலர்)
43) கடத்தல் வலை
44) டேஞ்சர் டயபாலிக்
45) ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி
46) இராட்சஸக் குள்ளன்
47) மரணப் பணி
48) சூப்பர் ஸ்டார் ஸ்பைடர்
49) கொலைப் பசி
50) டிராகன் நகரம்

மே '88


மரணத்தைத் தேடி!
மாஸ்டர், ஆட்கள் வருகிறார்கள்!
ஏதோ ஒரு பயணக் குழு -ஹோல்ஸின் தலைமையில் வருகிறது!
மிகத் திறமையான ஆப்பிரிக்க வேட்டைக்காரரான ஜிம்பாவுக்கு ஓய்வு ஒழிச்சல் என்பதே கிடையாது. ஒருமுறை, நீண்ட தொலைவு பயணம் ஒன்றை முடித்துகொண்டு திரும்பியிருந்த ஜிம்பா ஓய்வாக தன் பங்களா முகப்பில் உட்கார்ந்திருந்தபோது...
மற்றவர்களை முந்திகொண்டு ஜிம்பாவை நெருங்கிய ஹோல்ஸ் பதற்றத்தோடு ஒருசில வார்த்தைகளை கிசுகிசுத்தான்—
கொஞ்சம் தண்ணீர் வாங்கி போக வந்திருப்பதாக அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால், விஷயம் வேறு. உன்னிடம்கொஞ்சம் தனிமையில் பேசவேண்டும்
ஆல்ரைட் ஹோல்ஸ்! இருட்டிய பிறகு இங்கே வா பேசலாம்.
பின்னர், இரவில்—
ஹோல்ஸை பற்றிஜிம்பாவுக்கு அவ்வளவு நல்ல அபிப்ராயம் கிடையாது என்ற போதிலும், பேசியபோது அவன்விழிகளில் தெறித்த பீதியைக்கண்டு அவனுடைய கோரிக்கைக்கு இணங்கினர்—
சரி, இப்போது சொல் ஹோல்ஸ்! உன் மனதில் இருப்பதை!
இதை, அற்பமானது என்று நீ நினைக்கலாம். ஆனல், எனக்கு என்னவோ இந்த பயணத்தை பற்றி ஒரு அச்சம் ஏற்பட்டு இருக்கிறது. அதாவது—
விர்ரென்று பறந்து வந்த ஈட்டி ஒன்று ஹோல்ஸை மேலே பேசவிடாமல் குத்தி வீழ்த்தியது—
ஆஹ்... ஐயோ!
ஹோல்ஸ்!
சட்டென்று தன் ரைபிளை கையிலெடுத்துக் கொண்டு ஈட்டி வந்த திசை நோக்கி ஓடினர் ஜிம்பா. ஆனல், புதர்களின் பின் எவருமே இல்லை—
என்ன ஆயிற்று? இங்கே யாரோ சற்று முன் பயங்கரமாக அலறினர்களே!
செத்துவிட்டான்! யாரோ அவனை கொன்று விட்டார்கள்!


மற்ற இரு வெள்ளையர்களும் ஜிம்பாவோடு சேர்ந்து அந்தப் பிராந்தியம் முழுவதும் தேடினர். ஆனால், பலனில்லை—
சுமை தூக்கிகளில் எவனாவது அந்த காரியத்தை செய்திருக்கலாம். அவர்களிடம் வழி நெடுகிலும் ஹோரால்ஸ் அரக்கத்தனமாகவே நடந்து கொண்டான்!
ஆமாம், ஹோரால்ஸ் சில சமயத்தில் கடுமையாக நடந்துகொள்வதுண்டு
ஸார், என் பெயர் ரேட்கிளிப். இது என் பார்ட்னர், காலின். எங்களை வழி நடத்திச் செல்லும் பொறுப்பை தயவுசெய்து நீங்கள் ஏற்றுகொள்ளணும்! உபிட்ஸு நாட்டின் வடக்கேயுள்ள பிராந்தியத்திற்கு நாங்கள் போகணும்!
அதை கேட்டு வியப்பினால் அகல விரிந்தன ஜிம்பாவின் விழிகள்-
அது எவ்வளவு ஆபத்தான பயணம் என்று ஹோரால்ஸ் எச்சரிக்கலையா உங்களை? உபிட்ஸு பொக்கிஷம் பற்றி நீங்கள் கேள்விபட்டதில்லையா? அதை யாரும் அபகரித்து சென்று விடாமலிருக்க, அந்த ஜனங்கள் கண்ணில்படும் வெளியாட்களை அக்கணமே கொன்றுவிடுவர். இதற்கு முன் சென்ற பயண குழுவினர் எவருமே ஊர் திரும்பலை தெரியுமா?
தெரியும் என்பதாக அவ்விருவரும் தலையை ஆட்டினார்கள்—
ஆமாம் அரை நூற்றாண்டுக்கு முன் அவ்வழியே சென்ற வியாபாரிகளை கொன்று அபகரித்து சேமித்து வைத்துள்ள பொக்கிஷங்கள் அவை என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அங்கே ஒரு வியாபார கேந்திரத்தை நிறுவ உத்தேசித்துள்ளோம். அந்த பழங்குடி மக்களுக்கு துணிமணிகள், உணவு பொருட்கள், மருந்துகள் கிடைக்க அது வாய்ப்பாக அமையும்.
எனக்கும் அந்த ஆசையுண்டு. ஆனால் இது ஒரு ஆபத்தான முயற்சி என்பதை புரிந்து கொள்ளுங்கள். உங்கள் கைடாகவர சம்மதிக்கிறேன். நாளை விடிகாலையில் நாம் புறப்படுவோம்
ஹோரால்ஸ் தன்னிடம் சொல்ல வந்தது என்ன என்ற சிந்தனையுடன், மறுநாள் காலை, தன் வாழ்க்கையில் அதுவரை மேற்கொண்ட பல பயணங்களைவிட பலவகையிலும் ஆபத்தான அந்த பயணத்தை தொடங்கினார் ஜிம்பா—
இரண்டு நாள் பயண முடிவில் நாம் உபிட்ஸு நாட்டின் விளிம்பைத் தொட்டுவிடுவோம். அதன் பிறகு எதுவும் நம் கையில் கிடையாது.
இரண்டு இரவுகள் கழித்து, 40 மைல் தொலைவை கஷ்டபட்டு கடந்த பின், ஒரு பயங்கர பள்ளத்தாக்கு குறுக்கே இருந்த பழையபாலத்தை அடைந்தனர்
பாலத்தின் மறு பக்கம் உபிட்ஸு நாட்டு எல்லை!
அங்கு வாழும் காட்டுமிராண்டி ஜனங்களை போலவே அந்த பிராந்தியமும் படுபயங்கரமாகக் காட்சியளிக்கிறது!



அந்த தொங்கு பாலத்தில் அவர்கள் வெகு நிதானமாக நடந்த போதிலும் அது படுபயங்கரமாக ஆடியது. ஏதோ ஓர் உள்ளுணர்வு எச்சரிக்கை விடுக்க சட்டென்று திரும்பினார் ஜிம்பா—
ம்ம், சீக்கிரம்-ஏதோ விபரீதம் நிகழப் போகிறது என்று தோன்றுகிறது!
மறுகணம், மூவரும் ஓடிச்சென்று மறுகரையில் கால் வைத்ததும்—
ஆஹ்...ஐயோ!
சுமை தூக்கிகள் சரிந்த பாலத்தின் கட்டைகளை பற்றிக்கொண்டு உயிர்தப்பினர். அவர்கள் மீட்கப் பட்டு கரைசேர்க்கபட்ட பிறகும் அவர்களின் விழிகளில் மிதமிஞ்சய கிலி!
பாலத்தின் கயிறுகள் இற்றுபோய் இருந்திருக்க கூடும்.
அல்லது நாம் மேலே முன்னேறி வருவதை அச்சுறுத்தல் மூலம் தவிர்க்க உபிட்ஸுகள் கயிற்றை பாதி அறுத்து வைத்திருக்கலாம்.
சுமைதூக்கிகள் தப்பி விட்டார்கள்-ஆனால், உணவு மூட்டைகளை இழந்துவிட்டோம். இருக்கிற கஷ்டம் போதாதென்று இனி உணவு பஞ்சத்தையும் நாம் சமாளித்தாக வேண்டும்!
அடுத்த வேளை உணவுகூட கைவசம் இல்லை என்ற நிலையிலும் பயணத்தை தொடர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான் ரேட்கிளிப்—
உணவில்லாமல் எப்படி பயணத்தை நாம் தொடர முடியும்? வேட்டையாடி மாமிசம் சேகரித்துக் கொள்வோம் முதலில்
நோ! துப்பாக்கி முழக்கம் உபிட்ஸுகளை உசுப்பிவிட்டு விடும்! உபிட்ஸு கையில் சிக்கினால் தொலைந்தோம்!
அடுத்த மூன்று மணிநேரத்திற்குளந்த இடையூறும் இன்றி பயணம் தொடர்ந்தது. ஒரு சமவெளி பிரதேசத்தை அவர்கள் வந்தடைந்த போது காலினுக்கு அகோரப் பசி எடுத்தது—
அதோ- காட்டு எருமைகள்!
நோ! உபிட்ஸுகளினால் வரும் ஆபத்து மட்டுமின்றி இப்போது காற்றின் போக்கில் நாம் அவற்றுக்கு மேல்பக்கமாக இருக்கிறோம். சுடாதே!
ஆனால், வயிற்றை கிள்ளிகொண்டிருந்த கடும் பசி காலினை வெறிகொள்ள செய்தது. அவன் துப்பாக்கி விசையை இழுத்தபோது
முட்டாள்! கெடுத்தாயே காரியத்தை அதோபார் நம்மை தாக்க சீறி வருகின்றன ஓடுஓடு!


ஆவேசமாக பாய்ந்தோடிவந்தது காட்டெருமை மந்தை. தலை தெறிக்க ஓட்டம் பிடித்தபோது, கால் இடறி கீழே விழுந்தான் காலின்—
ஐயோ என் கால் சுளுக்கி விட்டது, காப்பாற்றுங்கள்!
நீங்கள் தொடர்ந்து ஓடுங்கள். காட்டெருமை மந்தையை திசைதிருப்ப முடியுமா என்று பார்க்கிறேன்!.
ஜிம்பா சரமாரியாகச் சுட்டார். சற்றே திகைத்து நின்ற காட்டெருமைகள், பின்னர் வேறு திசையில் கலைந்து ஓடத் தொடங்கின-
டுமீல்! டுமீல்!
காலின் பிழைத்துக் கொண்டானோ இல்லையோ? தெரியவில்லை!
காட்டெருமைகள் பார்வையிலிருந்து மறைந்ததும், காலின் விழுந்து கிடந்த இடத்தை நோக்கி ஓடினார்கள்—
அசைவு தென்படுகிறது. இன்னும் உயிர் இருக்கிறது!
பிழைத்து கொண்டானே தவிர பயங்கரமாக காயமுற்றிருந்தான் காலின். சுமைதூக்கிகள் அவனை தூக்கி சென்றபோது, ஜிம்பா உறுதியான தொனியில் ரேட்கிளிப்பிடம் சொன்னார்-
இங்கே நாம் முகாம் இட வேண்டும்.. நகர்த்த முடியாத அளவு மோசமாக காயமடைந்திருக்கிறான் காலின். துப்பாக்கி சூடு உபிட்ஸுகளின் காதைஎட்டியதா இல்லையா என்பது நம் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது!
அன்றிரவு, காலினின் நிலைமை மோசமடைந்தது—
சுயவுணர்விழந்த நிலையில் உபிட்ஸுகளைப்பற்றி ஏதோ பிதற்றுகிறான் காலின். நீ டாக்டராயிற்றே ஏதாவது சிகிச்சையளிக்கக்கூடாதா?
உளறிகொண்டிருக்கிறானா? ம்ம், நான் அவனருகே இருப்பதுதான் உத்தமம்.
மறுநாள் காலையில், கூலிகள் முகாமை பிரித்து மூட்டை கட்டிகொண்டிருந்தவேளையில்
மிஸ்டர் ஜிம்பா, காலின் இறந்து விட்டான் பாவம்! ரொம்ப மோசமாக அடிபட்டிருந்திருப்பான் போலும்!
ஹூம் வேதனைக்குரிய விஷயம். ஆல்ரைட், கூலிகளை சவக்குழி தோண்ட சொல்கிறேன் காலினை அடக்கம் செய்துவிட்டு, நாம் ஊர் திரும்புவோம்.
ஊர் திரும்புவதா? இவ்வளவு சிரமபட்டு வந்த பின்னர் முன் வைத்த காலை பின் வைக்க தயாரில்லை! வியாபார கேந்திரத்தை நான்தனியாக நிர்வகிக்க முடியும். இன்னும் ஓரிரு நாளில் நாம் இலக்கை சென்றடைந்து விடலாம்!
அர்த்தமில்லாமல் உளறாதே! நேற்று துப்பாக்கி முழக்கத்தை உபிட்ஸுக்கள் நிச்சயம் கேட்டிருப்பர். அவர்களின் கிராமத்தருகே இருக்கிறோம் -அதை கடக்க நினைப்பது மடத்தனம்!


சட்டென்று ரைபிள்ஒன்றைகையில் எடுத்தான் ரேட்கிளிப். அவன் விழி-களில் வெறித்தனம்கொப்பளித்தது
பல வருடங்களாக நான் சிந்தித்து தீட்டிய திட்டம் இது.என்னை யாரும் இப்போ தடுத்து நிறுத்த முடியாது.என்ன வந்தாலும் சரி,பயணத்தை நாம் தொடருகிறோம் ஜிம்பா! இதற்கு ஒத்துக் கொள்ளாவிடில் இந்தக் கணமே நீ செத்து மடிவாய் ஜாக்கிரதை!
இதை கேட்டு ரேட்கிளிப்பின்முகம் சிவந்து போனதை கண்டும் காணாதவராக ஜிம்பா திரும்பி நடக்கத் தொடங்கினார்—
அடேய் சண்டாளா! தனியாக சமாளித்து கொள்ள வழி எனக்கு தெரியும்.உன்னை இக்கணமே தீர்த்து கட்ட போகிறேன்!
ஹே! மாஸ்டர் ஜாக்கிரதை!
பிதற்றாதே ரேட்கிளிப்! என் உதவி இல்லாமல் இங்கே நீ சமாளிக்கவே முடியாது என்பதை மறந்துவிடாதே! தூர எறி துப்பாக்கியை!
ஹூம் அனைத்தும் கெட்டுவிட்டது ரேட்கிளிப்! நம்மில் யாரும் இனி உயிரோடு ஊர் திரும்பபோவதில்லை!
அஹ்!
விர்ர்ர்!
மட்!
இரண்டு மணிநேர இடைவேளைக்கு பின்,உபிட்ஸு கிராமத்தின் மத்தியில் மரதூண்களோடு பிணைக்கப்பட்டு பரிதாபமாக நின்று கொண்டிருந்தனர்-பயண குழு உறுப்பினர்கள் அனைவரும்—
ஹூம்- அத்தனை பொக்கிஷங்களும் இங்குதான் இருக்கின்றனவாம். கண் எதிரேகை எட்டும் தூரத்தில்!
இதை சொல்லிவிட்டு உபிட்ஸு தலைவன் அகன்றதும், அங்கு விழிப்போடு காவல் நின்ற வீரனை யோசனையோடு உற்று பார்த்தார் ஜிம்பா—
குறிவைத்து ஈட்டி எறிவதில் வல்லவர்கள் உபிட்ஸு வீரர்கள் என்று கேள்விப் பட்டிருக்கேன். அதை வஞ்சகமா எனக்கு சாதக-மாக்கி கொள்ள முயற்சிக்க போகிறேன்.
நீ ஏன் மற்றவர்களோடு சேர்ந்து நடனமாடபோக வில்லை? நீ நோயாளியா, கட்டி போடபட்டிருக்கும் எங்களை காவல் காத்துக் கொண்டு நிற்க?குழந்தை களும்,கிழவர்களும் செய்வார்களே இதை!
வாயை மூடடா நாயே!மறு படியும் ஏதாவதுபேசினால் ஈட்டியால் குத்தி உன் குடலை வெளியே கொண்டு வந்துவிடுவேன்!
சவடால் பேச்சுக்கு குறை இல்லை!என்னை நீ நிஜமாக கொன்று விடுவாயா என்ன?ஹூம் அதெல்லாம் நிஜ ஆண்பிள்ளைகள் செய்கிற காரியம்!
என்ன திமிர் உனக்கு! உன்னை நான் கொல்லாமல் விடப் போவதில்லை!
அதே வேகத்தில் சட்டென்று விலகிக் கொண்டு விட்டார் ஜிம்பா—
விஷ்!


அவர்! கணித்தபடியே கூர்மையான அந்த ஈட்டி கைகளை பிணைத்திருந்த கயிற்றை கச்சிதமாக அறுத்துவிட்டு அப்பால் போய் விழுந்தது—
பலித்து விட்டது, என் யுக்தி!
அஹ!
தளையிலிருந்து விடுதலை கிடைத்த-தும், மின்னல் வேகத்தில் செயல் பட்டார் ஜிம்பா. உபிட்ஸூ ஆசாமி வாயை திறந்து கத்துவதற்குகூட அவகாசம் கொடுக்காமல் அவன் தாடையில் இடியென இறங்கியது ஒரு குத்து—
கும்!
அற்புதமான சாதனை! பேஷ்பேஷ்! ஓடி வந்து என்னையும் விடுதலை செய்!
இப்படியொரு நிலைமை ஏற்படலாம் என்று கற்பனையாககூட எண்ணிப் பாராத உபிட்ஸூ வீரர்கள் அங்கே உல்லாசமாக ஆடிப்பாடி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்—
கிளம்புங்கள்-நேராக தென் திசையில் பள்ள தாக்கை நோக்கி செல்லுங்கள். ரேட்கிளிப் நீயும்தான்.
சீக்கிரம், சீக்கிரம்!
ஆனால், ரேட்கிளிப் விடுவிக்கபட்டதும்-
ஹேய், அங்கே எங்கே ஓடுகிறாய்? இந்த பக்கமாக அல்லவோ ஓடவேண்டும்!
ஆனால், ஜிம்பாவின் கூக்குரலை ரேட்கிளிப் செவிமடுத்ததாக தெரியவில்லை. உபிட்ஸூகளின் பார்வையில் படாமல் பொக்கிஷங்கள் இருந்த குடிலினுள் பாய்ந்தான்—
நான் சந்தேகப்பட்டது சரிதான். ரேட் கிளிப் ஒரு டாக்டரல்ல. இந்த பொக்கிஷங்களை கவர்ந்து செல்வது ஒன்றே அவனுடைய நோக்கம். நடனமாடியது போதும் என்று இந்த உபிட்ஸூகள் தீர்மானிப்பதற்குள் பயலை எப்படியாவது இங்கிருந்து வெளியேற்றி அழைத்துப் போய்விடவேண்டும்.
குடிலின் மத்தியில் இருந்த பிரம்மாண்டமான பெட்டியை, கண்களில் பேராசை மிளிர, திறக்க யத்தனித்துக் கொண்டிருந்தான் ரேட்கிளிப்—
நான் இங்கே பயணம் மேற்கொண்டதே இதற்காகதான் ஜிம்பா. என்நோக்கத்தை ஹேரால்ஸ் சந்தேகப்பட்டதால் அவனை கொன்றேன். காலின் மரணத்திற்கும் நானே காரணம்-அவனுக்கு இனி பங்கு கொடுக்க வேண்டியிராது அல்லவா! இதோ இங்கே பார்-உபிட்ஸூகள் காலம்காலமாக பாது காத்து வரும் விலைமதிக்க முடியாத அரிய பொக்கிஷங்களை!
வேண்டாம், அதை திறக்காதே ரேட்கிளிப்- விபரீதமாகிடலாம்!


பெட்டியின் மூடியை ரேட்கிளிப் திறந்தானோ இல்லையோ உள்ளேயிருந்து சீறிக்கொண்டு எழுந்த நச்சு பாம்பு ஒன்று அவன் கையில் தன் பற்களை ஆவேசத்தோடு பதித்தது—
ஆப்ரிக்கன் வைப்பர்! தங்கள் பொக்கிஷங்கள் பறிபோய்விடாமல் இருக்க உபிட்ஸுகள் செய்து வைத்திருந்த இறுதி கட்ட பாதுகாப்பு ஏற்பாடு இது போலும்!
ஆ…ஐயோ!
அது ஒரு கொடிய விஷப்பாம்பு ஆனதால் அக்கணமே சுருண்டு விழுந்தான் ரேட்கிளிப்-
உள்ளே இருப்பவை? ஹூம், இவைதானா உபிட்ஸுகள் போற்றி பாதுகாத்து வரும் அரிய பொக்கிஷங்கள்!
சில கண்ணாடிகள் பித்தளை அணிகலன்கள் கருமருந்து குழாய்கள் அத்தனையும் மதிப்பற்ற காயலான் கடை கழிசடைகள். ஆனால் கடுகளவு நாகரீகமும் அறியாத உபிட்ஸுகளுக்கு இவை அரிய பொக்கிஷங்களாக தோன்றியதில் வியப்பேதுமில்லை!
இவ்வாறு சிந்தித்துக்கொண்டு நின்ற ஜிம்பாவின் கவனத்தை ஈர்த்தது-வெளியே கேட்ட கூக்குரல்! உபிட்ஸுகளின் நடனம் முடிந்துவிட்டது போலும்—
அங்கே கவனி-கைதிகள் தப்பிவிட்டார்கள் போலிருக்கிறது!
ஒருவன் மட்டும் நம் பொக்கிஷங்களை கவர்ந்து செல்லும் எண்ணத்தோடு குடிலினுள் நிற்கிறான் பார்!
அவனை கொன்று தீர்ப்போம்-ஓடி வாருங்கள்!
இதை கண்ணுற்ற ஜிம்பா சட்டென்று ஒரு தீர்மானத்திற்கு வந்தார். குனிந்து பெட்டியில் இருந்த சில குழாய்களை கையிலெடுத்துக் கொண்டார்.—
குடிசையைவிட்டு வெளியே வந்தார். ஜிம்பா. எதிரே படு ஆவேசமாக பாய்ந்தோடி வந்து கொண்டிருந்தது உபிட்ஸுகள் கூட்டம்--
சரியாக குறி வையடா ஜிம்பா! வெடிமருந்து குழாய் தீயில் போய் கச்சிதமாக இறங்காவிடில், நீ கொல்லப் படுவாய்-கவனம்!


கையிலிருந்த வெடிமருந்து குழாய்களை அடுத்தடுத்து ஒவ்வொன்றாக தீயை குறிவைத்து வீசி எறிந்தார் ஜிம்பா--
அதைத் தொடர்ந்து-
யீயீ...ஈஈ!
டம்
டம்
டம்!
கச்சிதமாக தீயின் மத்தியில் போய் அவை விழுந்ததும், காதை செவிடாக்கும் இடியோசைகள் எழுந்தன--
நாலா திசையிலும் அசுர கதியில் சிதறின -எறிந்து கொண்டிருந்த கட்டைகள்-
அந்த வெள்ளையன் மந்திர தந்திரம் தெரிந்தவன் போலும்! ஏதோ குழாய்களை தீயினுள் போட்டான், இடி முழக்கங்களோடு தீ சிதறிப் பரவுகிறது!
ஓடுங்கள்! ஏதோ பில்லி சூனிய வேலை இது!
டமால்!
மிரண்டு போய், உயிர் பிழைத்தால் போதும் என்று உபிட்ஸுகள் சிதறி ஓடியபோது, ஜிம்பாவும் நைஸாக அங்கிருந்து நழுவினான்--
அவர்கள் மீண்டும் நிதானத்துக்கு வந்து சிந்திக்க தொடங்கு முன் நான் வெகு தூரம் போய்விட வேண்டும்!
சில நிமிட வேக ஓட்டத்தின் முடிவில் ஒரு குறுகலான கணவாய் பாதையை வந்தடைந்தான் ஜிம்பா-
மாஸ்டர், நாங்கள் இங்கே இருக்கிறோம்- உங்களை எதிர்பார்த்து காத்துக் கொண்டு.
ஹூம், தங்கள் பேராசை காரணமாக, சல்லிக்காசு பெறாத ஓட்டை உடைசல்களை கவர்ந்து செல்லும் முயற்சியில் இதுவரை எத்தனையோபேர் தங்களை பலி கொடுத்திருக்கிறார்கள் அந்த வரிசையில் இப்போ ரேட்கிளிப்பும், காலினும்!
மாஸ்டர், புறப்படுங்கள்! சீக்கிரம் ஊர் போய் சேர வேண்டும் நாம்!
முற்றும்.


வீனஸ் கல் மர்மம்!
ஒரு இரவு வேளையில், தத்தம் இல்லங்களில் டெலிவிஷன் நிகழ்ச்சிகளை கண்டுகளித்துக் கொண்டிருந்த அமெரிக்கமக்களை திடுக்கிட வைத்தது அந்த திடீர் காட்சி மாற்றம்—
குட் ஈவினிங், நேயர்களே. ஸ்பைடர் என்ற என்னை உங்களில் பெரும்பாலானோர் அறிந்திருப்பீர்கள். பிரத்யேகமான அறிவிப்பு ஒன்றினை வெளியிட வேண்டி நிகழ்ச்சியின் இடையில் குறுக்கிட வேண்டியதாகிவிட்டது. வீனஸ் என்ற விலைமதிப்பற்ற அரிய மரகதக் கல் ஒன்றினைபற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். அதனை திருடவேமுடியாது என்று கூறும்படி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக சொல்கிறார்கள்.
அங்கே டெலிவிஷன் படப்பிடிப்பு அறையில் ஒரே ஒரு பணியாளன் மட்டும் காமெராவை இயக்கி கொண்டிருக்க, அருகே முரட்டு உருவ தடியனொருவன் ஓங்கிய கையுடன் நின்றிருந்தான். அறை முழுக்க ஏதோ ஒரு வாயு வியாபித்திருந்தது—
CB-tv
ஆனால் ஸ்பைடராகிய எனக்கு அந்த பெருமை படும் சமாச்சாரம் தனிப்பட்டதொரு அவமதிப்பாக தோன்றுகிறது. ஆகவே இன்றிரவே அந்த வீனஸ் கல்லை திருடி காண்பிக்கப் போகிறேன்.
என் சகாக்கள் அனைவரும் உணர்வற்றுகிடக்க நான் மட்டும் இந்த மயக்க வாயுவுக்கு தாக்குப்பிடித்து நிற்கிறேனென்றால் அந்த கொடியவர்கள் என் உடலில் செலுத்திய மருந்துதான் காரணமாயிருக்கும். இவர்களுக்கு எதிராய் என்னால் செய்யமுடியாது
பின்னர்
முடிந்தது! புரூட்டோ. இனி அந்த காமிராகாரனின் உதவி நமக்கு தேவையில்லை. அவனையும் உணர்விழக்க செய்! உயிருக்கு ஊறு விளைவித்துவிட வேண்டாம். அது மிக முக்கியம்.
ஆ.. ஆ.. என்!
ணங்!



என்ன ஆச்சரியம்!ஸ்பைடர் உருவ முகத்திரை அகற்றபட உண்மையில் அங்கே நின்றிருந்ததோ வேறொரு மனிதன்—
புரூட்டோ, ஐயாவோட வேட பொருத்தமும், நடிப்பும் எப்படி?எனது இந்த அதிசயமான திறமையின் முன் ஏமாறாதவர்களே இருக்க முடியாது.
என்னால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை, விக்டர். அசலாய் ஸ்பைடர் போலவே தோன்றினாய். டெலிவிஷன்பார்த்தஅனைவரும்,ஸ்பைடர் திரும்பவும் திருட்டுத் தொழிலுக்கு வந்துவிட்டதாகவே நினைப்பர்.
ஒரு மணி நேரத்திற்கு பின்,விக்டர் அவனது சகா புரூட்டோ இருவரும் தம் தலைவன் முன் ஆஜரானார்கள்—
எல்லாம்,திட்டமிட்டபடியே நடக்கின்றன மாஸ்டர். நானும்,புரூட்டோவும் நம் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாராக உள்ளோம்.
வெரிகுட்! அப்படியானால் வெகுவிரைவில் உலகின் மிகப்பெரும் மரகதக்கல் நமக்கு சொந்தமாகிடும்.
குற்றவியல் மேதை என தன்னை தானே அழைத்துகொள்ளும் அந்த மிஸ்டர் மேதாவி தன் உதவியாளர்களை பார்த்து புன்னகைத்தான்—
அந்த ஸ்பைடரும் செத்தொழிவான்
ஆம் புரூட்டோ. நம் திட்டத்தின் பிரதானநோக்கமே அதுதான். வீனஸ் கல் அபகரிப்பு இரண்டாம்பட்சமே. நமக்கு ஆபத்தாக இருந்து வரும் ஒரே மனிதன் அந்த ஸ்பைடர் அவன் அழிவு மிக முக்கியம்.



மற்றொரு மறைவிடத்தில் உண்மையான ஸ்பைடர் தன் உதவியாளர்களான ஆர்டினி, புரபஸர் பெல்ஹாம் இருவரிடமும் பத்திரிக்கை செய்தியை காண்பித்து குமுறும் எரிமலையாய் சீறினான்—
THE 'SPIDER' TO CRIME!
புரியவில்லையா ஆர்டினிமடையா? டெலிவிஷனில் தோன்றியது நானில்லை என்ற உண்மையை யாருமே புரிந்திருக்க முடியாது. நான் அந்த வீனஸ்கல்லை திருடாது போனால் ஸ்பைடரென்ற பெயர் நகைப்பிற்குரியதாகிவிடும்!
அவன் சொன்னான் என்பதற்காக நீ ஏன் திருடவேண்டும் ஸ்பைடர்?
என் போல் டி.வி.யில் தோன்றி ஏமாற்றியிருக்கிறான் ஒரு பேடி. நான் திரும்பவும் திருடவேண்டிய கட்டாயத்திற்காளாக்கி விட்டான்.
தொடர்ந்து, திரும்பியபக்கமெல்லாம் போலீஸாரால் சூழபட்டிருந்த மியூசியத்தின் முன்னால்—
என் நேரடி பார்வையில் நானே கண்காணிக்கப் போகிறேன். என் புதிய உதவியாளன் துணைக்கு உடனிருக்கட்டும். மற்ற அதிகாரிகளனைவரும் அறையின் வெளியே காவலிருங்கள்!
அதோ போலீஸ் கமிஷனர் தானே ஸ்தலத்திற்குவந்து விட்டார். உடன்வரும் அந்தத் தடித்த நபர்தான் யாரென தெரியவில்லை.


'போலீஸ் கமிஷனர்' வேறு யாருமல்ல விக்டர்தான். திரும்பவும் தன் அற்புத மான ஆற்றலை வெளிப்படுத்தும் விதமாக போலி உருக்கொண்டு வந்திருந்தான் அங்கே—
என் பலத்தின் முன் இவை எம்மாத்திரம்! தீ குச்சிகளை ஒடிப்பது போல் பிய்த்தெடு த்து விடுவேன்.
புருட்டோ இனி நீ உன் திறமையை காட்டு.


திடீரென, அறையிலிருந்த ஒரே ஜன்னலின் எஃகு கதவுகளிரண் டும் படாரென திறக்கப்பட்டன.
சரியான நேரத்திற்குதான் வந்திருக்கிறேன் நான்.
ஸ்பைடர்!
நீ-நீ உன் வலை துப்பாக்கியை பயன்படுத்தி எதிர் கட்டிடத்தி லிருந்து ஜன்னலில் வந்திறங் கியிருப்பாய். அப்புறம் கதவுக ளின் பூட்டை தகர்க்க லேசர் கதிர் பிரயோகம். சரிதானே என் யூகம்?


பாய்ந்து பிடித்தான் புருட்டோ—
அம்மாடியோவ்! என்ன அசுரபலம் இனியும் தாமதித்தால் ஆபத்து!
எல்லாமே கச்சிதமாக நடந்து வருகிறது. மரகதகல் கைக்கு வந்துவிட்டது. நீயும் புருட்டோவின் பிடியில் சிக்கிவிட்டாய்!


திடீரென புருட்டோவின் கண்கள் பயத்தில் விரிந்தன-இறுகிய கைகள் படாரென விடுபட்டன—
நான் உன்னை நசுக்கி ஆஆஹ்ற!
என் ஹிப்னாடிஸ சக்தி கொண்டு அவன் கண்களு க்கு சீறும் நாகபாம்புகளின் தோற்றத்தை உண் டாக்கினேன். இப்போது பார் அவை தன்னை விஷநாக்குகளால் தீண்டுவதாய் நம்புகிறான். கோமா என்ற நீண்ட மயக்க நிலைக்கு ஆளாகிவிட்டான்
ஆனாலும் நீ-நீ எங்களை வெற்றி கொள்ள முடியாது, ஸ்பைடர்
ஆபத்தின் கடைசி நேரத்தில் இந்த துப்பாக்கியை பயன்படுத்துமாறு என் பாஸ் உத்தரவிட்டுள்ளார். இதோ சுடுகிறேன்.
என்ன இது? உடல் கனம் குறைவது போல் உள்ளது வேறு மாற்றம் எதுவுமில்லையே!


ஆனால் மறுகணம்—
எ-என்ன ஆயிற்று எனக்கு?
நீ எடையற்ற நிலைக்கு ஆளாகிவிட்டாய், ஸ்பைடர். என் மாஸ்டரின் மாபெரும் கண்டுபிடிப்பான புவி ஈர்ப்பு எதிர்ப்பாற்றல் துப்பாக்கியின் சக்திக்கு நீ இரையாகிவிட்டாய்.
வந்த வழியே வெளியேறு, ஸ்பைடர் தொடர்ந்து மேலே மேலே வானில் சென்று கிரகங்களின் சுற்றுப்பாதையை அடைந்து, நிரந்தரமாய் பூமியை சுற்றி கொண்டே இருப்பாய். ஹா-ஹா-ஹா!
மனித பிசாசே!
ஆனால், ஸ்பைடரை வெளிவானை நோக்கி தள்ளுவதற்காக விக்டர் தன் உடலை ஜன்னலை ஒட்டி சாய்த்த போது—
குட்பை, ஸ்பைடர் உன் கதை முடிந்-ஆ-ஆஹ்!
மியூசியத்தின் திருட்டு தடுப்பு நடவடிக்கைகளில் ஒன்றாய் மின்பாய்ச்சப்பட்டிருந்த ஜன்னலில் சாய்ந்ததால்தான் உனக்கு இந்த கதி நண்பனே! நான் ரப்பர் உடுப்பு அணிந்திருப்பதை நீ அறியமாட்டாய்.



கொடியவனுக்கு தண்டனை கிடைத்துவிட்டது. ஆனால் என்னை காப்பாற்ற அது உதவவில்லையே. ஒருவேளை என் வலைதுப்பாக்கி உதவக்கூடும்.
ஆஆஹ்ஹ்!
தன் அதிஅற்புத வலைதுப்பாக்கி கொண்டு எஃகினும் வலிய இழைபின்னலை உருவாக்கி இரண்டு கட்டிடங்களிடையே அந்தரத்தில் தொங்கினான் ஸ்பைடர்-
எடையற்ற தன்மையிலிருந்து விடுபட வழி செய்ய வேண்டுமே. புவிஈர்ப்பு எதிர்ப்பு சக்தியை உருவாக்குபவை பிரத்யேகமான ஒருவகை உலோகதுகள்கள். அதனை முறியடிக்க எனன செய்யது? ஓ, விடைகிடைத்துவிட்டது
அதோ. ஸ்பைடர். ஒரு காலத்தில் பெரிய குற்றவாளியாயிருந்து பின் நல்லவனாக மாறியவன். ஆனால் இப்போதோ திரும்பவும் பழையதொழிலுக்கே வந்துவிட்டான போலும்!
ரேடியோ தொடர்பு கருவியை உடன கொண்டு வந்தது நல்லதாய் போயிற்று;
ஆர்டினி, ஸ்பைடர் பேசுகிறேன! கவனமாக கேள்! உடனடியாக காந்த சக்தி துப்பாக்கியை கொண்டுவா!


அடுத்த ஐந்தாவது நிமிடம், அருகாமை கட்டிடமொன்றின் ஜன்னல் வழியே ஸ்பைடரின உதவியாளன் விநோத துப்பாக்கி ஒன்றால் ஸ்பைடரை குறிபார்த்து சுட்டான—
தலைவரே, இதோ நீங்கள் சொன்ன படியே செய்து விட்டேன.
ஓ.கே. காந்தசக்திக் கதிர் என் உடலில் செலுத்தப்பட்டு புவி ஈர்ப்பு எதிர்ப்பு சக்தி துகள்களை ஈர்த்து என்னை விடுபடச் செய்துவிட்டது!
அடுத்து என்ன செய்ய போகிறோம் தலைவரே?
நம் கோட்டைக்கு திரும்ப போகிறோம். அங்குசென்று ஆற அமர யோசிக்க வேண்டியதிருக்கிறது.
தன் இருப்பிடம் சென்றடைந்ததும் வலைத் தொட்டிலில் சாய்ந்த வண்ணம் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான் ஸ்பைடர்—
இதில் பிரச்னை எதுவும் இருப்பதாக தோன்றவில்லை எனக்கு. இந்தவீனஸ் கல்லை திரும்ப ஒப்படைத்து நடந்த முழுக்கதையையும் போலீஸிடம் கூற வேண்டியதுதான். விஷயம் எளிதாய் முடிந்துவிடும்.
ஆனால் எனக்கு பெரிய எதிரி ஒருவன் உருவாகியிருக்கிறானே, ஆர்டினி. மின் அதிர்ச்சிக்காளாகி செத்தானே விக்டர், அவன் தன் பாஸ், மிஸ்டர் மேதாவி என குறிப்பிட்டான். அவனை எங்கே தேடி கண்டுபிடிப்பது, ம்ம்-


பேஷ், அதற்கு ஒரு வழி இருக்கிறது. நான் கோமா மயக்கத்திலாழ்த்திய புருட்டோ மருத்துவமனையில் கிடக்கிறான், அவன் மூலமாக இருப்பிடத்தை அறியமுடியும்!
நேரத்தை வீணாக்காமல் மருத்துவமனைக்கு ஸ்பைடர் சென்று...
மயக்க நிலையிலிருந்து விடுபட்டு விட்டான். இதோ தன் தலைவனைக்காண கிளம்பிவிட்டான் புருட்டோ.
GENERAL HOSPITAL
புருட்டோவை பின் தொடர்ந்து துறைமுகம் வந்தடைந்தான் ஸ்பைடர்—
மொட்டை தலையன் விசைபடகில் அந்த சொகுசு கப்பலை நோக்கி விரைகிறான். நான் எனது ஹெலி-கார் வாகனத்தை வரவழைக்க வேண்டும்.
21


ஸ்பைடரின் வியத்தகு வாகனமான ஹெலி-கார் வெகுவிரைவில் அந்த உல்லாச கப்பலின் தளத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தது—
எனக்காக காத்திரு! திரும்பி விடுவேன், நான்.
சீக்கிரமே திரும்பிவிடுவீர்கள் என்பதில் எனக்கு சந்தேகமே கிடையாது பாஸ்.
தளத்தை கடந்து உள்ளே செல்ல முயன்ற போது ஸ்பைடரை நோக்கி பாய்ந்தது அந்த தடித்த உருவம்-
மீண்டும் என்னை உன் ஹிப்னடிசத்தால் வசப்படுத்த முடியாது ஸ்பைடர். இம்முறை உன் கண்களை நான் ஏறிட்டு பார்க்கப் போவதில்லை.
என் திறமையில் நீ கொண்டிருக்கும் பயம் அர்த்தமுள்ளதுதான் புருட்டோ.



புரூட்டோ நிலைதடுமாறி சாய அவனது கனம் தாங்காத தளப்பலகைகள் உடைந்து நொறுங்கின—
ஆனால் ஒன்றை நீ மறந்து விட்டாய். என் திறமைக்கு இணையான ஆயுதங்களும் என் வசம் உண்டு!
ஆஆஹ்! பசை போல ஒட்டி-ஓ, கைகளை விரிக்கக்கூட முடியவில்லையே!
க்ராஷ்!
ஆஆஹ்ஹ்!
உன் மாஸ்டரை தேடிப் போகிறேன், நீ நன்றாக தூங்கு, புரூட்டோ!
அதிக நேரம் தேடியலைய வேண்டிய சிரமத்தை தரவில்லை அந்த மாஸ்டர்—
மிஸ்டர் மேதாவி என் பவன் நீதானே?
உள்ளே வா ஸ்பைடர்! கதவு தாழிடபடவில்லை தள்ளித் திறந்து வா!


கதவினை ஒட்டி உள்பக்கம் ஒரு பெரும்பள்ளம். அத னுள் நெருக்கமாக நடப்பட்டகூரிய முனை ஈட்டிகள்... இமைப்பொழுதில் ஆபத்தை உணர்ந்து சடாரென தாவினான் ஸ்பைடர்—
இத்தகைய பொறி அமைப்பெல்லாம் மிகப் பழமையான உத்தி.புது மையானமுறையில்உன் வேலைகளை காட்டுவாய் என எதிர்பார்த்தேன் மேதாவியே!
ஓ,அப்படியா!என் விருந்தாளியை நிச் சயம் ஏமாற்ற மாட்டேன்.
கொடியவன்,கையருகே இருந்த பட்டன் ஒன்றை அழுத்தினான்—
வாழ்வின் கடைசி வினாடிகளை எண் ணிக் கொண்டிருக்கும் நீ இந்த கொலைகருவியின் இயக்கத்தை ப்பாயென என்னுகிறேன் ஸ்பைடர்.
முயற்சிபண்ணிப் பார்,அதில் தவ றில்லை.ஆனால்...
சுவரின் இருபக்கமுமிருந்து குத்து ஈட்டிகள் பொரு த்தப்பட்ட எஃகுத் தகடுகள் வேகமாய் நெருங்கி வந்தன—
மிக கச்சிதமாக வேலை செ ய்யக்கூடியது என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்துகொள்வாய்.


மறுகணம் தன் வலைத்துப்பாக்கியால் மேலிருந்த விளக்குநோக்கிச் சுட்ட ஸ்பைடர்...
இதைவிட சிறந்த முறைகள் கைவசமிருந்தால் பயன்படுத்திப் பார்த்திருக்கலாம் நீ!
ஓ, நிச்சயம் உண்டு என் சிலந்தி நண்பனே!
அருகாமையில் நெருங்கி வந்த ஸ்பைடர்-
பதிலுக்கு என் திறமையை காட்டும் விதமாய் முஷ்டிப் பிரயோகம் ஒன்றை வாங்கிக்கொள்.
கொஞ்சம் பொறு -இன்னொரு பட்டனை அழுத்திக் கொள்கிறேன்.
திடீரென மிஸ்டர் மேதாவி நான்கு உருவமாய்க் காட்சி தந்தான்—
நம் இருவருக்கும் மத்தியில் போலி உருவங்களை தோன்ற செய்யும் திரை ஒன்றை உருவாக்கியிருக்கிறேன். என் நான்கு உருவங்களை பார்- அதில் ஒன்றுதான் உண்மையானது உன்னால் அதை அடையாளம் காட்ட முடியுமா ஸ்பைடர்?
என் கணிப்பில் தவறு நேர்ந்துவிடக்கூடாது.


ஊஊஊ !
ஹும்!
நீதான் உண்மையான நபர்! கெட்டிக் காரத்தனத்தை காட்டும் மமதையில் இருந்த நீ குரல் காட்டிகொடுத்து விடும் என்பதை உணராமல் பேசி விட்டாய், முட்டாளே!
போலீஸிற்கு தகவல் தந்தாகிவிட்டது. இனி உன்னை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். என் பழிவாங்கும் நட வடிக்கை இத்தோடு முற்றுப்பெற்று விட்டது.
மறுநாள்—
நாம் இந்நாட்டின் மதிப்புற் குரிய பிரஜைகள்தான் என்பதை செய்தித்தாள்கள் தெளிவுபடுத்திவிட்டதல் லவா, தோழர்களே!
அந்தச் செய்திக்கு ஆதாரமே உங்கள் சாகஸச் செயல் தானே பாஸ்!
NEW YORK
THE STONE OF VENUS RETURNED
முற்றும்.



டிராகன் நகரம்!
ஆஸ்டினில் உள்ள டெக்ஸாஸ் ரேஞ்சர்களின் தலைமையகத்தில் ஒரு ஜூன் மாத மதியம்-
ஹூம்- இரண்டு ரேஞ்சர்கள் பலிகொள்ளப்பட்டிருப்பது வேதனைக்குரியது!
உன்னை நான் வரவழைத்தது ஏனென்று புரிகிறதா?
இங்குள்ள ரேஞ்சர்கள் அனைவரும் டெக்ஸாஸ் நகரில் அட்டூழியம் புரிந்துவரும் சதிகாரர்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள்-மறுபடியும் இவர்களில் யாரையேனும் அங்கே அனுப்பினால் கிளீஸனுக்கும், மார்ட்டனுக்கும் நேர்ந்த கதிதான நேரிடும்!
யெஸ்!
என்னை நீங்கள் வரவழைத்த நோக்கம் பற்றி இங்கே வேறு யாருக்கும் தெரியாதில்லையா?
யாருக்குமே தெரியாது- நீ சந்தேகிக்கிற மாதிரி எதிரிகளுக்கு உளவு சொல்லும் துரோகி யாரும் இங்கே கிடையாது!
அப்படியானால் கிளீஸனும் மார்ட்டனும் பணியை தொடங்குவதற்கு முன்பாகவே கொல்லப்பட்டுவிட்டது எப்படி?
புதிரான விஷயம்தான் - ஆனால் அவர்களுக்கு துரோகமிழைக்கப்படவில்லை என்பது மட்டும் உறுதி!
போகட்டும்-இந்தப் பணியில், கட்டுப்பாடு ஏதுமின்றி சுதந்திரமாக நான் இயங்கலாமில்லையா?
அதெப்படி? ஒரு ரேஞ்சரின் அதிகாரத்திற்கு வரம்பு ஒன்று உண்டல்லவா?


ஆனால் டெக்ஸாஸில் சட்ட ஒழுங்கை நிலைநாட்ட அந்த அதிகாரம் போதாது என்று உங்களுக்கே தெரியும்!
வாஸ்தவம்தான்!
அந்த விஷமிகளுக்கு மேல்மட்டத்தினரின ஆதரவு இருக்குமேயானால், சிக்கல் விளையுமே என்று தான் யோசிக்கிறேன்
அத்தோடு, அரசாங்கத்தில் உள்ளோரின் மனக் கசப்பை சம்பாதித்துக் கொண்டு விடலாகாது-
அப்படியானால் எனக்கு சரிப்பட்டு வராது இந்தப் பணி!
பலியாடுகள் பட்டியலில் மூன்றாவதாக இடம் பெற எனக்கு இஷ்டமில்லை!
எந்த சட்ட வரம்பைப் பற்றியும் அக்கறை கொள்ளாமல் துப்பாக்கியை முழக்கும் எதிரிகளுக்கு மத்தியில் நான் மட்டும்-
பொறு-சுதந்திரமாக இயங்க உன்னை நான் அனுமதித்தால், பிறகு, விளைவுகளுக்கு நீ என்னை சுட்டிக் காட்டக் கூடாது!
நான் ஒரு ரேஞ்சர் என்று கூட வெளிப்படுத்திக் கொள்ள மாட்டேன்-போதுமா-கர்னல்?
சம்மதம்!
சில நிமிடங்களுக்குப் பின் -
இதை உரிய விலாசத்தில் சேர்த்து விடு!
ஓ-ஷ்யூர்!
ஆனால்-
ஹம்ம்



கர்னலின் தந்திரம் புரிகிறது! வேறொரு பிரிவைச் சேர்ந்த ரேஞ்சரை வரவழைத்து அனுப்புகிறார்!
பயலை வழியிலேயே மடக்கிவிட வேண்டும்!
இதற்கிடையே-
டெக்ஸிடமிருந்து வந்திருக்கிறது!
பிரித்துப் படியுங்கள்!
கால் மணி நேரத்தில் கிளம்பி ஹூஸ்டன் சாலை வழியே செல்லப் போகிறேன்! என்னை யாரேனும் பின் தொடரக்கூடும்!
TEX.
கிளம்புவோமா!
ஒவ்!
ரெடி!
டெக்ஸ் சந்தேகப்பட்டது போலவே-
தம்பி-இதுதான் உனக்கு இறுதிப் பயணம்!
அதோ போகிறான்-ஹூஸ்டன் சாலையில்-



சில நிமிடங்களுக்குப் பின் அந்த ஒற்றன் டெக்ஸை பின் தொடர்ந்தான்-
அவனுடைய நடவடிக்கைகளை மூன்று ஜோடி விழிகள் தொடர்ந்து கண்காணிப்பதை அறியாமல்!
டெக்ஸுக்கு மோப்ப சக்தி அபாரம்!
சந்தேகமில்லாமல்!
அன்று மாலை-
இரவை இங்கே கழிக்கப் போகிறான் போலும். அவன் படுத்து உறங்கும்போது வெகு சுலப-மாக கணக்கை முடித்து விடலாம்!
அவனும் குதிரையை விட்டு இறங்குகிறான்!
நம் அடுத்த நடவடிக்கை என்ன?
நாமும் கீழிறங்கி வயிற்றை நிரப்பிக் கொள்வோம். பிறகு, அதிரடி தாக்குதலில் இறங்குவோம்!
குட்!



இருள் நன்ருக கவிழ்ந்த பின்-
ம்ம்- இது தான் தருணம்!
இன்னும் தூங்கவில்லே போலும்! ஆனுலும் இம்-மாதிரியான ஆபத்தை கொஞ்சமும் எதிர்பார்த்-திருக்க மாட்டான்!
தன் துப்பாக்கியை உறையிலிருந்து உருவி எடுத்தான் அந்த ஆள்-
அப்போது-அங்கே நிலவிய அமை தியை கிழித்துக் கொண்டு உரத் துக் கிளம்பியது ஓர் ஆணே-
அப்படியே-நில்-அசையாதே!
ஆனுல், பயல் முட்டாள்தனமான முயற்சியில் இறங்க முற்பட்டான்-
டமீல்!
ஆவ்!
உன் புத்திசாலித்தனம் போதாது!
சைத்தானே!



அழுத்தமான ஆள் தான்-
இல்லாமலா கைத்துப்பாக்கியில் கை வைப்பான்-
இவன் போன்ற நச்சுப் பாம்புகளை அடித்தால் மட்டும் போதாது-தலையை கொய்யாதவரை பிடுங்க வரும்!
தீயை மூட்டு கிட்! டெக்ஸ் சீக்கிரமே வந்து சேருவார்!
குதிரைகளை மடக்கி கொண்டு வருகிறேன்!
பத்து நிமிடங்களுக்குப் பின்-
உயிரோடு பிடித்திருந்தால் உபயோகமாக இருந்திருக்கும்.
இது அவனுடைய பையில் இருந்தது.
ப்ரெட் இங்கேயெல்லாம் நல்ல படியாக நடந்துவருகிறது. ரீகன் தெரு முனையிலுள்ள மது பானக்கடையை மானுவல் வாங்கத் தீர்மானித்திருக்கிறார். துப்பறிய வரும் பயல்களை வழக்கம் போல் அங்கேயே மடக்கிப் போடு-அடுத்த மாதம் உனக்கு மாற்று நபரை அனுப்பி வைக்கிறேன்- ஜிம்-
வேறு எதுவும் கிடைக்கவில்லையா?
இல்லை- இந்த கடிதம் மட்டும் தான்!
சரி- தொலைகிறது!


டெக்ஸாஸில் நம் முதல் காரியம்-அந்த மானுவல் யாரென்று கண்டறிவது!
அந்த பெயரில் நிறையப் பேர் இருந்துவிட்டால் கஷ்டம்தான்!
ரீகன் தெரு முனை யிலுள்ள கடையை தூண்டில் புளு-வாக்கி விட்டால் சுலபமாகி விடும்!
இரு தினங்களுக்குப் பின் டெக்ஸ்வில்லர், கார்ஸன், கிட் மூவரும் டெக்ஸாஸ் நகரினுள் பிரவேசித்தனர்-
டைகர் மட்டும் நகருக்கு வெளியே, டெக்ஸிடமிருந்து மறு உத்தரவுக்காக காத்து நின்றான்-
அந்த மதுபானக் கடையை கண்டு-பிடிப்பதில் சிரமம் இருக்கவில்லை-
REGAM STREET
வாருங்கள்- உள்ளே போகலாம்!
LONGHORN
SALOON
ஊஹூம்- இந்த விலைக்கு முட்டாள் கூட சம்மதிக்க மாட்டான்!
நல்ல பேரம்- பேசாமல் சம்மதித்து விடு!
இந்த கடைக்கு இரண்டாயிரம் டாலர் நல்ல பேரமா?
வீம்பு பண்ணாதே- பிறகு வருத்தப் படுவாய்!




● இன்று உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழி சீனமொழிதான். 95 கோடி மக்கள் இன்று சீனமொழி பேசுகிறார்கள்.

● ஆண் குதிரைக்கு 40 பற்கள் உண்டு. ஆனால் பெண் குதிரைக்கு 36 பற்களே உண்டு.

● சராசரியாக ஒரு துளி இரத்தம் நம் உடம்பில் நிமிடத்திற்கு மூன்று பயணங்களை நிறைவேற்றுகிறது.

● ஒரு டன் தங்கம், பூமியின் உள் மையத்தில் என்ன நிறை இருக்கும்?

பூமியின் மையத்தில் தங்கம் தான் என்றில்லை, எந்தப் பொருளுக்குமே எடை இராது! எடைக்குக் காரணமான புவிஈர்ப்பு சக்தி, அந்த இடத்தில் எல்லா திசைகளிலும் ஒரே சீராக இருப்பதால் தான்!

● 'பைஃபோகல்' கண்ணாடியைக் கண்டுபிடித்தவர் பெஞ்சமின் பிராங்க்ளின்.

● தன்னுடைய உருவத்தின் பரிமாணத்தோடு ஒப்பிட்டு நோக்கும்போது அதிக மூளை உடைய பிராணி - **எறும்பு!**



தூக்கி தெருவில் எறி!
ஓ-கே!
?
!
விவரமான ஆசாமி என்ருல் உடனே நீ நகரைவிட்டு வெளி யேறி ஓடிப்போய் விடுவாய்!
எதற்காக?
இங்கே ஏதும் தொத்து வியாதி பரவியிருக்கிறதா-என்ன?
நீ செய்திருக்கும் காரியம் எப்படியொரு எதிர்விளைவை ஏற்படுத்தப் போகிறதோ?
சரி- என்ன கேட்டீர்கள்-மூன்று ஐஸ் பீரா?
ஆமாம்- கதவோரம் உள்ள மேஜைக்கு கொண்டு வா!
பீரை உறிஞ்சத் தொடங்கிய போது கையில் நீட்டிய துப்பாக்கியோடு புயல்-என உள்ளே பாய்ந்தோடி வந்தான் ஜிம்.
அந்தப் பன்றிப் பயல் எங்கே?


இதோ-
இங்கே!
டுமீல்!
ஆவ்!
டிங்!
ஏதாவது சொல்ல
வந்தாயோ?
ஆமாம்!
அஸ்தமனத்திற்குள் நகரைவிட்டு
நீ ஓடிப்போகாவிடில் உதயத்
தைக் காண உயிரோடு இருக்க
மாட்டாய்-
அடி சக்கை!
இனி- நான்
சொல்கிறேன்-
கேட்டுக் கொள்!
எண்ணி முப்பதே வினாடிக்குள்
ஒழிந்து போய் விடு- இல்லை-
யேல் எலும்பை எண்ணி
விடுவேன்!
நாய்!
நாய்!
என் துப்பாக்கியை
எடுத்துக் கொள்ளலாமா?
தாராளமாக!
ஜிம் குனிந்து துப்பாக்கியை எடுக்க
கையை நீட்டிய போது-
!!?
டுமீல்!


குரோதத்தோடு திரும்பி முறைத்த ஜிமமைப் பார்த்து கிண்டலாக புன்னகை செய்தார் டெக்ஸ்-
முப்பது விநாடிகள் துரிதமாக கழிந்து விட்டன - இல்லையா?
வெளியே பாய்ந்தான் ஜிம்-
பாடம் கற்பிக்காமல் விடமாட்டேன்!
வெறி பிடித்தவன் போல் ஓடுகிறான்!
தயவு செய்து உடனே போய் விடுங்கள் ஜிம் திரும்பி வந்தான் என்றால் என்ன விபரீதம் ஆகுமோ?
திரும்பி வர பயலுக்கு தில் இருக்குமா?
தனியாக வர மாட்டான்!
ஆட்டம் சூடு பிடிக்கிறதா?
என் கடை நாசமாகிப் போகும்!
இந்த இடம் ரொம்ப பிடித்திருக்கிறது எங்களுக்கு!




● நம்முடைய முகத்திலுள்ள புருவங்கள் வெறும் அழகுக்காக மட்டுமா?

இல்லை!

நெற்றி வியர்வை கண்ணில் வழிந்து பார்வையை மறைக்காமல் இருக்க அரணாகநிற்கிறது புருவம்.

● திமிங்கலம் தொடர்ந்து 20 நிமிடங்களுக்குமேல் நீரின் அடியில் இருக்க முடியாது. அது நீரில் வாழ்ந்தாலும் குட்டி போட்டு பால் கொடுக்கும் பிராணியாகும் - மீனின் வகை அல்ல அது.

● நீர் அதிகச் சூடாக இருப்பது அதுகொதிப்பதற்கு முன்னுலா - பின்னுலா?

முன்னுல்தான் அதிக சூடாக இருக்கும். கொதிக்கத் தொடங்கியதும் சூடு குறையத் தொடங்கி விடுகிறது.

● நாம்சிந்தும்கண்ணீர்கரிக்கும். காரணம்- அதில் கரைந்துள்ள உப்புச் சத்து. நாம் துன்பத்தில் சிந்தும் கண்ணீரிலும், அதிக மகிழ்ச்சியில் சிந்தும் கண்ணீரிலும் உப்புச் சத்து ஒரே அளவாக இருப்பதில்லை. ஆனந்தக் கண்ணீரில் உப்புச் சத்து மிகமிகக் குறைவு!


வாங்கிக் கொண்டு-போய் விடுவோமா-டெக்ஸ்!
வேறொரு உபாயம் இருக்கிறது!
இரண்டாயிரத்திற்கு கடையை நான் வாங்கிக் கொள்கிறேன். பார்மேனாக நீங்கள் தொடர்ந்து இங்கே இருக் கலாம். லாபத்தில் பங்குண்டு!
நிஜமாகவா சொல்கிறீர்கள்?
ஒன்றும் பேசாமல் பர்ஸிலிருந்து பணத்தை எண்ணி எடுத்து மேஜை மீது போட்டார் டெக்ஸ்-
கனவல்லவே!
சம்மதம்தானே?
லாபத்தில் பங்கு வேறு?
டெக்ஸ் வில்லர் வாக்குத் தவற மாட்டான்-பேனாவும் காகித மும் கொண்டு வா-சட்டபூர்வ மான ஒப்பந்தம் எழுதிக் கொண்டு விடுவோம்!
இதோ!
இதற்கிடையே, அடுத்த தெருவிலிருந்த பாரடைஸ் மதுபானக் கடையில்-
அந்தப்பயலை ஒழித்துக்கட்ட எனக்கு ஒத்துழைப்பு தாருங்கள்!
இதோ, வருகிறார்!
கிளம்புங்கள்- கையை காலை முறித்து அனுப்புங்கள்!
இல்லையேல் அவமானம்!
39


ஆவேசமாக வெளிக் கிளம்பியது அந்தக் கும்பல்-
லாங்ஹார்ன் மதுபானக் கடையை நோக்கி அவர்கள் விரைவதை ஜனங்கள் கவலையோடு பார்த்தனர்-
?
யாருக்கோ போதாத காலம்!
இதற்கிடையே,
போதுமா?
அப்பாடா- இப்பொழுதுதான் நிம்மதியாக இருக்கிறது!
பீர் அருந்தி கொண்டாடி விடலாம்!
செலவு என்னுடையது!
டாம்! ஜிம் தன் சகாக்களோடு இங்கே வந்து கொண்டிருக்கிறான்!
விலகு- நான் கவனித்துக் கொள்கிறேன்!
சொன்னேனில்லையா?
ம்ம்- இவர்களுக்கு போதாத காலம்!


வெளியே-
ஓடாதே- அந்த மூன்று முட்டாள்களும் உள்ளே தான் இருக்கிருர்களா?
வாயை திறந்து சொல்லேண்டா?
ஆ - ஆமாம்!
முரட்டுத்தனமாக அவனை தள்ளிவிட்டு உள்ளே புகுந்தது அந்தக் கும்பல்-
விலகித் தொலை-சனியனே!
பிரயோஜனப் படாது! வேடிக்கை வேண்டுமாளுல் உள்ளே நுழையுங்கள்!
ம்-ஆரம்பிப்போமா?
டுமீல்!
டுமீல்
உயிர் மீது ஆசையிருந்தால் மரியாதையாக வெளியே வா-கைகளை உயர்த்தியவாறு!



ஒன்றிரண்டு எலும்புகளை மட்டும் முறித்து விட்டு அனுப்பி விடுவேன்!
அந்த ஜன்னல்!
டுமீல்!
டுமீல்
பின் வாங்குங்கள்-தெருவின் மறு பக்கம் போவோம்!
டுமீல்!
டுமீல்
வீழத்தி விட்டேன்!
டுமீல்
ஆவ்!
அவர்களுடைய கவனத்தை திசைதிருப்பி வை-பின்புற வழியாக உள்ளே நுழைய முடியுமா என்று பார்க்கிறோம்!
சரி-ஓடுங்கள்!
இதற்கிடையே-
ஷெரீப்! ரீகன் தெருவில் பயங்கர துப்பாக்கிச் சண்டை!
ரொம்ப மோசமோ-பிப்?


ஆமாம்-பாரடைஸிலுள்ள கும்பல் சம்பந்தப்பட்டிருக்கிறது.
ஓகோ-
வரவர அவர்கள் செய்யும் அட்டூழியம் தாங்க முடியவில்லை-அவர்களை ஒழித்துக் கட்ட வழியும் தெரியவில்லை!
முடிந்ததை செய்வோம்-ஷெரீப்!
ஷ்யூர்! வா போய் பார்ப்போம்!
அங்கே-
டூமீல்! டுமீல்!
ஒருவனை தவிர மற்றவர்கள் எங்கே தொலைந்தார்கள்?
முக்கியமான பாயிண்ட்!
டாம்-பின்புற வாசல் உண்டா?
கிடையாது!
இதற்கிடையே, ஜிம்மின சகாக்கள் கட்டிடத்தின் மறுபுறம் ஓடினர்-
4


பின்னர்-சரமாரியாக தோட்டாக்கள் பறந்தன-
டெக்ஸ்-நமக்கு நேர் எதிரே இருக்கிறார்கள்!
ஆமாம்!
கமான்-கொன்று குவிப்போம்!
நான்கு ஆசாமிகளும் லாங்ஹார்னை நோக்கி ஓடினர்-எதிரடியாக தோட்டா ஏதும் வராதது கண்டு தன் மறைவிடத்திலிருந்து வெளி வந்தான் ஜிம்.
திடீரென்று-சீறிக்கொண்டு வந்தன-தோட்டாக்கள்!
டுமீல்!
ஆவ்வ்!
அஹ்!
ஐயோ!


வாருங்கள்-இந்தப்பக்கமாக-
நிறையப் பேர் காத்திருக்கி
றார்கள்-தயாராக!
ஜிம் என்னைக்
காப்பாற்று!
ஓடிவா-இந்தப்
பக்கம்!
ஆவ்!
ஓடு!
உயிர்பிழைக்க
அது ஒன்றுதான்
வழி!
போய்த் தொலைகிறார்கள்-விடு-
கார்ஸன்!
என்னமாய் ஓடுகிறான்கள்
பார்!
ஹே-போக்கர் ஜிம்மும்-நெட்
கார்னெல்லும்!
ஏதோ பேயைக் கண்டுவிட்டவர்கள்
மாதிரி அல்லவோ ஓடுகிறார்கள்-


இதற்கிடையே-
ஆட்டம் முடிந்து விட்டது டாம்- வெளியே வா!
நீங்களும்தான்- வந்து கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுங்கள்!
செலவு என்னுடையது!
சரி- பாட்டில்களை எடு!
விலகு!
இங்கே என்ன நடந்தது?
ஓ-ஷெரீப்! இப்போது இங்கே தேவை-ஷெரீப் அல்ல-ஒரு சவ அடக்கம் செய்பவன்!
சரியான பதில் கிடைக்காது- ஷெரீப்!
சாட்சி சொல்கிறவன் மறுநாள் நடமாட முடியாது! நிலவரம் அப்படி!
தோட்டாக்களின் முழக்கத்தை கேட்டோம்- அவ்வளவுதான்!
ஓகோ!
46



இங்கே விழுந்து கிடக்கிறவன் களை வீழ்த்திய தோட்டாக்கள் அந்தக் கடைக்குள்ளிருந்துதான் வந்தன- அங்கே போய் விசாரித்துப் பாருங்கள்!
அதுவும் சரிதான்!
வாருங்கள் உள்ளே போவோம்!
யெஸ்!
சவ அடக்கம் செய்கிற ஆளுக்கு தகவல் அனுப்பி இந்த உடல் களை அப்புறப்படுத்தச் சொல்லுங்கள்!
தகவல் போயிருக்கிறது!
இன்னொரு ரவுண்டு கொடு- இம்முறை செலவு என்னுடையது!
ஷ்யூர்-
இந்தாருங்கள்!
ஹம்ம்-வெற்றிக் களியாட்டம் போலிருக்கிறது!
அப்படியே திரும்பு— துப்பாக்கியை உருவ முயற்சிக்காதே!
ஓ- சட்ட பாது காவலர்களா?
?!


டெக்ஸ் கில்லர்
துப்பாக்கியை நீட்ட இங்கே அவசியமேயில்லை- ஷெரீப்!
வெளியே நடந்த விபரீதங்களுக்கு யார் பொறுப்பாளி?
அவர்கள் ஏற்கனவே செத்துப்போய் விட்டார்கள்!
என்ன சொல்கிறாய்-நீ!
புரியவில்லை? கடைமீது தாக்குதல் நடத்தினார்கள்- பதிலடி கொடுத்தோம்!
இதை நான் நம்ப வேண்டுமாக்கும்?
வார்த்தைகளை அளந்து பேசுங்கள் ஷெரீப்!
என்னையே மிரட்டுகிறாயா?
மிரட்டல் இல்லை! ஆலோசனை!
இன்னும் ஒன்றிரண்டு சொல்ல விரும்புகிறேன் துப்பாக்கியை உறையில் போடுங்கள்!


துப்பாக்கியை நீட்டிக்கொண்டு அலைகிற நபர்களை எனக்குப் பிடிக்கிறது!
கண்ணில் பட்டவர்களை சுட்டு வீழ்த்துகிறவர்களை எனக்குப் பிடிக்கிறதில்லை!
ஆனால், போக்கர் ஜிம்மும் அவனுடைய சகாக்களும, யோக்கியமான மூன்று பிரஜைகளை அநியாயமாக கொன்றால் தப்பில்லை போலும்!
ஒருவேளை அவர்கள் உங்களுக்கு வேண்டப்பட்டவர்களோ!
வாட்?
ஷெரீப்பிடம் பேசுகிற பேச்சா - இது?
நிறுத்துங்கள்! நேர்மையான ஷெரீப்பாக இருந்தால் இந்நேரம் ஜிம்மை தூத்திக் கொண்டல்லவா போயிருக்க வேண்டும்!
அங்கே போய் விசாரிப்பதை விட்டு விட்டு இங்கே துப்பாக்கியை நீட்டிக் கொண்டு நிற்கிறீர்கள்!
வரம்பு மீறிப் போகிறது உன் பேச்சு!
அஹ்! உங்களோடு பேசி நாக்கு வறண்டதுதான் மிச்சம்-
தண்ணீர் பருகப் போவது போல் டம்ளரை உயர்த்திய டெக்ஸ் சட்டென்று அதை நழுவ விட்டார்-
பிறர் கவனம் திசைதிருப்பியிருந்த கணத்தில பளிச்சென்று தன் ரிவால்வரை உருவி எடுத்தார்-
?!?
டமால்
49



தற்கொலை செய்து கொள்ளும் ஆசை உங்களுக்குக் கிடையாது என்று நம்புகிறேன்!
கெடுத்தானே பாவி!
உங்களுடைய உதவியாளர் சொல்கிறபடி செய்யுங்கள் ஷெரீப்- விபரீதமாக எதுவும் நிகழ்ந்து விடாது!
துப்பாக்கியை உறையில் போடுங்கள் ஷெரீப்!
சற்று தயங்கிய ஷெரீப் பின்னர் துப்பாக்கியை உறையிலிட்டார்-
இதை என்றென்றும் மறக்க மாட்டேன்!
உளருதீர்கள்!
இன்னும் இரண்டு கிளாஸ் தயார் பண்ணு டாம்!
இதோ- மிஸ்டர் கில்லர்!
கில்லர்- விநோதமான பெயர்!
ஆனல்-எனக்குப் பிடித்தமானது!
இவர் மிஸ்டர் பார்ஸன்- அவன் என் மகன் கிட்!
பார்ஸன்?
யெஸ்!



அமைதியை விரும்பு-கிறவன் நான்!
பார்த்தால் அப்படி தெரியவில்லையே?
நான் பர்குஸன்- இவர் என் டெபுடி- பிப் டர்பின்!
ஹாய்!
சரி- எப்படித்தான் தொடங்கியது?
டாமை கேளுங்கள்?
நடந்ததை உள்ளபடி விபரமாக எடுத்துச் சொல்- டாம்!
ஓ- சொல்கிறேனே!
டெக்ஸ் உள்ளே வந்தது தொடக்கம், ஷெரீப் . வந்து சேர்ந்தது வரை அங்கே நடந்ததை விவ-ரித்த டாம்,
டெக்ஸ் கடை-யை விலைக்கு வாங்கியிருப்பதையும் சொன்ஞன்-
ம்ம்ம்...!
கில்லர்- டாம் சொன்னதை நம்புகிறேன். ஆனல் ஒரு சிறு புத்திமதி!
என்ன?
கணமும் தாமதியா-மல் நகரை விட்டு போய் விடு!
இங்கிருப்பவர்களை உனக்கு அவ்வள-வாக தெரியாது!
அப்படியா?


இங்கே நடந்தது ஒரு சாம்பிள்! தொடர் விளைவாக இனி என்ன வேண்டுமானாலும் நடக்கக்கூடும்!
ம்ம்!
குற்றவாளிகளை பிடிக்க திராணி இல்லாமல், அப்பாவிகளை ஊரை விட்டு ஓட யோசனை சொல்கிற நீங்களெல்லாம் ஒரு ஷெரீப்-?
கில்லர்- உன் பேச்சுத் தொனி எனக்குப் பிடிக்கவில்லை!
சட்ட ஒழுங்கை பராமரிக்க என்னாலானதை செய்கிறேன் ஆனால் நானென்றும் மந்திர வாதி அல்லவே!
நானென்றும் அற்புதம் நிகழ்த்தச் சொல்லவில்லையே?
ஜிம்மை உள்ளே தள்ளுவது கடினமான காரியம் ! ராட்சஸ அளவிலான கொடிய பற்சக்கரம் ஒன்றின் ஒரு பல்! அவன்!
SALOON
அந்த ராட்சஸ சக்கரம் உனக்கெதிராக எந்த வினாடியும் சுழலத் தொடங்கலாம்!
அந்த சக்கரத்தின் இயக்கத்தை நிறுத்த சட்டபாதுகாவலரான உங்களால் முடியாதா என்ன?
ஒரு கணம் மௌனமாக நின்ற ஷெரீப், பின்னர் கையை அசைத்தார்-
என்னோடு வாருங்கள் உன் கேள்விக்கான விடையை காட்டுகிறேன்!
அவரோடு மற்றவர்கள் சேர்ந்து நடந்தனர்-


பத்து நிமிடங்களுப் பின் ஒரு கல்லறையை வந்தடைந்தனர்-
படித்துப்பார்- உன் கேள்விக்கு விடை கிடைக்கும்!
BERT ASHER
SHERIFF
SAM GLEASON
RANGER
ரேஞ்சர்களும், ஷெரீப்புகளும் இங்கே நீண்ட காலம் உயிர் வாழ்வதில்லை போலும்!
புரிந்ததா?
யெஸ்! நன்ருகவே புரிகிறது!
எப்போது கிளம்பப் போகிருய்?
இன்னும் தீர்மானிக்க வில்லை!
அப்படியொரு முடிவுக்கு வந்தால் முதலில் உங்களுக்கு தகவல் சொல்கிறேன்!
இவ்வளவு பிடிவாதம் ஆகாது!
சொல்ல வேண்டியதை சொல்லிவிட்-டேன். உயிர் மீது ஆசையிருந்தால் என் வார்த்தைகளின்படி நடந்து கொள். இல்லையேல் உதயத்தைக் காண இருக்க மாட்டாய்!


வா- பிப் போகலாம்! இங்கே நின்ருல் நேரம் தான் வீணுகும்!
விவகாரம் கைமிஞ்சிப் போகும் போது, கண்களை மூடிக் கொண்டு தியானம் பண்ணுகிற கதைதான்!
திராணியற்ற கோழைகள்!
அந்த-போக்கிரிகள் பயங்கரவாதிகளாக இருக்கலாம். ஆனுல் ஒரு ஷெரீப் தன் கையாலாகாதனத்திற்கு அதை காரணம் சொல்லக் கூடாது!
ஒரு வேளை நிலவரம் நம் கணிப்பை விட படு-மோசமாக இருந்து விட்டால்?
யோசிப்போம்!
ஜிம் போன வேகத்தைப் பார்த்தால் உண்மை நிலவரம் விரைவிலேயே நமக்கு புரிந்து விடும்!
இதற்கிடையே, பாரடைஸின் மாடியறையில்-
உங்களை சக்கையாக பிழிந்து விட்டானுக்கும்!
புளுகாதே ஜிம்! பொய்- என்னிடம் செல்லாது! உன்னைவிட வல்லவனிடம் வாலாட்டியிருக்கிருய் என்பது தான் நிஜம்!
அதிரடியாகத் தாக்கி விட்டான் மானுவல்!


வாய்ச் சவடாலில் ஒன்றும் குறைச்சல் இல்லை!
வந்து-
பேசாதே-காரியத்தில் காட்டு!
கையாலாகாத பயல்களுக்கு இங்கே இடமில்லை- தெரியுமில்லையா?
ம்ம்-!
அடியாட்களை அழைத்துக்-
நோ-!
நீ தனியாக போகிறாய்!
விவகாரத்திற்கு வித்திட்ட நீயே அதற்கொரு முடிவு கட்ட வேண்டும்!
முடியாவிட்டால்-திரும்பி வராதே- அப்படியே போய்விடு!
என்ன ஒரேயடியாக மிரட்டுகிறாய்?
அந்தப் பயல்கள் மட்டும் நாளை இங்கே இருக்கட்டும்- பிறகு பேசிக் கொள்கிறேன் உன்னை. போய்த் தொலை!
என்ன சொன்னாய்?
சரி- விடு!



எப்படி திமிராக பேசு-கிருன பார்த்தாயா?
மூடு வாயை!
அவர் மீது கோபப்படுவதில் அர்த்தமில்லே- நீ உன் கோபத்தை காட்ட வேண்-டிய இடம்- லாங்ஹார்ன்!
அவன்கள் நாசமாகப் போக!
எனக்கு நீ ஓர் ஒத்-தாசை செய்வாயா?
செய்கிறேன். ஆனுல்-
நானிருக்கும் கோலத்தில் எப்படி உதவ முடியும்- சொல்!
சுலபமான வேலே தான்!
அந்தப் பயல் மீது ஒரு கண் வைத்திரு- உண வருந்த அவன் உட்-காரும் போது எனக்கு தகவல் சொல்- மிச்சத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்!
ஆல்ரைட்!
தோட்டாக்களாலேயே அவனுடைய வயிற்-றை நிரப்பி விடு-கிறேன்!
நீ எங்கே இருப்பாய்?
இங்கேயே! உன்னிடமிருந்து தகவல் வரும்வரை இங்கிருந்து நகர மாட்டேன்!
சரி முடிப் போமா?
பீரா-விஸ்கியா?


உயர்ரக விஸ்கி கொடு! என் கணக்கில்!
சரி!
இதற்கிடையே, நகருக்கு வெளியே-
எங்களை வேவு பார்க்க முயற்சி நடக்கும்-நீ எங்களில் ஒருவன் என்று யாருக்குமே தெரியலாகாது-
எங்கே தங்கப் போகிறோமோ-தெரியவில்லை. தீர்மானம் ஆனதும் லாங்ஹார்னில் சொல்லி வைக்கிறேன். கேட்டுத் தெரிந்து கொள்!
டாமை நாம் நம்பலாம். முழுமையாக! செய்தி பரிமாற்றத்திற்கு அவன் உதவுவான்!
நீ நகருக்கு வெளியே எங்கேயாவது தங்கிக் கொள்!
சரி!
வேறு தகவல் உண்டா?
இல்லை-எப்போதும் விழிப்போடு இருடைகர்!
இன்றிரவு 'பட்டாசு' வேடிக்கை நடக்கலாம்!
உங்களுக்கு பாதுகாப்ப அளிப்பேன்-தேவைப்பட்டால் அடையாளம் காட்டாமல் நானும் பங்கு ஏற்பேன்!
குட்!


அஸ்தமன வேளைக்குப் பின்-
வா- வா- ஒரேயடியாக காணமற் போய் விட்டாயே என்று எண்ணிக் கொண்டிருந்தேன்!
எங்கேயெல்லாமோ தேடியலைந்து, கடைசியில் லாயத்தைவிட்டு அவர்கள் வெளியே வரும்போது கண்டுபிடித்து விட்டேன்-ப்ளாட்டருக்கு போனார்கள்-பின் தொடர்ந்து சென்று விட்டு வருகிறேன்!
பேஷ்!
ஒரு பாட்டில் வரவழை! அதை நீ காலி செய்வதற்குள்-திரும்பி வந்து விடுவேன்!
வேண்டியதில்லை- மானுவல் குறிப்பிட்டது போல் இது என் தனிப்பட்ட பிரச்சனை- சரி வரட்டுமா?
நான் உடன் வரவேண்டியதில்லையா?
வேட்டை வெற்றி பெற வாழ்த்துக்கள்!
பட்டாசு இரவு!
நானென்றும் கையாலாகாதவனல்ல என்று மானுவலுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும்!



சல்லடை கண்களாக துளைக்க வேண்டும். அவன் உடம்பு முழுக்க!
அடுத்து-
ப்ளாட்டரில் இருப்போர் மீது அந்தப் பயல் வெகு அக்கறை காட்டுகிறான்!
PLATTER'S RESTAURANT
அதோ இருக்கிறான்-குறி வைக்க வச-மான இடத்தில்!
சுற்று முற்றும் பார்க்காமல் துப்பாக்கியை எடுத்து டெக்-ஸின் தலையை குறி வைத்-தான் ஜிம்! அப்போது-
எதிர்பாராதவித மாக அவனை நோக்கி தோட்-டா ஒன்று சீறிக் கொண்டு வர-வே திடுக்கிட்டு திரும்பினான்-
டுமீல்!
டெக்ஸ் குழுவினர் சுதாரித்துக் கொண்டு விட்டனர்-
?
ஜன்னலை குறி வையுங்கள்!
டுமீல்...!
ஆஆ!


இனி நான் தலைமறைவாகி விடலாம்!
வெளியே வந்து, சாப்பாட்டைத் தொடரலாம் நீங்கள்- ஆட்டம் ஓய்ந்து விட்டது!
கஷ்ட காலம்!
ஆனால் பலரும் டெக்ஸோடு வெளியேறி வந்தனர்-
போக்கர் ஜிம்!
நினைத்தேன்!
உயிர் இருக்கிறதா?
ஊஹூம்!
அப்போது பிப் டர்பின் அங்கே வந்து சேர்ந்தார்-
என்ன விவகாரம்?
ஓ- நீயா?
ஆமாம்-உதவி ஷெரீப் அவர்களே மறுபடியும் அப்பாவி மனிதர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்! இம்முறை டைனிங் டேபிளில்!


அப்பாவி மனிதர்கள், தொழில் முறை துப்பாக்கி வீரர்கள்போல் சாக்ஸமாக துப்பாக்கியை கை-யாளுவதை இப்போதுதான் நான் பார்க்கிறேன்!
என்ன சொல்ல வருகிறீர்கள்?
குற்றம் சாட்டும் நோக்கம் அல்ல!
உண்மையை சொல்வதானால் இங்குள்ள ஜனங்களுக்கு உங்களைப்போல் திறமையாக துப்பாக்கியை கையாளத் தெரிந்திருந்தால், இந்நகரம் ஒரு அமைதிப்பூங்காவாக திகழக் கூடும்!
உங்களுடைய பாஸைவிட விவேகமாக பேசுகிறீர்கள்-பிப்!
பர்குஸனைப்பற்றி மட்டமாக எண்ணாதீர்கள்-இங்கே நடப்பு என்ன வென்று இன்னமும் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை, நீங்கள்!
நீங்கள் தான் சொல்லுங்களேன்!
பிறிதொரு நாள் சொல்கிறேன். அதுவரை நீ உயிரோடு இருந்தால்!
சீக்கிரமே செத்துப் போவேன் என்கிறீர்களா?
ஓநாய் மந்தையினூடே மாட்டிக்கொண்ட ஆட்டுக் குட்டிக்கு ஒப்பான நிலை உன்னுடையது!
தவறான மதிப்பீடு!
எச்சரிக்கத் தோன்றியது- சொன்னேன்!
நன்றி பிப்!
அதுசரி, ஜிம் இத்தனை தோட்டாக்களை 'விழுங்க, அப்படி என்னதான் நடந்தது இங்கே?
தன் 45 ரக துப்பாக்கியோடு ஜன்னலருகே வந்து என்னை குறி வைத்தான்-ஆனால்-விசையை இழுக்க கணநேரம் தாமதித்து விட்டான்-அவ்வளவுதான்!
ஓ-கோ



தற்காப்பு நடவடிக்கை இது-இல்லையா? சரி-தொடர்ந்து சாப்பிட்டு முடியுங்கள்!
நன்றி! இங்கே அடிக்கடி வாருங்கள்! எங்களுடைய சிறப்பு விருந்தினராக!
பாரடைஸில் போய் இந்தச் செய்தியை தெரிவித்தால் சன்மானமாக ஒரு பாட்டில் விஸ்கி கிடைப்பது நிச்சயம்!
அதையடுத்து-
ஹே-நெட்! பாட்டிலில் ஏதாவது மீந்து இருக்கிறதா?
இருக்கிறது- ஆனால் உனக்கில்லை! ஜிம்மை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறேன்!
அப்படியானால் பாட்டிலை இப்படிக் கொடு-ஜிம் வரப் போவதில்லை- என்றைக்குமே!
என்ன சொல்கிறாய் நீ?
நகருக்கு புதிதாக வந்துள்ள மூவரும் அவனை நார் நாராக கிழித்துப் போட்டு விட்டார்கள்!
அடப் பாவமே!
உடன் செல்ல என்னை அனுமதித்திருந்தான் என்றால் நடந்ததே வேறாக இருந்திருக்கும்!
பீற்றிக் கொள்ளாதே அப்பனே!
நல்ல வேளை- நீ போகவில்லை! இல்லையேல் உனக்கும் அதே கதி தான நேர்ந்திருக்கும்!


ஊற்றிக் கொள்- நான் உடனே மானுவலுக்கு தகவல் தெரி-விக்க வேண்டும்!
இன்னமும் அவர்கள் ப்ளாட்டரில் தான் இருக்கிறார்கள்!
தகவலுக்கு நன்றி!
சில நிமிடங்களுக்குப் பின்-
இன்னமும் அங்கேயே தான் இருக்கிறார்களா?
அப்படித்தான் சொன்னான்!
அடியாட்களை அழைக்கட்டுமா?
வேண்டாம்!
நீ தனியாகச் செல் அவர்-களிடம்!
நானா? ஏன் ஏற்கனவே நான் வாங்கிக் கட்டிக் கொண்டது போதாதா?
முழுவதுமாக சொல்ல விடு என்னை அவர்களுக்கு ஒரு கடிதம் தருகிறேன். கொண்டு போய் கொடு- போதும்!
நான் என்ன சொல்கிறேனென்றால்-
ஒரு கை முழுவதுமாக பயனற்ற நிலையில்-நான்-அங்கே-
பிதற்றாமலிரு- கொஞ்ச நேரம்!


பத்து நிமிடங்களுக்குப் பின்-
டான் மானுவல் இதை கொடுத்தனுப்பினர்!
டான் மானுவலா? அப்படி யாரையும் எனக்குத் தெரியாதே?
ஆனல் அவருக்கு உன்னைத் தெரியும்- படித்து விட்டு உன் பதிலை எழுதிக் கொடு!
ம்ம்!
சரி- அப்படி என்ன தான் எழுதியிருக்கிருன்!
டியர் சார், இங்கே உங்களுடைய வரவு எனக்கு மனக்கிலே- சத்தை ஏற்படுத்தினலும் உங்களைப்போல்சட்டென்று யாரையும் வெறுத்து விடும் சுபாவம் எனக்கு கிடை- யாது. உங்களுடையவரவை சிறப்பாக கொண்டாட வேண்டும் போலிருக்கிறது வந்து கலந்து கொள்வீர்- களா? — டான் மானுவேல்.
அழைப்பு வந்திருக்- கிறது. படித்துப் பார்!
என்னது?
அழைப்பை ஏற்றுக் கொண் டேன் என்று போய்ச் சொல் சந்திப்பு எங்கே?
பதில்?
பாரடைஸில்!
பதினைந்தே நிமிடத்தில் வந்து சேருகிறேன், போ!
நெட் அகன்றதும் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்- ளாமல் சாவகாச- மாக புகையிலை- யை சுருட்டி சிக ரெட் தயாரிக்கத் தொடங்கினர் டெக்ஸ் வில்லர்!
அங்கே செல்லத் தான் போகிருயா?
உனக்கு ஏன் இந்த சந்தேகம்?
தனியாகவா?


அழைப்பு எனக்கு மட்டும் தான்!
ஏதோ சதிவலை போல் தோன்றுகிறது!
அந்தக் கோணத்திலும் சிந்தித்துப் பார்த்தேன். அம்மாதிரியான விவகாரமாகப் படவில்லை இது?
தன் ஆசாமிகளுக்கு தண்ணி காட்டிய நபரை நெருக்கத்தில் வைத்து ஆராயத் துடிக்கிறான் என்று நினைக்கிறேன்!
அவனுடைய இடத்தில் நான் இருந்தால் முதல் காரியமாக உன் மென்னியை முறிக்கத் தான் வழி தேடுவேன்!
மூர்க்கன் நீ!
இதை நீ-சொல்கிறாயா ஹஹ்ஹா நல்லதமாஷ்!
அவனுடைய இடத்தில் நான் இருந்தால்-
இப்போது அவன் செய்திருப்பதையே நானும் செய்திருப்பேன்!
என்ன நோக்கத்தோடு?
பரம வைரியா- அல்லது கூட-டாளியாக்கிக் கொள்ளமுடியுமா என்று ஆழம் பார்க்க!
ம்ம்- அர்த்தமிருக்கிறது!
உன் மரமண்டைக்கு இப்போதாவது புரிந்ததே!
சரி-சரி-அடித்துக் கொள்ளாதீர்கள்!


நான் கிளம்புகிறேன்—பாரடைஸ் வரை நீங்களும் வருகிறீர்களா?
ஓ-வருகிறோமே!
பத்து நிமிடங்களுக்குப் பின், தோழர்கள் மூவரும், நிரம்பிவழிந்த உணவு விடுதியினுள் நுழைந்தனர்-
அட்டகாசமாக இருக்-கிறதல்லவா?
கௌரவமானவர்களைக் கூட இங்கே காண முடியும் என்று நான் எதிர்பாக்கவேயில்லை!
கூட்டத்தினூடே புகுந்து நடந்த போது. டெக்ஸ் தற்செயலாக ஒரு நபர்மீது இடித்துக் கொண்டுவிட்டார்
ஸாரி- நண்பரே!
ரேய்!
எருமை!
கோபித்துக் கொள்ளாதீர்கள்!


அன்று அந்த மனிதன் யார் முகத்தில்விழித் தானோ விஷயத்தை அப்படியே விட்டுவிட அவனுக்கு இஷ்டமில்லை-
உன்னை மாதிரி கடாமாடுகளுக்கு இங்கே இடமில்லை-போ-வெளியே!
மம்-நிற்காதே! நட வெளியே!
என்ன திமிர்!
சட்டென்று ஒரு நாற்காலியை தூக்கி அவனுடைய மண்டையில் ஓங்கி அடித்தார் டெக்ஸ்-
மடேர்!
கார்ஸனும், கிட்டும் மற்ற ஜனங்களை தேக்கி நிறுத்தி வைத்தனர்-
கலவரமடையத் தேவையில்லை-
அப்படியே அமருங்கள்!
அங்கே நிலவிய மயான அமைதியை கிழித்துக் கொண்டு உரக்க எழுந்தது டெக்ஸின் ஆவேசமான குரல்-
எழுந்துவாடா நாயே! மரியாதை கற்றுத் தருகிறேன்!
அவனேதான்!
ஹேய்-நில்-


நெட்! இவனை சும்மா விடாதே!
மூடு வாயை!
ஜிம்மை பரலோகம் அனுப்பிய ஆசாமி இவன்தான். உனக்கும் அந்தக்கதி நேரிடுவதை விரும்புகிறாயா?
ஐயோ—அப்படியா?
நீங்கள் யாரென்று தெரியாமல் வாலை ஆட்டி விட்டான்-மடையன்! கண்டு கொள்ளாதீர்கள்!
தொலைகிறான்!
இந்தத் தவறை மறுபடியும் செய்யாதே— புரிகிறதா?
?
வாருங்கள் - மானுவலிடம் அழைத்துச் செல்கிறேன்!
குட்!
நடந்தவைகளை எண்ணி ரொம்ப வருத்தப் படுகிறேன்!
அவசியமேயில்லை!


சில நிமிடங்களுக்குப் பின்...
அழைப்பை ஏற்று வந்தமைக்கு நன்றி மிஸ்டர்! ம்ம்ம்...
டெக்ஸ் கில்லர்!
கில்லர்? மனதில் அழுத்தமாக பதியக்கூடிய பெயர்!
டிராகனின் முத்திரை!
உட்கார்! நெட், நீ போகலாம்!
நான் இங்கே-
அவசியமில்லை-போகலாம்!
ஓ-கே!
சுருட்டு...?
நோ... தாங்க்ஸ்!
சொந்த தயாரிப்பு தான் எனக்குப் பிடிக்கும்!
முதல் தர விஸ்கி இது-பருகலாமே?
நல்ல விஸ்கியை எப்போதுமே நான் மறுப்பதில்லை!


சுவாரஸ்யமாக பேசுகிறாய்!
இது உன் நலனுக்காக!
உனக்கு... இது!
பயல்-படு அழுத்தமான ஆள்தான் போலும்!
நீ—என்ன நினைக்கிறாய்?
விஸ்கியை பற்றியா? பிரமாதம்!
விஸ்கி என்றில்லை வேறு எதுவானாலும் முதல்தரமானவைகளையே எப்போதும் நான் தேர்ந்தெடுப்பேன்!
நம் இருவரின் ரசனையும் ஒத்துப் போகிறது என்பேன்!
அப்படியா...?.. குட்! ம்ம்.. நாமிருவரும் கைகோர்த்துக் கொண்டால் ஜமாய்த்து விடலாம்... இல்லையா?
ஷ்யூர்!
இந்த நகரைப் பற்றி என்ன நினைக்கிறாய்?
மோசமில்லை—சற்று சந்தடியற்றுக் கிடக்கிறது!
என்ன? இவ்வளவு களேபரம் நடந்திருக்கிறது—சந்தடியற்று கிடக்கிறது என்கிறாயே?


அதாவது லாங்ஹார்னில் நடந்தது-போக்கர் ஜிம்முக்கு நேர்ந்த கதி-இதை குறிப்பிடுகிறாயா-அவை வெகு அற்பமானவை
?
உன் ஆட்கள் துப்பாக்கியை வைத்து விளையாட நினைத்ததில் தவறேதுமில்லை-
ஆனால், தோட்டாக்கள் எங்கள் திசையில் வந்தது தான் கோளாறு-
...சவாலுக்கு ஏற்ற ரீதியில் பதில் கொடுத்தோம்- பயல்களுக்கு போதாத வேளை-வேறென்ன?
அஹ்!
எல்லோரும் சவக்குழியை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்-கிறார்கள்... இப்போது!
என்னை இங்கே இட்டு வந்த ஆசாமியைத் தவிர-அதிர்ஷ்டசாலிப் பயல்!
தோளில் பெரிய ஓட்டை இருப்பது அதிர்ஷ்டமா என்ன?
தன் தோழர்களுக்கு நேர்ந்த கதியை நினைத்துப் பார்த்-தான் என்றால் தன் அதிர்ஷ்டத்தை எண்ணி அவன் கூத்தாட வேண்டும்!
நடந்து போனவைகளை அப்படியே மறந்துவிட்டு இனி நடக்க வேண்டியதைப் பற்றி பேசுவோம்! லாங்ஹார்னை நீ வாங்கியிருக்கிறாயாமே?
ஆமாம்!


என்ன இழவுககு?
பணம் சம்பாதிக்கத் தான்-வேறென்ன?
விவேகமான காரிய-மல்ல... நாள் முழுக்க கல்லாவில் அடைந்து கிடக்க உன் மாதிரி ஆசாமிகளுக்கு சரிப்-பட்டு வராது!
டாமின் பொறுப்பில் விட்டால் பணத்தை ஏப்பமிட்டு விடுவான்!
அபபடியா?
என்னுடைய பார்மேன் மாதிரி நகரில் நாணயமானவனை நீ பார்க்கவே முடியாது... இரவு பகலாக உழைக்கிறான்-எனக்காக!
கொடுத்து வைத்தவன் நீ!
ஆனால் என் விஷயத்தில் நான் ஜாக்கிரதையாக இருப்பேன்!
காசில் கை வைத்தால் மறு-கணம் மூளை சிதறிப் போயி-டும் என்று டாமுக்குத் தெரியும்!
லாங்ஹார்னை எனக்கு விற்று விடேன்!
எதற்காக?
பல தொல்லைகளை தவிர்த்துக் கொள்ள!
மனக் கவலைகளை மறக்க மககள் வந்து போகும் அனைத்து மதுபானக் கடைகளையும் எனக்கே சொந்தமாக்கிக் கொள்ள விரும்புகிறேன்!
ஓகோ!


கொள்ளையாக சம்பாதிக்க நல்ல யுக்தி அது...! ஆனால் என் கண்ணோட்டம் வேறு விதமாக உள்ளது!
எப்படி?
இங்கேயுள்ள ஷெரீப்புக்கு சமர்த்து காணாது... என் போக்கில் செயல்பட சாதகமான சூழல் நிலவு-கிறது இங்கே!
அனைத்து மதுபானக்கடைகளையும் உன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்- லாங்ஹார்னைத் தவிர!
உன் வழியில் நான் குறுக்கிட மாட்டேன்- அதே போல் நீ என் தொழிலில் குறுக்கிட கூடாது!
தொழில்?
சூதாட்டம்! என் கடையில் சூதாட்ட அரங்கை நிர்மாணிக்க எண்ணி-யுள்ளேன்-தொழில்முறை சூதாடிகள் லாபத்தில் ஒரு பங்கை எனக்கு கொடுத்து விட வேண்டும்!
பைத்தியமா உனக்கு? தொழில் அல்ல இது—வழிப்பறிக் கொள்ளை!
நிறுத்து!
உன் அபிப்பிராயத்தை இங்கே யார் கேட்டார்கள்?
ம்ம்... ஸாரி— துப்பாக்கியை நீட்ட இப்போது என்ன அவசியம் வந்தது...ஹீ... ஹீ... தூரப் போடு அதை!


என்னுடைய திட்டம் உனக்கு மனக்கிலேசத்தை ஏற்படுத்துகிறதா?
சரி!
நானும் என் கூட்டாளிகளும் இங்கே ஏகப்பட்ட பணத்தை முதலீடு செய்திருக்கிறோம்!
கூட்டாளிகளா...?
தனியொரு நபராக எப்படி கட்டுப் படுத்த இயலும்... ஒரு நகரத்தை...
...சுற்று வட்டாரத்தையும் சேர்த்து! படர்ந்த கட்டமைப்பில் மதுபானக் கடைகள் ஓர் அங்கம்தான்... வலுவான நீரோட்டத்தில் எதிர் நீச்சலடிக்க முனையாதே!
GUNSMOKE OFFICE
PARADISE SALOON
உன் மதியூகமும், துப்பாக்கியைக கையாளும் லாவகமும் அபாரமானவை... எங்களோடு சேர்ந்து கொள். கௌரவமான அந்தஸ்து வழங்கப்படும். மொத்த கட்டமைப்பிற்கும் பாதுகாப்பு நல்கும்பொறுப்பை நீ ஏற்க வேண்டும்!
நோ
அவசரப்படாமல் நிதானமாக யோசி! கொழுத்த ஊதியமும், லாபத்தில் பங்கும் உண்டு!
என் பதிலில் மாற்றம் இராது!
கைகட்டி சேவகம் புரிந்து பழக்கமில்லை எனக்கு!
ஏன்?
அது என் சுபாவத்திற்கு ஒத்து வராது!


உங்களோடு கூட்டாளியாக இருந்து பெறுவதைவிட தனி-யாக இயங்கி கூடுதல் லாபம் ஈட்டமுடியும் என்னால்!
எங்களின் வலிமையை நீ குறைவாக மதிப்பீடு செய்கிறாய்-
அது எவ்வளவு வலிமையுடையது என்பதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை!
என் வழியில் குறுக்கிடாமல் உங்களுடைய தொழிலை நடத்துங்கள்... நண்பர்களாக இப்படி நாம் சந்திக்க தடை ஏதுமிராது!
ம்ம்
உன்னை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது கில்லர்! ஆனால், உன்னால் இங்கே அதிக நாள் தாக்குப் பிடிக்க முடியாது என்று தோன்றுகிறது!
அதெப்படி? இது சுதந்திர நாடு! யார் வேண்டுமானாலும் எந்த வழியிலும் பணம் சம்பாதிக்க-லாம்... கஷ்ட நஷ்டங்களை ஏற்க மனவுறுதி-யும் வேண்டும்!
சரியாகச் சொன்னாய்!
அப்போ நான் சொன்னது...
ஏற்றுக் கொள்-வதற்கில்லை!
சரி... இனி உன் இஷ்டம்?.
போய் வருகிறேன்... வல்லவன் வெல்வான்-சரிதானே?



டெக்ஸ் அங்கிருந்து அகன்றதும், ஒரு இரகசிய வாசல் திறந்து கொள்ள ஆகிருதியான தோற்றமுடைய ஒரு சைனாக்காரன் வெளிப்பட்டான்...
வாங்... கேட்டாயல்லவா?
முழுக்க!
அட்டகாசமான பேர்வழி! உயிரோடு இருந்தால் நமக்கு இடைஞ்சல்!
கரெக்ட்... வேறு வழியில்லை! உடனே ஒரு ஏற்பாடு பண்ணுகிறேன்!
ட்ராகனிடம் விட்டு விடு அந்த பொறுப்பை... நொடியில் நடந்து விடும்!
இதை எதிர்பார்த்து ஏற்கனவே ஆட்களை கூட்டி வந்திருக்கிறேன்!
சைகை காட்ட வேண்டியதுதான் பாக்கி!
தெருவில்...
அங்கே கவனிலாங்,
ப்ளாக் டிராகன்!
மரண சமிக்ஞை!
மற்றவர்களையும் கூப்பிடு. வெள்ளை நாய்கள் வெளியேறியதும், வழக்கமான குறியீடுகளை போட்டவாறு நான் பின் தொடர்ந்து செல்கிறேன்!
சரி!


இதற்கிடையே...
கெலித்தாயா.. தோற்றாயா?
ஆடவில்லை...: சும்மா வேடிக்கை பார்த்தோம்?
நீ?
வாருங்கள்...' பேசிக் கொண்டே போவோம்!
சனிப்பயல்— பிடரியை ஊடுருவு- மாறு ஒரு தோட்டாவை அனுப்ப முடிந்தால்...
மெள்ளப் பேசு... பில்!
காதில் விழுந்தால் தோலை உரிக்காமல் விட மாட்டான்!
நாசமாகப் போகட்டும்!
அதோ... வெளியேறு- கிறார்கள் தோழர்கள்!
சாவகாசமாக நடந்து போன அம்மூவ- ரையும் இரகசியமாக குட்டையன் ஒருவன் பின்தொடர்ந்தான்...



ஓவ்... அந்த குட்டையன் எங்கிருந்து முளைத்தான்?
தோழர்களை இரகசியமாக பின்தொடர்கிறான்... கண்காணிக்க வேண்டுமே!
வழியில் சுவர்களில் சங்கேத அடையாளமிட்டுக்கொண்டே போனான் அந்தச் சீனன்...
டைகர் அதை கவனிக்கத் தேவையில்லை...
என்ன இழவு சமிக்ஞை இது— புரியவில்லையே?
ஏதோ விபரீதத்திற்கான தொடக்கம் இது- விழிப்போடு இருக்க வேண்டும் நான்!
அந்தச் சீனனை இரகசியமாக் பின் தொடர்ந்தான் டைகர்—
மறுபடியும் அடையாள மிடுகிறான்!


உற்றுக் கவனித்தான் டைகர்...
கொஞ்சம் புரிகிற மாதிரி தோன்றுகிறது!
அந்த சீனாக்காரன் நேராக லாங்ஹார்ன் போய்ச் சேர்ந்தான்–
அங்கேயே நின்று விட்டான்–
அந்தசங்கேத குறிகளை நான் புரிந்து கொண்டது சரி-தானா என்று, இங்கே ஒளிந்து நின்றால் தெரிந்து விடும்-வெகு விரைவில்!
நிமிடங்கள் கரைந்தன ... முடிவில்- பத்து சீனர்கள் அங்கே வந்து குட்டையனோடு சேர்ந்து கொண்டனர்...
அத்தனை பேரும் சீனர்கள்!
கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் டைகர் கடையினுள் நுழைந்தான். டெக்ஸ் குழுவினரை அடையாளமே தெரியாதவன் போல நடந்து கொண்டான்!
வத்திப் பெட்டி இருக்குமா?
ஓ... தருகிறேனே!
?
!


பிறர் அறியாவண்ணம், தன் கணிப்பை டெக்ஸின் காதில் கிசுகிசுத்தான் டைகர் ...
வாண வேடிக்கை!
பத்து சீனர்கள்-
எங்கே?
திருப்பத்தில்-! பாரடைஸிலி -ருந்து உங்களை பின்தொடர்ந்து வந்திருக்கின் றனர்!
விலகி-மதுபான பிரிவுக்குள் நுழைந்து, லாங்ஹார்னை விட்டு வெளியேறி நடந்தான் டைகர்-
சீனர்கள் இருந்த திசைக்கு நேர் எதிரே நடந்தான் டைகர்...
நலல இலக்கில் நான் இனி நிலை கொள்ள வேண்டும்!
அவர்களுடைய பார்வையிலிருந்து மறைந்ததும் சட்டென்று அருகே-யிருந்த கட்டிட உச்சிக்கு ஏறலானான்...
அங்கே...
சைனாக்காரர்களா! ஹே— மானுவலுக்கு விதம் விதமான கூட்டாளிகள் இருக்கிறார்கள் போலும்!
செயல் வேகம் மிக்கவர்கள் -


கொஞ்சம் பொறு!
என்ன செய்யப் போகிறோம்?
டைகர் நமக்கு பாதுகாப்பு தர, தக்க இடமாக தேடி தன்னை நிலைப்படுத்திக்கொள்ளட்டும்-
...பிறகு நாம் வெளியே போய் எதிரிகளை எதிர் கொள்வோம்!
விசேடமான யுக்தி ஏதாவது...?
குறிப்பாக எதுவுமில்லை! நான் முதலில் வெளியேறி சாலையின் மறுபக்கம் செல்கிறேன். கார்சன் நீ கதவுக்குவெளியே இடப்பக்கமுள்ள தடுப்பின் பின்னால் நின்று கொள். கிட் வாசலருகே நிற்கட்டும்!
துப்பாககிகளை செக பண்ணிக் கொள்ளுங்கள். நான் போய் டாமிடம் பேசி விட்டு வருகிறேன்!
நிறைய பீர் அனுப்பச் சொல்... செத்துத தொலைக்க நேரிட்டால் நிறைந்த வயிற்றோடு சாவோம்!
என்ன தர—மிஸ்டர்
தோழர்களுக்கு இரண்டு பீர் அனுப்பு
முதலில், எனக்கு முன் யாரும் வெளியேற வேண்டும் என்று அனைவரிடமும் சொல்லி வை. வெளியே துப்பாக்கி விசையில் விரலை வைத்தவாறு காத்துக் கொண்டிருக்கிறது ஒரு வெறியர் கூட்டம்!


நேரம் மெள்ள ஊர்ந்து கொண்டிருந்தது—
CROC
முடிவில்- வாசலில நிழலாடியது...
அவன் தான் என்று கண்டறிந்து நான் சைகை செய்யும் வரை தாக்க முற்பட வேண்டாம்!
அவனே தான்... இந்தக் கத்தி முதலில் போய் முத்தமிடட்டும்!
அந்தக் கத்தி தன் இலக்கு நோக்கி செல்ல அனுமதியேன்!
ஹா... ஆ ஆ!
க்ராக்!
வெல்டன்- டைகர்!


கெட்டது காரியம்!
தாககு... விடாதே!
டுமீல்
அஹ்!
அங்கே... எதிர் மாடியில்!
ஆவ்!
டுமீல்
CROCE
சைத்தான்கள்!
அஹ்!



இடம் தெரியாமல் வந்து விட்டீர்கள் தம்பிகளா!
டுமீல்
நாம் இங்கே இருபபதை எப்படியோ தெரிந்து கொண்டு விட்டார்கள்!
ஆவ்!
டுமீல்
இதைக் கொஞ்சமும் எதிர்பார்ததிருக்க மாட்டார்கள்!
அஹ்!
பின் வாங்குங்கள்!
ஐயோ... பாவம்!
என்னமாய் ஓடுகிருன்கள்!
ஐயோ!
வாவ்... இனி இந்தப்பக்கம் தலை வைத்துக் கூட படுக்க மாட்டார்கள்!



ஐயோ!
இங்கே கவனியுங்கள்!
நிறுத்துங்கள்! என்ன இங்கே கலாட்டா?
பலப்பரீட்டை...! சிலர் தாத்தா பாட்டிகள் போன இடத்திற்கு போய் விட்டனர்!
ஓய்ந்து விட்டது!
நன்றி டைகர்! இனி நீ போய் தூங்கி ஓய்வெடுக்கலாம்!
ஓ!
தப்பியோடிப்போன மூன்று ஆசாமிகளும் இப்போதைக்கு திரும்பி வரப் போவதில்லை டெக்ஸ்!
அதிர்ஷ்டவசமாக இல்லை!
யாருக்காவது மூச்சு இருக்கிறதா?


இவனுடைய கழுத்தில் கிடந்தது!
கொடு... பார்ப்போம்!
ம்ம்... கறுப்பு டிராகன் வரையப்பட்டிருக்கிறது!
மற்றவர்களிடமும் இப்படியொரு டாலர் இருக்கிறதா பார்!
ம்ம்...
ஒரு பக்கம் டிராகன் படம்... மறுபக்கம் சீன மொழியில் ஏதோ வாசகம்!
என்ன?
எல்லோரும் இது மாதிரி அணிந்திருக்கிறார்கள்!
பலே... எல்லாவற்றையும் சேகரி– மானுவலுக்கு அனுப்பி வைப்போம்!
பிரமாதமான யோசனை!
அங்கே வந்து குழுமிய ஜனங்களிடம்டெக்ஸ் விசாரித்தார்...
இவர்களை யாருக்கேனும் அடையாளம் தெரியுமா?
ஒரே மாதிரியாகத் தோற்றமளிக்கிறார்கள்!
கால்வஸ்டன் துறைமுகப் பகுதியில் வாழும் பிரிவினர்கள் இவர்கள்!


கால்வஸ்டன் தீவுப்பகுதியா?
ஆமாம்... சைனாக்காரர்கள் அங்கேதான் பெருங் கூட்டமாக வாழ்கிறார்கள்!
ஷெரீப்புக்கு யாராவது தகவல் சொல்லி இந்த பிணங்களை அப்புறப்படுத்த ஏற்பாடுசெய்யுங்கள்!
அது என் பொறுப்பு!
பின்னர்-பாரடைஸில்-
உங்களுக்கு வந்திருக்கிறது... மானுவல்!
என்ன அது?
கில்லர் உங்களுக்கு அனுப்பியதாக மட்டும் சொல்லி விட்டான், இதை கொண்டு வந்தவன்!
கில்லர்? யமப்பயல் - இன்னும் உயிரோடுதான் இருக்கிறானா?
பொட்டலத்தை பிரித்துப்பார்த்த மானுவல் உள்ளேயிருந்த டாலர்களைக் கண்டு மிரட்சியடைந்தான்!
அடப்பாவி!
ஏதோ... எழுதியிருக்கிறதே!
அடுத்த தடவை கூடுதலாக ஆட்களை அனுப்பு!
—கில்லர்.


ஏதாவது கெட்ட சேதியா?
எட்டுப் பேரை எம-லோகம் அனுப்பி விட்டான் அந்தச் சண்டாளன்!
அவனுடைய அட்டூழியம்வரைமுறையின்றி போய்க்கொண்டிருக்கிறது-பயலை வளர விடக்கூடாது-
விடமாட்டேன்! என்னை சிந்திக்க விடு-போய்த் தொலை!
லாங்ஹார்னில்-
எங்களை தற்காத்துக்கொள்ள வேண்டிய நெருக்கடி விளைவுக்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல-
எட்டுப் பேரின் உடல்கள் சல்லடை போல் கிடக்கின்றன-
எங்களை சவக் குழிக்கு அனுப்ப வெளியே பதுங்கிக் கிடந்தவர்கள்!
அவர்கள் வெளியே பதுங்கிக் கிடந்தது உங்களுக்கு எப்படி தெரிய வந்தது?
பட்சி சொல்லிற்று!
யார் அந்தச் சிறு பறவை?
அனாவசியம்! நாங்கள் தந்த மற்ற விபரங்களே போதுமானது!
வாஸ்தவம் தான்!
88


நீங்கள் முதலில் தாக்கப்பட்டதாக மற்றவர்களும் உறுதி செய்கிறார்கள்!
எனவே, வழக்கு பதிவுசெய்ய முகாந்திரம் இல்லை!
யெஸ்... நானே எதற்கும் ஸ்டேஷன் வரை வந்து பார்குஸனிடம் ஒரு வார்த்தை சொல்லி விடுங்கள்!
விஷயத்தைக் கேட்டு ஆசாமி மயக்கம் போட்டு விழுந்திடக் கூடாது!
சரியான கணிப்புத்தான்! சரி—நான் விடை பெறுகிறேன்! நீங்கள் தூங்கப் போகலாம்!
இதோ கிளம்பி விட்டோம்!
நீங்கள் தூங்கினால்தான், மேற்கொண்டு விவகாரம் ஏதும் நிகழாது!
மற்றவர்களும் நிம்மதியாக தூங்க முடியும்!
குட் நைட்... பிப்!
அதே வேளையில்...
கால்வஸ்டனுக்கு விடு... உச்ச வேகத்தில்!
யெஸ்... மாஸ்டர்!
யிப்பீஈஈஈ!


புழுதியை கிளப்பிக் கொண்டு விரைந்தது கோச்சு வண்டி...
அந்த கில்லர் சண்டாளன் ஏன்தான் இங்கே வந்து தொலைத்தானோ?
பிரதான நிலத்தோடு தீவை இணைத்த பாலத்தையும் கடந்த பின்-
துறைமுக பகுதியில் வந்து நின்றது கோச்சு வண்டி- இறங்கி, கொல்லைப் புற தெருவில் வேக மாக நடந்து போய் ஒரு கதவின் முன் நின்றான் மானுவல்-
ஒரு சிறு திறப்பின் வழியே இரண்டு கண்கள் உற்று நோக்கின...
ஓ... டான் மானுவல்!
சுவர்க்கத்திற்-கொரு பாலம்!
சீக்கிரம் திற... வாங்கோடு பேச வேண்டும்!
இதோ!
மெள்ளத் திறந்தது கதவு...



மாஸ்டர் பிஸியாக இருக்கிறார்!
அவசர விஷயம்... உடனே பார்க்க வேண்டும்!
வாருங்கள்... இப்படி!
தெரியும்!
அதையடுத்து-
மாஸ்டர் வேறொரிடத்தில் இருக்கிறார்!
எங்கே போகிறோம்? பாதை இதுவல்லவே?
கல்வரமடைய தேவையில்லை- அற்புதமான காட்சியை காணப்போகிறீர்கள்-
?
காவலாளி ஒரு பட்டனை அழுத்த, மறு வினாடி ஒரு திறப்பு உருவானது-
பலே... நான் முன்பு இதை பார்த்ததில்லையே!
உள்ளே போங்கள்!



டான் மானுவல் வந்திருக்கிறார் என்று மாஸ்டரிடம் போய்ச் சொல்!
சாத்தியமில்லை... மேல்மட்ட ஆலோசனைக் குழுவினரோடு இருக்கிறார்!
அந்த குகைப் பாதை வழியே சற்றுத் தொலைவு சென்ற பின், தாழிடப்பட்டிருந்த ஒரு கதவருகே வேறொரு காவலாளி நின்று கொண்டிருந்தான்...
தெரியும்... ஆனால், அவசர விஷயமாம்!
சரி—இங்கேயே இருங்கள்!
சிறிது நேரம் கழித்து கதவு மீண்டும் திறந்தது—
டான் மானுவல்-உள்ளே வாருங்கள்! நீ உன் இடத்திற்கு திரும்பு-
வாப்பா-டான் மானுவல். இப்படி வந்து உட்கார்!
அம்மாடி! ஒரு கணம் பயந்தே போய்விட்டேன்-ஏதோ என்று!
டிராகன் வம்சாவளியினர் மூவரை நீதி விசாரணை செய்து கொண்டிருக்கிறேன்... விஷயம் ரொம்ப அவசரமானதோ?


சொல்-கேட்போம்!
இதைப் பார்!
கில்லர் அனுப்பியிருக் கிறுன்-மிச்சம்—சொல் லாமலே புரிகிற தல்லவா?
எட்டு டிராகன் டாலர் கள்-ஒரு சிறு அன்பு எச்சரிக்கையோடு!
கிரேட் கன்பூஸியஸ்! அவனைக் கொல்ல சென்றவர்களுக்கு வீரம் போதாது!
அதோ நிற்கிற மூன்று அற்ப நாய்களை பார்- டிராகனின் உத்தரவுப்படி எதிரியின் தோலை·· உரிக்கத் திராணியற்று, சொந்த உயிர்மீது ஆசை கொண்டு தப்பியோடி வந்துவிட்ட கோழைகள்!
ஏதோ-தப்பு நடந்துவிட்டது-அடுத்த முறை இம்மாதிரி பிழை நேரிடாது!
இருக்கலாம்-ஆனல், குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டாக வேண்டும்!
டிராகனின் அன்பு குழந்தைகளே. குற்ற விசாரணையை கேட்டீர்களல்லவா? தண்டனையை அறிவித்து சமிக்ஞை செய்யுங்கள்!



உறுப்பினர்கள் அனைவரும் ஏக காலத்தில் வாளை உயர்த்திப் பிடித்தனர்-
அதன் அர்த்தம் விளங்கப் பெற்ற மூன்று நபர்களும் மரண பீதியால் அலறினர்-
நோ-நோ-!
சைலன்ஸ்! மரணத்தை தழுவவாவது தெரிந்திருக்க வேண்டும்!
அடுத்து என்ன நடக்கும்?
பொறுத்திருந்து பார்!
ஏதும் பேசாமல் நான்கு பேர் சேர்ந்து முதல் கைதியை தூக்கி, உருளை மீது பிணைக்கப்பட்டிருந்த மரப்பலகையில் கிடத்தினர்-
ஐந்தாமவன் போய் திரை ஒன்றை விலக்கினான்-
நிலையான மகிழ்ச்சிக்கு ஒரு சாளரம் இது! தண்டிக்கப்பட்ட நபர் இதன் வழி சென்றால், அவனுடைய பாவங்கள் கழுவப்பட்டு புனிதமடைந்து விடுவான்!
ஹே-என்ன கொடுமை இது?



ம்-மேலே நடக்கட்டும்!
சரியான வெறியனாக இருப்பான் போலிருக்கிறதே!
வாங்க் சைகை செய்ததும், விசை ஒன்று இழுக்கப்பட்டது.
கடகடவென்றுபலத்தஓசை யோடு அந்த உருளை பலகை யை தன்பால் உள்ளிழுத்தது-
க்ரேட் கன்பூஸியஸ்-நான் அலறிவிடக் கூடாது!
ஓரிரு கணங்கள், மௌனத்தில் உறைந்து கிடந்த மானுவல் சட்டென்று வாங்கின் தோளை பற்றியிழுத்து, கத்தினான்-
நோ-வாங்க்! நிறுத்து இந்த வெறிச் செயலை!
தோல்வியுற்றவர்களுக்கு நாங்கள் வழங்கும் வழக்கமான தண்டனை இது-
தண்டனை கொடு-ஆனால் இப்படி காட்டுமிராண்டித்தனமாக வேண்டாம்!
ஊப்ப்!
நிறுத்துங்கள்!
மன்னிப்பு கோரிக்கை வந்திருப்பதால், அந்த தொடை நடுங்கி சுண்டெலியை விடுவியுங்கள்-



மூன்று குற்ற
வாளிகளையும்
வாங்கின் முன்
கொண்டு வந்து
நிறுத்திவிட்டு
விலகி நின்றனர்
முகமூடி நபர்
கள்—
கொடூரமான தண்டனையிலி-
ருந்து விடுபட்டாலும், தண்-
டனையை நீங்கள் அனுபவித்-
தே ஆக வேண்டும். மூதா-
தையர்களோடு போய்
சேர்ந்து கொள்ளுங்கள்!
ஒரு விசையை அவன் இழுத்ததும்,
தளக் கதவு ஒன்று திறந்து அம்
மூவரையும் விழுங்கியது...
ஆ ஆ ஆ...!
தொப்!
எ...என்...ன...
நேர்ந்தது
அவர்களுக்கு?
எளிய முறையில்
மரணத்தை
தழுவுவார்கள்!
ஒரு 'லிப்ட்'டை நோக்கி
மானுவலை அழைத்துச்
சென்றான் வாங்க...
உள்ளே
போ!
?
வியப்பாக
இருக்கிறதா?
இது மாதிரி நான்
முன்னர்
கண்டதேயில்லை!
சீன நாகரீகத்தில்
விஞ்ஞானம் பெரும்
பங்கு வகிப்பது
தெரியாதா?


சில நிமிடங்க-ளுக்குப்பின் அவர்களிரு-வரும் வாங்-கின் பிரத்யேக அறையில் இருந்தனர்...
ஓய்வாக வந்து உட்கார்... டீ வரவழைக்கிறேன்!
விஸ்கி கிடைத்தால் நன்றாகயிருக்கும்!
ஸாரி... மேதைகள் மது பருகு-வதில்லை. நானொரு மேதை!
இருக்கலாம்... ஆனால் இரக்கமற்றவன்!
ஆள நினைப்பவன் கருணை காட்டவே கூடாது!
மறக்கவே முடியாது... என்றென்றும்!
ஓர் அழகிய யுவதி உள்ளே வந்தாள்...
அழைத்தீர்களா பிரபு?
டீ கொண்டு வா... அப்-படியே இரண்டு ஹுக்-காக்களையும் எடுத்து வா... மின்-லி!
கஞ்சா!
எனக்கு வேண்டாம் வாங்... நான உடனடியாக பாரடைஸுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்!
அனுபவிக்கத் தெரியாதவன்!
சரி... ஒன்று மட்டும் போதும்!
யெஸ்... மாஸ்டர்!
போதை மயக்கத்தில் இனிய கனவு காண்பது மேதைகளின் பிடித்தமான பொழுது போக்கு!
நீ ஒரு மேதை... சொல்லியிருக்கிறாய்?


மேதை என்று பீற்றிக்கொள்ளும் நீ கில்லரை கொல்ல நம்பகமான வழிமுறை ஒன்றை சொல்லேன்!
ஏற்கனவே தீர்மானித்து வைத்திருக்கிறேன்!
சொல்... சொல- கேட்போம்!
பொறு... கொஞ்சம்! விரை- விலேயே தெரிந்து கொள்வாய்!
மின்-லி டீ கோப்பைகளோடு வந்ததும அவள் பார்வையில் படுமாறு ஒரு டாலரை வைத்தான் வாங்க....
?
கரேட கன்பூஸியஸ்! என்ன ஆயிற்று என் சகோதரனுககு?
தன்னைச் சார்ந்தவர்களை காக்கும் பெரும் பணி வாங்குக்கு உண்டு... அவருக்குத் தெரியாமல எதுவுமே நடக்க முடியாது!
பிரபு... என்னைத் தவிக்க விடா- தீர்கள்! என்ன நடந்தது?
உன் சகோதரன் ஹோ-நான் கொடிய வெள்ளைக்காரனின் தோட்டாவுக்கு இரையாகி விட்டான்!
கடவுளே! ஹோ-நான் இறந்து விட்டானா?
98


ஒரு சில கணங்கள் சிந்தனை-யில் மௌனமாகிப் போன மின்-லி கண்-களில் குரூரம் கொப்பளிக்க பேசலானாள்-
யாரந்த கொடியவன் பிரபு?
டெக்ஸ் கில்லர்-அவன் பெயர்!
டெக்லாஸ் நகரில் இருக்கி-கிறான்- லாங்ஹார்ன் மது பானக் கடை முதலாளி- பழி வாங்கப் போகிறாயா?
அது என் கடமை அல்லவா?
ஆனால் அவன் ஒரு ஆபத்-தான பேர்வழி!
இருக்கட்டுமே!
புலி போல் அவன் கொடியவனாக இருந்தாலும் நான் ப்துங்கிச் சென்று பழி தீர்க்கும் பாம்பாவேன்!
பாம்பு தீண்டினால் புலியானாலும் சுருண்டு விழத் தானே வேண்டும்!
சரியாகச் சொன்னாய்!
ஆனால் உன்னிடம் விஷ-மில்லையே? அதை ஈடு செய்ய...
இந்த விஷக் கத்தியை எடுத்துச் செல்!
ரொம்ப ஜாக்கிரதையாக கையாள வேண்டும் இதை! லேசாக கீறினால் போதும்-மரணம் உறுதி!
99


எதிரியின் நெஞ்சில் செரு-கும் வரை பத்திரமாக ஒளித்து வைத்துக் கொள்-வேன்!
சென்று வா!
பழி தீர்க்கும் வரை உனக்கு விடுப்பு வழங்-குகிறேன்!
அந்தப் பெண் அகன்ற-தும் மானுவல் பக்கம் இரும்பினன் வாங்க்-
பார்த்தாயா?
உனக்கு உடம்-பெல்லாம் விஷம்!
வலிமை தோற்று விட்டால் தந்திரத்தைக் கையாள வேண்டும்!
இவளால் சாதிக்க முடியுமா?
சந்தேகமே கிடையாது. ஆண்களிடம் எச்-சரிக்கையாக நடந்து கொள்வானே தவிர, கில்லர் அழகான பெண் ஒருத்தியை சந்தேகப்பட மாட்டான்!
ம்ம்ம்-
விஷக் கத்தியா?
ஆமாம்- படுபயங்கரமானது!
நுனி தோலைத் தொட்-டால் போதும், கில்லர் சொர்க்கத்துக்குப் போய் விடுவான்!
போதும்- நிம்மதியாக புகைக்க விடு!
ஆல்ரைட்- குட் பை!



கில்லர் இல்லாத டெக்ஸாஸ் நகரைப் பற்றிய கனவுகளோடு குஷியாக வீடுதிரும்பிக் கொண்டிருந்தான் மானுவல்-
சே- அந்த சண்டாளன் என் நிம்மதியை அடியோடு கெடுத்து விட்டான்! அவன் தொலைந்தால் தான் எனக்கு வாழ்வு!
டெக்ஸ் தூள் கிளப்புகிறார்!
இதற்கிடையே டெக்ஸும் தோழர்களும் தங்கியிருந்த லூயிஸ் ஹோட்டலில்-
டொக் டொக்
வரலாம்!
?
ஹே- அதை ஏன் நீட்டுகிறாய்?
ஓ- நீயா? எப்போதும் உஷார் அவசியமாகி விட்டது!
தூங்கச் செல்லப் போகிறீர்களா?
ஏன் ஏதாவது விபரீதமா?



நோ- நீங்கள் இங்கே இருக்கையில் வெளியே விபரீதம் எப்படி சம்பவிக்கும்?
நேர்மையாளர்கள் யாரும் என்னைக் கண்டு அஞ்சத் தேவையில்லை!
நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை!
கிட், பாட்டிலையும், கிளாஸ்களையும் எடு!
இந்த அகால வேளையில் என்ன விஷயமாக வந்தாய்?
ம்ம்-
மனத்தில் சிறு உறுத்தல்- அந்த சீனர்கள் ஏன் உன்னைத் தாக்கவேண்டும்?
எனக்கே பதில் தெரியாத கேள்வி அது?
தெரியாதா- சொல்ல மாட்டாயா?
தெரியாது பிப்- புதிராக இருக்கிறது- புரிந்து கொள்ளத் துடிக்கிறேன்!
நம்பலாமா உன்னை?
காரணத்தை புரிந்து கொள்ள மண்டையை உடைத்துக் கொண்டிருக்கிறேன் - இந்த வினாடி வரை-
ஓகோ!


மானுவலுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இருக்குமா?
தடம் புரண்டு போகிறது உன் சிந்தனை!
சீனர்களுக்கும் மானுவலுக்கும் தொடர்பிருக்கும் என்று நான் நினைக்கவில்லை!
நகரில் வாழும் சீனர்கள் பொதுவாக மிக நல்லவர்கள்-
ம்ம்-
சக நகரவாசியை கொல்ல முயற்சிக்க மாட்டார்கள்-
நம்பலாம்!
உன்னை தாக்கியவர்கள் ...
கால்வெஸ்டன் தீவிலிருந்து வந்திருக்கலாம்!
அங்கே விசாரிக்க முடியாதா நீ?
என் அதிகார வரம்புக்கு வெளியே உள்ளது அந்த இடம்!
சரி. நானே பார்த்துக் கொள்கிறேன் என் வழியில்!
ம்ம்! சட்ட வரம்புகளை மறந்து விடாதே!



சட்டமாவது- வரம்பாவது- அப்படி ஒன்று இங்கே உண்டா என்ன?
தரக்குறைவான பேச்சு?
உண்மை கசக்கிற-தாக்கும்?
கடைசியாக ஒன்று கேட்க விரும்புகிறேன்!
ஓ- தாராளமாக!
டெக்லாஸ் நகருக்கு நீ வந்த நோக்கம் என்ன?
ம்ம்
பதில் சொல்ல மாட்டாய்-இல்லையா?
இப்போதைக்கு-மாட்டேன்!
பிப்- உன்னை நான் நம்புகிறேன். ஆனல் இந்த கேள்விக்கு உடனடியாக பதிலளிக்கத் தயாரில்லை!
சரி உன் இஷ்டம்! நானே தெரிந்து கொள்ள முயற்சிக்கிறேன்- குட் நைட்!
குட் நைட் பிப்!
விழிகளில் குரூரம் மின்ன அறையினுள் பாய்ந்தார் டெக்ஸ்-
பிப்-முட்டாள் அல்ல-உண்மையை தெரிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்காது அவனுக்கு!
நாம் வந்த காரியம் முடியும் வரை தெரியாமலிருந்தால் போதும்!


ஹே- என்ன இது? அப்படியே துப்பாக்கி இணைந்த பெல்ட்டோடு படுத்துக் கொள்ளப் போகிறாயா?
நான் தூங்கப் போவதில்லை- திட்டத்தை மாற்றிக் கொண்டு விட்டேன்!
பிப் மாறுபட்ட கருத்து தெரிவித்த போதிலும் நம் மீது நடந்த தாக்குதலுக்கும் மானுவலுக்கும் தொடர்பு உண்டென்று நம்புகிறேன்!
அதை உறுதி செய்து கொண்டுவிட வேண்டும்- உடனடியாக!
இந்த இரவு வேளையிலா?
யெஸ்! அதுவரை எனக்கு தூக்கம் வராது!
நாங்களும் வருகிறோம்!
அவசியமில்லை! பிறகு வந்து சந்திக்கிறேன்!
தடபுடலாக எதையாவது செய்து வைக்காதே!
சில நிமிடங்களுக்குப்பின்- இருட்டுச் சந்தில் ஒளிந்து நின்று பாரடைஸை டெக்ஸ் கவனித்துக் கொண்டிருக்கையில்-
ம்ம்- இந்த வேளையில் யார் வந்து சேருவது?
PA
அட- மானுவல் தான்!


காத்திருக்கவா ஸார்!
வேண்டாம். நீ தூங்கப் போகலாம்!
இந்த அகால வேளையில் எங்கே போய் விட்டு வருகிருன்?
அந்த வண்டியோட்டியிடமிருந்து தெரிந்து கொள்ளலாம்!
வண்டியோட்டியை இரகசியமாக பின் தொடர்ந்த டெக்ஸ் முடிவில்-
நில் அப்படியே!
ஆள் மாருட்டம் என்று நினைக்கிறேன்! என்னிடமிருந்து பத்து டாலருக்கு மேல் பெயராது!
வாயை மூடிக்கொண்டு அந்த இருட்டு சந்தினுள் வா!
வழிப்பறி திருடன் என்றெண்ணி மௌனமாக கீழ்ப்படிந்தான் வண்டியோட்டி
சரி- பையிலுள்ள பணத்தை எடுத்துக் கொண்டு ஆளை விடு அப்பனே!
உன் பணம் யாருக்கு வேண்டும்!
மானுவலை எங்கே அழைத்துச் சென்ருய்?
அதை அவரிடமே போய் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே? என்னை ஏன் வதைக்கிருய் இப்படி?


கேட்டதற்குப் பதில்?
ஹே- வேண்டாம்! அதை அப்பால் திருப்பு!
முதலில் பதில் வரட்டும் - இல்லையா-
வே-வேண்டாம்!
ஓ. கே. அவரை கால்வெஸ்டனுக்கு கூட்டிச்சென்றேன்!
யாரை சந்திக்க?
தெரியாது! சத்தியமாகத் தெரியாது! வழக்கம் போல்துறைமுக முகப்பில் அவரை இறக்கி விட்டு விட்டேன்!
அதன் பிறகு அவர் எங்கே போய் வந்தாரோ- சத்திய மாக எனக்குத் தெரியாது!
துறைமுகம் அருகிலா?
ஆமாம்!
அங்கே சீனர்கள் வாழ்கிறார்களா?
ஏராளமாக!
குட்!
சரி- நீ போகலாம்! இதைப் பற்றி யாரிடமும் மூச்சு விடக் கூடாது புரிகிறதா?
புரிகிறது!


திரும்பிக்கூட பார்க்காமல் ஓட்டம் பிடித்தான் வண்டியோட்டி-
பலே!
அடுத்து- மானுவலை சந்திக்க வேண்டும்!
சில நிமிடங்களுக்குப் பின்-
ஹே- மானுவல்!
ஹே- மானுவல்!
யாரடா- கூப்பாடு போடுறது?
யாரங்கே?
யார்- அழைத்தது?
யூகிக்க முடிகிறதா பார்!
ம்ம்- யாரோ விஷமியின் கிண்டலோ?



கோபத்-
தோடு
மானுவல்
திரும்பி
நடந்த
போது-
!?
அட- சண்-
டாளனே!
இனிய கனவுகளோடு
சுகமாக தூங்கு
மானுவல்!
அந்தக் கிராதகன்
கில்லரின் குரல்
அல்லவா?
மறுநாள் லாங்ஹார்னில்-
குட் மார்னிங்- எல்லோருக்கும்!
ஹை டாம்- வியாபார-
மெல்லாம் எப்படி?
பிரமாதம்! ஆனால் கடையை தான்
உன்னிடம் விற்று விட்டேனே!
மூன்று ஐஸ்
பீர் கொடு!
நேற்றிரவு யாரோ மானுவலை
கொல்ல முயன்றதாக பேச்சு
காதில் விழுந்தது!
நிஜம்தானா?


ஜன்னல் சேதமுற்று கிடந்ததையும் மேற்கூரையில் தோட்டா துளைத்ததையும் என் கண்ணால் பார்த்தேன்!
ஓகோ?
யாரோ துப்பாக்கியைப் பிரயோகித்திருக்கிறார்கள்?
கீழே சாலையிலிருந்து பார்த்த போதே தோட்டா துளைத்த பள்ளமெல்லாம் தெரிந்ததாக்கும்?
யாரோ மானுவலை கொலை செய்ய முயன்றது நிஜம்!
நீ அவனுடைய நண்பனா?
நானா? நண்பனா? முயற்சி தோல்வியடைந்ததில் ஏகப்பட்ட வருத்தம் எனக்கு!
கவலைப்படாதே- நீ ஆனந்த பள்ளுப் பாடும் நாள் அதிக தொலைவில் இல்லை!
இன்னொரு பீர்?
வேண்டாம்! நகரிலிலுள்ள தொழில்முறை சூதாடியின் பட்டியல் வேண்டும்!
ஒருவன் இப்போது இங்கேயே இருக்கிறான்-
அதோ!
பெயர் நில்ஸன்- நகரிலிலுள்ள சூதாடிகள் அனைவரையும் அறிவான்!


நில்சன்?
நான் தான்- வந்து உட்கார் கில்லர்!
நான் யாரென்று தெரியுமா - உனக்கு?
நீ நடத்திய ஆர்ப்பாட்டங்களை அறியாமலிருக்க நானென்றும் குருடனோ- செவிடனோ இல்லையே!
இது வரை நான் செய்திருப்பவை- செய்ய நினைத்திருப்பதில் கால் பாகம் கூட கிடையாது!
பலே- பலே- அட்டகாசமான ஆள்தானப்பா நீ!
என் திட்டத்தில் பங்கேற்க உனக்கு ஆர்வம் இருக்கிறதா?
போக்கர் ஜிம்முக்கு நேர்ந்த கதி வந்து விடாதே- எனக்கும்?
அவனுக்கு ஏற்பட்ட முடிவு அவனுடைய அடி முட்டாள் தனத்தின் நேர் விளைவாகும், தோழனே!
திட்டம் என்னவெனில், நீ எனக்காக பணி ஒன்றை மேற்கொள்கிறாய்?
சவக் குழிகள் தோண்டும் பணியா?


பாரடைஸ் விஜயம்!
ஏகப்பட்ட பிணங்கள் விழுகின்றன இல்லையா?
நான் சொல்ல வந்ததே வேறு
எனக்கு ஒரு மானேஜர் தேவை
ஊய்!
வேடிக்கை பேச்சா?
இல்லை!
நகரில் உள்ள தொழில் முறை சூதாடிகளின் இலாபத்தில் 10 சதவீதத்தை வசூலிப்பதென்று தீர்மானித்துள்ளேன. நான் தீர்மானித்துள்ளேன். நான் சொல்கிறபடி செய்தால் சரி பாதி உனக்கு;
வாட்!?
இலாபத்தில் பத்து சதவிகிதமா? நடக்கிற காரியமா?
அவர்களை என்ன இளிச்ச வாயன்களென்று நினைத்தாயா? சுட்டுத்தள்ளிவிடுவார்கள். என்னிடம் கேட்டாலும் அதைதான் செய்வேன்!
எவ்வளவு இலாபம் இன்றைக்கு?
சுமார் 200 டாலர்கள்.
இருபதை இப்படிக் கொடு!


மனதில் நீ என்னதான் நினைத்...ஹே!
டுமீல்!
20 டாலர்கள், நில்ஸன்-இல்லை என்றால், அடுத்த தோட்டா உனக்கு
துப்பாக்கியை பையில் போடு-20 டாலர்கள் தந்து விடுகிறேன்.
சமர்த்து!
பார்ஸன்!
யிப்ப்!
?
!
ஒரு குறிப்பேடு வாங்கி வா. F.P. இயங்க தொடங்கி விட்டது. முதல் வரவை எழுத வேண்டும்.
F.P. - என்றால்?
Friends Protection அதாவது- 'நண்பர்-களுக்குப் பாதுகாப்பு' -பெயர் எப்படி?
படு பிரமாதம்!
தனக்குள் மெள்ளச் சிரித்தவாறு கார்ஸன் அகன்றதும் மீண்டும் நில்ஸனின் பக்கம் திரும்பினார் டெக்ஸ்-
நான் முதலில் சொன்னது பற்றி என்ன தீர்மானித்தாய்?


ஆபத்தான முயற்சி! அவர்கள் உன்னை சும்மா விடமாட்டார்கள்.
ஒரு சிலர் மானுவலின் ஆட்கள்.
ப்பூ!
பணப் பொறுப்பை மட்டும் நீ ஏற்றுக் கொள். மறுப்பவனை நான் கவனித்துக் கொள்கிறேன்.
என்ன பதிலைக் காணோம்?
சரி சொல்லாவிட்டால் விடவா போகிறாய், ஹும்-தலை விதி!
உன்னை நம்பலாமா?
வாக்கு தவறுபவனல்ல இந்த நில்ஸன்!
இந்தா-உன் 20 டாலர்கள்.
கம்பெனி மானேஜர் பங்கு தரவேண்டியதில்லை.
எப்போது ஆரம்பிக்கிறோம்?
இப்போதே! அனைத்து சூதாடி-களின் பெயர் பட்டியலை தயார் செய். அந்த வேலை முடிந்ததும் போய் ஒவ்வொருவனாக சந்திப்போம்.
LONGHORN SALOON
அஸ்தமனதிற்-குள் கணிச-மான தொகை கைக்கு வந்து விடுவது உறுதி!


20 நிமிடங்களுக்கு பின்-
பட்டியல் ரெடி.
சபாஷ்!
இது-நம் புது கம்பெனியின் வெற்றிக்காக!
வெற்றியை அனுபவிக்க நாம் நீண்ட ஆயுளோடு இருப்போம் என்று நம்புவோமாக!
சரி- கிளம்பலாமா? முதலில் சுடுபவன் பக்கம்தான் நியாயம் இருக்கிறது என்ற பழமொழியை நினைவு படுத்திக் கொள்வோம்!
எமகாதகப் பயல்தான்!
காலை வேளை-
அருகிலுள்ள நபரிலிருந்து ஆரம்பிப்போமா?
ஓ!
இதற்கிடையே மானுவலின் இடத்தில்—
நகரில் வேறு யாரும் இல்லையா?
இல்லை! ஸ்டாண்டிங் கூட பணியை ஒப்புகொள்வானா என்பது சந்தேகமே...
அவனை விட ஜிம் செயல் வேகம் மிக்கவன். இருந்தும் அவனுக்குநேர்ந்த கதி தெரியுமில்லையா உனக்கு. எனவே ஸ்டாண்டிங் லேசில் ஒப்புக் கொள்ள மாட்டான்!
இரண்டாயிரம் அவனை சரிக்கட்டிவிடும்!
115



இரண்டாயிரமோ,இருபது ஆயிரமோ-அதை அனுபவிக்க உயிரோடிருக்க வேண்டுமே?
கேட்டுப் பார்!
வழிமுறையை அவனே தீர்மானித்துக் கொள்ளலாம்.
எனக்கு தேவை-கில்லர் ஒழிக்கப்படவேண்டும்.
இது-உங்களுடைய தேவை மட்டும் அல்ல!
போக்கர் ஜிம்முக்கு நண்பர்கள் ஏராளம்.கில்லரை பழிவாங்க ஏங்கிக் கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன்.
நீயே ஏன் முயற்சிக்க கூடாது?
தற்கொலை முயற்சியில் இறங்க நானென்றும் மடையனில்லை.
சரி,போய் ஸ்டாண்டிங்கை சந்தித்து நைசாக பேசி எப்படியாவது சம்மதிக்க வை!
என்னாலானதை முயன்று பார்க்கிறேன்-வரட்டுமா?
போய் வா, நெட்.
இதற்கிடையே—
நில்ஸன்! உன் அதிர்ஷ்டத்தை சோதித்துப் பாரேன்.
நோ,எட்!சூதாட்டத்தை நான் விட்டொழித்து விட்டேன்.



நிஜமாகவா?
நிஜம்தான் மிஸ்டர்!
சூதாட்டம் எவ்வளவு மோசமானது என்று எடுத்துரைத்து நில்ஸனை வழிப்படுத்திவிட்டேன். Friends' Protectionல் சேர்ந்திட்ட கையோடு உன்னோடு பேச வந்திருக்கிறான்.
?
எனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?-விளங்கவில்லையே!
விளங்கவில்லை?
கம்பெனிக்கு பணம் தேவை. எனவே, நகரிலுள்ள தொழில் முறை சூதாடிகள் அனைவரும் லாபத்தில் 10 சதவிகிதத்தை கம்பெனிக்கு தந்திட வேண்டும் என்று ஏகமனதாக தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.
வா...ட்? அடாவடித் தனமான...
உஷ்ஷ்! அலட்டிக் கொள்ளாதே.
சக நண்பர்களுக்கு ஒத்தாசை செய்ய வலிய கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பை நழுவ விடாதே!
அவர் சொல்றபடி செய் எட்! அது தான் உனக்கு நல்லது!
நீ கம்பி எண்ண வேண்டி வரும்.
அந்த கவலை உனக்கு வேண்டாம். கல்லறைக்கு போகும் பயணத்தை ஒத்தி போடுவது பற்றி யோசி!


எவ்வளவு வைத்திருகிருய்?
சுமார்...400!
எட் காலே-40 டாலர் என்று குறித்துகொள் எட்,எடு 40 டாலரை!
கொடுத்து தொலேக்கிறேன். ஆனல் மறுபடியும் நீ இங்கே காலடி வைக்கும்போது.....
இந்த பூச்சாண்டி வேலேயை! எல்லாம் விட்டுவிடு!
பதினேந்து புதைகுழிகள் தோண்டப் பட்டு தயாராக உள்ளன. அவசியப் பட்டால் மேலும் பல குழிகள் தோண்ட அங்கேஆட்கள் தயாராக நிற்கிருர்கள் -புரிகிறதா?
ஹம்ம்!
அடுத்தடுத்து பல சூதாடிகளே சந்தித்து வெற்றி ஈட்டிய பின்-
அடுத்து, பாரடைஸில் டாம் ஹுவரை பார்ப்போம்
ஓ.கே.
லேசில் வழிக்குவரமாட்டான் அதோடு நிறைய பக்கபலம் வேறு இருக்கிறது!
கவலேப் படாதே.
நீ பணத்தை வசூல் செய்-மிச்சத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்
RADISE
SALOON


கில்லர் சகாக்களோடு உள்ளே நுழைகிறான்.
துப்பாக்கியை எடுத்து தயாராக வைத்துக்கொள்!
பிரச்னை எழுந்தால் சுட்டுவிடவா?
யோசிக்காதே!
அவனை தீர்த்துகட்டினால், 2000 டாலர்கள் வெகுமதி.
குட்!
இதற்கிடையே-
ஹாய், டாம்!
ஹாய், ஹட்!
டெக்ஸ் கில்லரை சந்தித்திருக்கிறாயா?
கேள்விப் பட்டிருக்கிறேன்
நல்லது, எப்படி இருக்கிறது நிலவரம்?
சொல்லும்படியாக ஏதும் இல்லை-ஒன்றிரண்டு தோழர்கள் திடீரென்று செத்துவிட்டதை தவிர.


போக்கர் ஜிம்மையும், அவனது சகாக்களையும் குறிப்பிடுகிறாயா?
ஆம்.
நடந்ததை எண்ணி கவலை படுவதனால் என்ன பயன்? நடப்பதை பற்றி சிந்தி!
அம்மாதிரியான அசம்பாவிதம் மீண்டும் இங்கே நிகழாது. சூதாடிகளின் நலனுக்காக ஒரு சங்கம் அமைத்திருக்கிறோம்!
வேடிக்கை, பேச்சா?
இல்லை. சீரியஸாகதான் சொல்கிறேன்.
இப்போது முதல் நகரிலுள்ள அனைத்து தொழில்முறை சூதாடிகளுக்கும் போதிய பாதுகாப்பு உறுதி செய்யப்படும். அதற்காக அவர்கள் தங்களுடைய லாபத்தில் சிறுதொகை -10 சதவிகிதம் செலுத்த வேண்டும்.
10 சதவிகிதம் சிறு தொகையா?
அப்படித்தான் தீர்மானித்திருக்கிறோம்
தர மறுத்தால்?
யாரும் இதுவரை மறுக்கவில்லை.
நான், தர சம்மதிக்க மாட்டேன்!
ஊப்ப்!
கும்!



சூதாட்ட மேஜை மீது போய் 'தொம்'
மென்று விழுந்தான் ஹூவர்—
அஹ்...
ஏய்!
ஹூவரை தாக்குகிறான்!
இதோ-சுட்டு வீழ்த்துகிறேன்
ரூமீல்
ஆவ்வ்!
என்னை கொல்லும் நோக்கத்தோடுதான் வந்திருக்கக்கூடும்!
தோழர்களே ஹூவருக்கு ஆபத்து!
வாருங்கள், போய் உதவி செய்வோம்
கார்ஸன் செயலில் இறங்கினார்-
துப்பாக்கியை தூர எறியுங்கள்!
சைத்தானே!


இன்னுமா போடவில்லை? எச்சரித்தேனில்லையா?
டுமீல்!
ஆவ்!
மற்றவர்கள் சட்டென்று துப்பாக்கியை கீழே நழுவவிட்டார்கள்-
சுட்டுவிடாதீர்கள், தாத்தா!
??
தாத்தாவா!யார் தாத்தா என்று காட்டுகிறேன் இப்போது!
ஏய்ய்!
?
!
குருதிக்கொரு விலை!
இதற்கிடையே,டெக்ஸ் அட்டகாசம் புரிந்து கொண்டிருந்தார்-சூதாட்ட மேஜையில்—




● பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா? சராசரியாக ஆண்டொன்றுக்கு 1.36 மி.மீ. விதம் சாய்ந்து கொண்டே வந்த கோபுரம், 1981ம் வருடம் 0.73 மி.மீ. தான் சாய்ந்திருப்பதாகத் தகவல் வெளியிட்டிருக்கிருர்கள். புவிஈர்ப்பு சக்தி, தோற்றுவிட்டதோ?!

● 'கோழி கூவியது' என்று சொல்கிருேம்.

'அப்படிச் சொல்வது தவறு - கூவுவது சேவல் அல்லவா' என்பது சிலரது வாதம்.

எது சரி?

(ஆண் கோழியான) சேவலுக்கும், பெட்டைக்கோழிக்கும் பொதுவான சொல், கோழி என்பது. எனவே, கோழி கூவியது என்று சொல்வதில் பிழையில்லை.

● தன் வீரம் காரணமாக சரித்திரத்தில் நீங்கா இடம் பெற்றவள் லக்ஷ்மி பாய். இவள் ஜான்ஸியை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததால் ஜான்ஸியின் ராணி என்னும் பொருளில் ஜான்ஸி-கி-ராணி என்று குறிப்பிட்டார்கள். இதுவே பின்னர் மருவி ஜான்ஸி ராணி என்ருனது.

இன்றைக்கு பலரும் ஜான்ஸி ராணி என்றே பெயர் வைத்துக் கொண்டு விடுகிருர்கள்.



சரி, இன்றைய பங்கை எடு வெளியே!
ஹூவர் பணத்தை எடுத்து கொடுக்கும் போது, மானுவல் மறைவிடத்திலிருந்து வெளியே வருவதை டெக்ஸ் கவனித்து விட்டார்-
ஹலோ, மானுவலா? -இப்படி வா கொஞ்சம்
எதற்கு அழைக்கிறானோ -சண்டாளன்!
கண்களில் ஏன் அத்தனை பீதி?
என்னை கேட்கிறாயா?
என் வாடிக்கையாளர்கள் இது வரை இம்மாதிரி இழிவாக நடத்தப்பட்டதேயில்லை. என் கௌரவத்துக்கே பங்கம் ஏற்படுத்தி விட்டாய்!
ஸாரி, மானுவல். ஆனால் நான் மட்டும் பொறுப்பாளி இல்லை.
ஹூவர் என் ஆலோசனையை நிராகரிக்க முற்பட்டிராவிடில் எந்த அசம்பாவிதமும் நிகழ்ந்திராது.
ஆனாலும் உனக்கு நெஞ்சழுத்தம் அதிகம்
உன் ப்ளாக்-மெயிலை தட்டிக்கேட்க ஆள் இராது என்று நினைத்துவிட்ட உன் அறியாமையை என்ன என்பது?
நாவை அடக்கி பேசு!


நான் செய்வதை தப்பென்று சொல்ல கொஞ்சமும் யோக்கியதையில்லாத பயல் நீ! இந்த நகரையே சுரண்டிச் சுரண்டி தானே நீ கொழுத்துப் போயிருக்கிறாய்?
இது பிளாக்-மெயில் அல்ல. மனம் உவந்து அளிக்கும் நன்கொடை. பின்னொரு நாளில் நல்லகாரியத்துக்கு செலவிடப்படும் வைப்பு நிதி.
யாரோ விழுங்கி ஏப்பமிட போவது உறுதி!
தவறு! உண்மையை சொல்வதனால் இன்றைக்கே ஜிம்முக்கும் அவனோடு மாண்டுபோன சகாக்களுக்கும் மலர் வளையம் ஆர்டர் கொடுத்திருக்கிறோம்- கல்லறை மீது வைக்க
அதுமட்டுமல்ல, என்னை ஒழித்து கட்ட எந்த மடையனாலோ அனுப்பி வைக்கபட்ட சீனர்களுக்கும் மலர் வளையம் ஆர்டர் கொடுத்திருகேன்.
சீனர்களா? விளங்கலையே?
வேஷம் போடாதே மானுவல்! உன்னைபற்றி நன்றாகவே தெரியும் எனக்கு.
?
இந்த எளிய நகரத்தை மேலும் சாக்கடையாக நாறடிக்காமல் நீ ஒழிந்து போய்விடு! இல்லையேல், விளைவுகளுக்கு நான் பொறுப்பாளியல்ல
அந்த நல்ல நாள் அதிக தொலைவில் இல்லை என்றும் எச்சரிக்கிறேன்!
சண்டாளன்!



இன்னொரு அறிவுரை- யாராவது கூப்பிட்டால் யோசிக்காமல் ஜன்னல் வழியே எட்டி பார்க்காதே!
அடுத்த சில நிமிடங்களில் எவ்வித பிரச்சனையும் இன்றி நால்வரும் மீண்டும் சாலைவழி நடந்தனர்.
பட்டியலில் அடுத்து யார்?
ஹன்ஸன், நக்கெட் மதுபான சாலையில்.
அவன்தான் கடைசியும்.
குட்! அவனையும் பார்த்துவிட்டால், முடிந்தது வேலை.
ஆனால், நக்கட்டில்...
ஹன்ஸன்? அப்போதே மூட்டை முடிச்சுகளோடு நழுவிவிட்டானே. அவன் பதறியதை வைத்து கணித்தால், யாருமே அவனை விரட்டி பிடிக்க முடியாது.
பரிதாபம்!
இதற்கிடையே-
நன்றாக ஆலோசனை செய், ஸ்டாண்டிங்- இரண்டாயிரம் டாலர்கள்
ஹூம், பணம் -ஆசைதான்! ஆனால்...
சரி, அட்வான்ஸாக ஏதாவது...
நோ!


காரியம் முடிந்ததும் மொத்தப் பணமும் கையில் வந்துவிடும்.
சே, காலியாகி விட்டதே!
கவலை படாதே. நான் வரவழைக்கிறேன்.
க்ராஷ்!
வேண்டாம் நெட். அந்த காரியத்தில் இறங்கும் போது, புத்தி தெளிவாக இருப்பது நல்லது.
வாழ்த்துக்கள்!
ஹீரோத்தனமாக எதையாவது செய்ய எண்ணாதே. பின்னாலிருந்து தாக்கு-பயல் சரியான எமன், மறந்து விடாதே.
கேள்விபட்டேன் ஜாக்கிரதையாக நடந்து கொள்வேன்.
இரண்டு மணி நேரம் கழித்து, புதிய சங்கத்தில்-
சங்கம் வளர பருகுவோம்-இதை
சைத்தான் அருள் பாலிக்கட்டும்.
சைத்தான் எதற்கு-கையில் துப்பாக்கி இருக்கையில்.
இந்த கூத்தை இப்படியே நீடித்தால் துப்பாக்கிகள் கூட போதாமற் போகலாம்!



கூத்து அல்ல- நற்பணி நில்ஸன்!
நற்பணி! யாருமே அப்படி...
அதோ, டெபுடி வருகிறார்!
ஹே, பிப்! எங்களை தான் தேடி வந்தாயா?
கல்லுளி மங்கன்!
நாற்காலியை இழுத்து போட்டு உட்கார், சேர்ந்து பருகுவோம்.
வேண்டாம்! நின்றுகொண்டே பேசுகிறேன்.
அமர்ந்தால், நானும் உங்கள் சங்கத்தில் உறுப்பினராகி விட்டேனோ என்று சந்தேகபடுவர்.
ஓ, உன் காதுக்கு எட்டி விட்டதா அதற்குள்?
லேசுப்பட்ட ஆர்ப்பாட்டமா செய்து இருக்கிறாய்-தெரியாமல் போக?
ஆர்பாட்டமல்ல பிப். அடக்கமான சமூகப் பணி.
நீயாகவே வந்து சேர்ந்தது எங்கள் பணியை சுலபமாக்கி விட்டது. நீதான் எங்கள் பொருளாளர். பணத்தை உன்னிடமே கொடுத்து வைக்க தீர்மானித்துள்ளோம்!
வாட்?


நான் வேறுமாதிரியாக...
இதுதான் நிஜம், பிப்!
யாரோ தவறாக சொல்லியிருக்கிறார்கள், உன்னிடம். இந்த பணம் நிஜமாகவே நற்பணிகாகதான்
அப்படியே வச்சிக்குவோம் ஆனால் .45 ரக துப்பாக்கியை காட்டி அல்லவோ வசூலிக்கப் பட்டிருக்கிறது!
பயங்கர பொய்!
யாராவது அப்படி என்மீது குற்றம் சாட்டினார்களா?
பரவாயில்லையே!
இல்லை! ஆனால் சாட்சிகள் உண்டு.
ஹே! சரியான கோணத்தில் பார்க்கத் தெரியாத மூடர்கள்!
உண்மை என்னவெனில், சில உறுப்பினர்கள், பணத்தை கொடுக்கு முன், என் துப்பாக்கிகையாளும் திறமையை காண விரும்பினர்.
அதைப்போய் தவறாக புரிந்து கொண்டு...
சாதுரியமான பேச்சு!
சரி, நிஜக் கதைக்கு வருவோம்
அதை நான் சொல்லமாட்டேன் பிப். உண்மை கூர்மையான கத்தியைப் போல நம்மையே பதம்பார்த்திடலாம்-சில சந்தர்ப்பங்களில்
அச்சுறுத்தலா?



மனதில்பட்டதை சொன்னேன். அவ்வளவுதான்! நமக்-கிடையே என்றைக்குமே பகைமை இருக்க முடியாது.
உன்னை புரிந்து கொள்ளவே முடியவில்லை!
காலம் வரும் போது தானாக புரியும். சரி, பணத்தை தரட்டுமா?
நோ! தொடமாட்டேன். இன்னொன்று...
?
மறுபடியும் யாரையாவது குறி வைத்து நீ துப்பாக்கியை நீட்டினால், கைது செய்ய தயங்கவே மாட்டேன்!
நியாயமான பேச்சு!
வேகமாக வெளியேறினார் பிப்-
ஆபத்தான போக்கு
நான் அப்படி நினைக்கவில்லை
ஷ்யூர்! பிப் பணத்தை வாங்கி கொண்டிருந்தால் வம்பாகி விட்டிருக்கும்.
அப்படி அல்ல!
பிப் சம்மதித்து இருந்தால் மொத்த பணத்தையும் தூக்கி கொடுத்திருப்பேன்!
மொத்தத்தையுமா?
உன் பங்கு போகத்தான்.
ஒரு இழவும் புரியவில்லை!



புரியும் பிறகு ஒரு நாள்! அன்றைக்கு வியப்பினால் நீ ஊமையாகிப் போய் விடுவாய்!
வியப்பா- அதிர்ச்சியா?
என்னிடம் நாணயமாக நடந்து கொள்! என்றைக்குமே அதிர்ச்சி ஏற்படாது உனக்கு!
நம்புகிறேன் உன்னை!
நானும்தான்- உன்னை!
அரைமணி நேரம் கழித்து- லாங்ஹார்னில்-
சைனாக்காரியா?
ஆம்! அரை மணி நேரம் இருக்கும்- உன்னை விசாரித்தாள்!
ஏதாவது ஒரு சதி வலையை நோக்கி என்னை ஈர்க்கும் நோக்கமாக இருக்கலாம்!
அல்லது நேராக சுட்டு வீழ்த்தவும் வந்திருக்கலாம்!
டாம்-அவளுடைய கையில்-
துப்பாக்கி இருக்கவில்லை!
கடிதம் வைத்திருந்தாள். உனக்கு கொடுக்க என்று சொன்னாள்!
இதற்கிடையே-
ஹ்ம்ம்- அந்த ஆளின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்குரியவை!


ரெஸ்டாரண்டிலிருந்து டெக்ஸை பின் தொடர்ந்து வந்தவன் இன்னமும் லாங்ஹார்னையே சுற்றி வந்து கொண்டிருக்கிறான்!
டெக்ஸ் வெளியே காலடி வைத்ததும் அதிரடியாக தாக்கும் நோக்கமாக இருக்கலாம்!
கோச்சு வண்டியின் பின்னே நின்ற ஆசாமிக்கும், டைகருக்கும் நேரம் மெள்ள ஊர்வது போல் அலுப்பூட்டியது.
அதோ-டெக்ஸ்
அவனேதான்-ஒரு வழியாக-!
ஜாக்கிரதை டெக்ஸ்-அந்த கோச்சு வண்டி-
?
டுமீல்! டுமீல்!
டுமீல்! டுமீல்!
அவன்தான் ஸ்டாண்டிங்! காசுக்காகக் கொலை செய்யும் நிபுணன்!


ஹாஆஆ!
காலில் குண்டடிபட்டு விழுந்த பிறகும் ஸ்டாண்டிங்கிற்கு தோல்வியை ஒப்புக் கொள்ள இஷ்டமில்லை!
சொர்க்கமோ- நரகமோ- தனியாக போக மாட்டேன்!
டுமீல்!
அவன் அனுப்பிய தோட்டாக்களை தவிர்த்துக் கொள்ள, டெக்ஸ் திணறிப் போனார்-
லேசுப்பட்டவனில்லை போலும்-காலை குறி வைக்காமல் தலையை நான் குறி வைத்திருக்க வேண்டுமோ?
அஹ்!
டிங்!
நகராதே- இல்லையேல் என்றைக்குமே நகர முடியாமல் பண்ணி விடுவேன்!
விவகாரம் முடிவுக்கு வந்து விட்டது!
உங்களோடு இருப்பது எரிமலையின் வாயில் உட்கார்ந்திருப்பதற்குச் சமம்!



இதற்கிடையே தெருவில் கூட்டம் கூடியது-
அவன் தான்!
இம்முறை- ஸ்டாண்டிங்!
புதைகுழி தோண்டுபவனுக்கு ஓய்வே கிடையாது!
என்ன தயக்கம்? தீர்த்துக் கட்டு?
என் நோக்கம் அதுவல்ல!
இவனைத் தெரியுமா?
பெயர்- ஸ்டாண்டிங்! போக்கர் ஜிம்மின் ஆள்!
அப்படியானால் இவனை அனுப்-பியதுயாரென்று கேட்கத் தேவை யில்லை!
என் உயிருக்கு என்ன விலை பேசினான்?
ம்- சொல்! தொகை எவ்வளவு?
உன் நேரம் தான் வீணாகும் கில்லர்?
கில்லர்? என் சகோதரனை கொன்ற பாதகன்!
சொல்ல அச்சமாக இருக்கிற-தாக்கும்- பரவாயில்லை!


சரி-நான் சொன்ன தாக போய்ச் சொல் மானுவலிடம்.
அடுத்த 24 மணி நேரத் திற்குள் நகரை விட்டு அவன் வெளியேறி ஓடிப் போகாவிடில், சவக் குழி தோண்டுபவன் அளவு எடுக்க அங்கே வருவான் என்று சொல்—போ!
யாராவது டாக்டரிடம் தூக்கிப் போங்கள்-இவனை!
? ?!?!?!
அப்போது-
என்ன கலாட்டா இங்கே?
நடந்து முடிந்த பிறகு வந்திருக்கிறீர்கள் ஷெரீப்!
தன்னை தாக்க வந்தவனை ஏற்கனவே கில்லர் வீழ்த்தி விட்டான!
கில்லரைப் பிடித்து சிறையில் போட்டால் எனக்கு நிம்மதி!
வாழ்க்கை கசந்து விட்-டதாக்கும்?
அதோ வருகிறார் சட்ட பாதுகாவலர்!
ச்சூ!
ஷெரீப்போடு பேச, டெக்ஸும் மற்றவர் களும் திரும்பிய போது சட்டென்று டெக்ஸை நோக்கிப் பாய்ந்தாள் லின்-ஸி கையில் விஷக்கத்தி யோடு! நில்ஸன் இடையில் புகுந் தான்—
ஜாக்கிரதை!
டெக்ஸ்!
135



அஹ்!
தட்!
லின் எபியின் கையிலி ருந்து எகிறிப் பறந்த கத்தி பர்குஸனின் தோளில் இறங்கியது-
ஆவ்!
நச்சுப் பாம்பே!
விடு - என்னை!
நான் பயந்த மாதிரியே நடந்து விட்டது!
இறுகப் பற்றிக் கொள் இவளை- வேறு ஆயுதம் ஏதாவது வைத்தி- ருக்கிறாளா என்று சோதிக்கிறேன்!
இதோ பிடுங்கி விட்டேன் ஷெரீப்!
டாக்டரை கூப்பிடுங்கள்- ஒரேயடியாக எரிகிறது!
அதிர்ஷ்டசாலி நீங்கள் ஷெரீப்- இது உங்கள் தொண்டையில் பாய்ந்திருந்தால் இந்நேரம் போய்ச் சேர்ந்திருப்பீர்கள்!
ஐயோ-என் புஜம் மரத் துப்போய் விட்டது- ஒரேயடியாக!
?
என்ன ஆச்சு-எனக்கு? மயக்கமாக வருகிறது- நிற்கக்கூட திராணி- யில்லை- என்னைப் பிடித்துக் கொள்ளுங்-
?
அட-மயங்கி விட்டாரே!
மெதுவாக கீழே படுக்க் வை-!


காயம் பலமோ?
இல்லை- சதையை கிழித்திருக்கிறது. லேசான மயக்கம்!
மயக்கமா? இல்லை- உயிர் போய் விட்டது!
ஷெரீப்பின் இதயத் துடிப்பை சோதித்தார் டெக்ஸ்-
ஹூம்- பாவம்!
உடலை வண்டியில் வீட்-டிற்கு எடுத்துச் சென்று ஒப்படையுங்கள்!
இறந்து விட்டாரா?
யெஸ்...!
பாவம் பர்குஸன் திறமை போதாதே தவிர மற்றபடி சுபாவமான ஆள்!
விஷம் தோய்ந்த கத்தியோ!
ஆம்- உன்னைக் குறி வைத்-தேன். என் சகோதரனுக்-காகப் பழி தீர்த்துக் கொள்ள!
உன் சகோ தரனா? இது என்ன புதுக் கதை?
ஹோட்டல் அறைக்கு அழைத்து வாருங்கள் அவனை! விசாரிப்போம்!
137



பின்னர் ஹோட்டல் அறையில்-
பேசு- பெண்ணே! பழி தீர்த்துக்கொள்ள வந்ததாகச் சொன்னாயே- விபரமாகச் சொல்!
உன் சகோதரன் பெயர்?
ஹோ ணான்! நேற்றிரவு உங்களால் கொல்லப்பட்ட நபர்!
நேற்றிரவு நம்மை தாக்கிய கும்பலில் ஒருவன்-
ம்ம்-
பொய்- என் சகோதரன் உங்களைத் தாக்க காரணமே கிடையாது!
பதறாதே! பொய்யன் என்று எனக்கு பட்டம் கட்டுமுன் நான்சொல்வதையும் சற்று கவனமாகக் கேள்! பார்த்-தால்சாதுவான பெண்ணாகத் தெரிகிறாய்!
உன்னை இங்கே அனுப்பி வைத்த நபர்தான் உன்னிடம் நிஜத்தைத் திரித்துக் கூறியிருக்கிறான்!
?
இப்போது நீ ஷெரீப்பையே கொன்று விட்டாய்!
எதையும் மறைக்காமல் உண்மைகளை நீ வெளி-யிட்டால் இந்தகொலைக் குற்றத்திலிருந்து நீ விடுபட நான் உதவ முடியும்!
138


டெக்ஸின் பேச்சும், தோரணையும் லின்-ஸியை நம்பிக்கை கொள்ள செய்-தது.நடந்ததை அப்படியே சொல்லி முடித்தாள்-
இதுதான் நடந்தது-இப்போது சொல்லுங்கள்-என் சகோதரனை ஏன் கொன்றீர்கள்?
ம்ம்- அது ஒரு நீண்ட கதை!
டெக்ஸ்- பார்த்துப் பேசு!
பதறாதே நண்பனே- இரகசியங்களை இனியும் மூடி மறைக்க வேண்டிய அவசியமேயில்லை!
யாரோடு கூட்டுக் சேர்ந்திருக்கிறோம் என்ற உண்மைதெரிய வரும் போது நில்ஸன் அதிர்ந்து போவது உறுதி!
இதோ- என் அடையாள நட்சத்திரம்?
வாட்?
?
ரேஞ்சரின் கூட்டாளியா நான்?
வருத்தப்படுகிறாயா?
இல்லை அதிர்ச்சி! என் வாழ்நாளில் முதன்முறையாக சட்டத்தின் பக்கம் சேர்ந்து கொண்டிருக்கிறேன். என்னையும் அறியாமல்!
கட்சி மாறும் எண்ணம் வராமலிருந்தால் சரி!


எதற்காக எங்களோடு கூட்டுச் சேர்ந்தாயோ அதை இனி நீ மறந்து விடலாம்! உன் ஒத்துழைப்புக்கு பரிசாக இந்நகரில் தொடர்ந்து வாழப் போகும் ஒரே ஒரு மாஜி சூதாட்டக்காரனாக இருப்பாய் நீ!
?
மற்றவர்களை துரத்தியடிக்கப் போகிறீர்களா?
அதுவும் இன்றைக்கே! 24 மணி நேரத்திற்குள் அவர்கள் இடத்தை காலிசெய்து விட்டு ஓடிப்போகவேண்டும் என்று எல்லா சூதாட்ட அரங்குகளிலும் தெரு முனைகளிலும் போஸ்டர் ஒட்டப் படும்!
HOTEL
எச்சரிக்கையை அலட்சியம் செய்பவர்களின் உயிருக்கு பிறகு எந்த உத்திரவாதமும் கிடையாது!
நகருக்கு நல்லகாலம் பிறக்கப் போகிறது!
அதற்கான தொடக்கம் ஏற்கனவே கொடுக்கப் பட்டு விட்டது!
அதை முழுமையாக்கும் முயற்சியில் நம்மை தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்வோம்!
வெரி-குட்!
எங்கள் ஜனங்களை ஏதும் செய்து விடாதீர்கள். ப்ளாக்-டிராகனின் ஆணையை மீற முடியாமல் ஏதேதோ செய்கிறார்கள்- மற்றபடி அவர்கள் தீயவர்கள் அல்ல!
துறைமுக பகுதியில் ப்ளாக்-டிராகன் வைத்தது தான் சட்டம்!
ஓகோ!
சீனர்கள் மீது ஆதிக்கம் செலுத்த அடக்குமுறையையும் பலாத்காரத்தையும் பிரயோகிக்கிறானில்லையா?


இங்கே மானுவல்- அங்கே ப்ளாக்-டிராகன்! அவர்க-ளுக்கு கேடு காலம் வந்து விட்டது வின்-ஸி!
அங்கே என்னை திரும்ப போகச் சொல்லாதீர்கள்!
கவலைப்படாதே- வாங்கும் அவனு-டைய கூட்டமும் பிடியினுள்சிக்கும் வரை நீ இங்கே-யே இருக்கலாம்!
இதற்கிடையே-
நகரை விட்டு வெளியேற 24 மணி நேரம் கெடு வைத்திருக்கிறானாக்கும் எனக்கு?
ஸ்டாண்டிங் அப்படித்-தான் சொன்னான்?
அந்த மடையன் எங்கே?
ஒடிந்த காலும், உருக்குலைந்த கையுமாக டாக்டரின் வீட்டில்!
கில்லர் அவனை ஒரேயடியாகத் கொன்றுதொலைத்திருக்கலாம்!
என்ன செய்யப் போகிறாய் மானுவல்? நகரை விட்டு வெளியேறி விடப் போகிறாயா?
உனக்கென்ன பைத்தியமா? இந்த சலசலப்புக்கெல்லாம் அஞ்சுகிறவனல்ல இந்த மானுவல்?
மேலிடத்தில் தெரிந்-தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சொல்லியனுப்பப் போகிறேன்!
கில்லர் போன்றொரு துஷ்டன் இந்த நகரின் அமைதியை கெடுத்து ஆர்ப்பாட்டம் பண்ணுவதை இனியும் சகித்-துக் கொள்ள முடியாது!
141


பர்குஸனின் மரணம், அரசாங்க ஏஜெண்டுகளை வரவழைக்க ஒரு முகாந்திரமாக பயன்படும்!
வருகிறவர்கள் நம் விஷயத்திலும் ஊடுருவ முனையலாம்!
மேலிடத்து ஆதரவு நமக்குண்டு. கில்லர் கும்பல் கம்பி எண்ணப்போவது உறுதி. அவர்கள் ஒழிந்த பின் நம் தொழிலை இன்னும் விறுவிறுப்பாக நடத்தி பணம் குவிக்க வகையுண்டு!
முதலில் ஷெரீப்பின் அலுவலகத்திற்கு வந்தார்கள். உதவி ஷெரீப் பிப் பொறுப்பிலிருந்தார்-
அந்தப் பயல் கெடு வைத்திருக்கிறான்-யாருக்கு-எனக்கு! இந்த மானுவலுக்கு!
நான் என்ன செய்யவேண்டும்?
என்னை கேட்கிறாயா? சரியாப் போச்சு! சட்ட ஒழுங்கை பராமரிக்கும் அதிகாரம் உனக்கில்லையா?
அவசரப் படாதே!
இன்னும் ஷெரீப்பாக நான் பதவி ஏற்றுக் கொள்ளவில்லை- என் அதிகார வரம்பு மிக குறுகியது!
அத்தோடு அவனிடமிருந்து வெறும் மிரட்டல் தானே வந்திருக்கிறது!
SHERIFF
அவன் காரியத்தில் இறங்கும் போது தான் நான் தலையிட முடியும்!


பொறுப்பை தட்டிக் கழிக்கும் பேச்சு! எனக்கு வரவிருக்கும் ஆபத்தை நீ புரிந்து கொண்-டதாகவே தெரியவில்லை!
புரியாமலில்லை!
நீ மட்டும் சட்ட விரோத காரியங்களின் மூலம், எங்களையும் மிஞ்சிய சக்தியாக வளர்ந்திராவிடில், இந்நேரம் உனக்கு உதவக்கூடிய வகையில் சட்ட ஒழுங்கு இயந்திரம் சீராக இயங்கிக் கொண்டு இருந்திருக்கும். எங்களுடைய இன்றைய இயலாமைக்கு நீ தான் பொறுப்பாளி!
என்ன ஒரு பொறுப்-பற்ற வாதம்!
நகர பிரமுகரை ஒரு எத்தன் மிரட்டுகிறான். நீயோ அமர்த்தலாக உட்கார்ந்து கொண்டு தர்க்க வாதம் பண்ணிக் கொண்டிருக்கிறாய். நீயெல்லாம் ஒரு போலீஸ் அதிகாரி... தூ!
கெட் அவுட்!
உன் மென்னியை நான் முறிக்குமுன் ஓடிப்போய் விடு இங்கிருந்து!
அடேய் உன்னை-
வாருங்கள் மானு-வல்- போய் விடலாம்!


விரைவில்!
டெக்ஸ் வில்லர் தோன்றும்
„இரத்த வெறியர்கள்!"
லயன்
காமிக்ஸ்



மரணக் கெடு!
இதற்காக பிறகு வட்டியும் முதலுமாக வாங்கிக் கட்டிக் கொள்ளப்போகிறுன்- என்னிடமிருந்து!
ஒரு டெபுடி தான்- என்ன செய்ய முடியும்- விடுங்கள்!
கில்லரை சமாளிக்க இவனுல் எப்படி முடியும்?
அதற்காக?
ஒரு திருப்பத்தில்-டெக்ஸ் எதிர்ப்பட்டார்-
எங்கே போகிருய் மானுவல்? நாளைய தேதிக்கு கோச்சு வண்டி பயண டிக்கட் ரிசர்வ் செய்யத்தானே?
கில்லர் !
ஊப்!
என்ன பதிலைக் காணேம்?
நான் எதற்கு பதில்சொல்ல வேண்டும்?
ஸ்டாண்டிங்கை அனுப்பியதற்காக மன்னிப்பு கோர நீ விரும்பக்கூடும் என்று நினைத்தேன்!
பெரிய தப்பு பண்ணுகிருய் கில்லர்!



அட- சரிதான் போடா!
ஹே- நோ!
நீ வராதே அங்கேயே நில்!
இவனுடைய துப்பாக்கியை பறி நெட்!
?
இனியும் நீ இங்கே கொட்டமடிக்க அனுமதிக்க முடியாது இப்போதே மூட்டை முடிச்சுகளோடு ஓடிப் போய்விடு! இல்லையேல் நாளை இந் நேரம் உன் சவ ஊர்-வலம் நடக்கும்!
என்னை வெளியேறச் சொல்ல உனக்கு ஏது அதிகாரம்?
இங்கே இஷ்டத்திற்கு அட்டூழியம் புரிய உனக்கு மட்டும் அதிகாரம் இருக்கிறதாக்கும்?
பொறு- கில்லர்! நாம் ஒன்று சேர்ந்து கொள்வோம்- நிதானமாக யோசி!
வெட்டிப் பேச்சு! உதவாக்கரை நீ - உன்னோடு எனக்கு என்ன கூட்டு!
ப்ளாக் ட்ராகனிடம் போய் உதவி கோர எண்ணாதே, பலிக்காது!
நாசமாகப் போயிற்று - இவனுக்கு எப்படி ப்ளாக் டிராகனைப் பற்றித் தெரியும்?


ம்ம்- எழுந்து ஓடிப்போ சொறி நாயே!
நாளை இரவு உன்னை இங்கே பார்த்தேனென்றால் தோலை உரிக்காமல் விட மாட்டேன் ஜாக்கிரதை!
இன்னும் 24 மணி நேர அவகாசம்தான்- ஊரை விட்டு ஓடிப் போக! மறந்து விடாதே!
வாருங்கள்- போகலாம்!
அவர்கள் திரும்பி நடந்தபோது யாரோ அழைப்பது கேட்டது.
டெக்ஸ்-ஒரு நிமிடம் இங்கே வரமுடியுமா?
ஓ- அரெஸ்ட் செய்யும் உத்தேசமா?
சேச்சே, சும்மா பேசலாமே என்று அழைத்தேன்!
ம்ம்-
உட்கார்- சுருட்டு?
வேண்டாம்- நன்றி! என்ன சொல்?


ஸ்டாண்டிங் விவகாரமா?
இல்லை!
சுவாரஸ்யமான கதை ஒன்று- பொறுமையாக கேள்!
பர்குஸனுக்கு நேர்ந்த கதியை கேள்விப்பட்ட நான் பொறுப்பை ஏற்க இங்கே ஓடோடி வந்தேன்!
மேஜை மீதும், உள்ளே டிராயரிலும் கிடந்த ஏகப்படட கடிதங்களையும் ஃபைல்களையும் அடுக்க நான் முற்பட்டேன்!
தேவையில்லாத பழைய பைல்கள் ஏராளமாக அகப்பட்டன!
சுற்றி வளைக்காமல் விஷயத்திற்கு வாபிப்!
பொறுமை-பொறுமை! அவற்றினூடே 'பார்டர் மாகஸினின்' பழைய பிரதி ஒன்றும் அகப்பட்டது. அதில் இருந்த ஒரு கட்டுரை என் கவனத்தை ஈர்த்தது!
ம் மேலே சொல்-
அந்தக் கட்டுரையில் சான் பிரான்ஸிஸ்கோவை சேர்ந்தசிலரேஞ்சர்களின் சாகஸம் பற்றி விரிவாக சொல்லப் பட்டிருந்தது-
பயல் தெரிந்து கொண்டு விட்டான்!


இதோ பார்- அவர்களின் பெயரும், புகைப்படமும்!
நான் அதை பார்க்க வேண்டும் என்பதில்லை பிப்!
சரி இனி நீ சொல்-நான் கேட்கிறேன்!
பிறகு ஒரு நாள் சொல்லலா-மென்றிருந்தேன், நீயாகவே தெரிந்து கொண்டுவிட்டாய். மிச்சத்தையும் இப்போதே சொல்லி விடுகிறேன்!
குட்!
தாங்கள் அங்கே வர நேரிட்ட காரணத்திலிருந்து தொடங்கி, மானுவலுக்கும் ப்ளாக் ட்ராகனுக்குமிடையே இறுக்கமான தொடர்பு உண்டென்பதை தாங்கள் கண்டறிந்திருப்பது வரை விப ரமாக எடுத்துரைத்தார்-
இதுதான் விஷயம்!
ரேஞ்சர்கள் இப்படி வந்து சேரக் கூடும் என்று முன் கூட்டியே யூகித்திருக்க வேண்டும் நான்
இங்கே நிலவரம் கைமிஞ்சிப் போய்விட்டது. பர்குஸன் அப்பாவி மனிதர்-சமர்த்து காணாது!
மானுவலோடு உடன்பாடு உண்டோ?
கிடையாது! அந்த அளவுக்கு தரம் கெட்டுப் போகிறவரல்ல! நரி வலம் போனாலும் சரிஇடம் போனாலும் சரி, மேலேவிழுந்து பிடுங்காத வரை சரி என்று எண்ணி இருந்து விட்டார்!
ஓகோ!
நகரில் நடக்கும் அட்டூழியம் தெரியும் அவ-ருக்கு. அதை அடக்க முயன்றால் தனக்கு என்ன நேரிடும் என்றும் தெரியும்!
மாதம் 40 டாலர்கள்-சம்பளம் உயிரை பயணம் வைக்க போதாதுதான்!


எனக்கு 30 டாலர்கள்தான் சம்பளம் ஆனால் சட்ட ஒழுங்கை பராமரிக்க தேவையான எந்த நடவடிக்கை எடுக்கவும் நான் தயார்!
பேஷ்!
விபரீத விளைவுகள் எதையும் கற்பனை செய்து கொண்டு பீதியடையாதே!
நாம் இனி இணைந்தே செயல்படுவோம்!
நீ சொல்கிறபடியே நடக்கட்டும்!
பர்குஸன் மாண்டு போனதால் இனி போலீஸ் பொறுப்பு உன்னுடையது! எங்கள் வழியில் புலனாய்வை நாங்கள் தொடருகிறோம். நாங்கள் யார் என்ற உண்மை தொடர்ந்து இரகசியமாகவே இருக்கட்டும்!
மானுவலை என்ன செய்வதாக உத்தேசம்!
ஒன்று- சகாக்களோடு அவன் ஊரை விட்டே ஓடிப் போக வேண்டும். அல்லது அவன் உயிரோடு வெளியேறவே முடியாது போய் விடும்!
மேலிடத்தில் ஆட்கள் உண்டு அவனுக்கு!
தெரியும், ஆனால் அவாகள் தலையிடு முன் இவனை ஒழுங்கு பண்ணி விடுவேன். ஓர் உதவி செய்யவேண்டும்!
சொல்!
நேராக தந்தி ஆபீஸுக்குப் போ- மானுவல் ஏதாவது செய்தியனுப்ப முனைந்தால் அதை முடக்கப்போட ஏற்பாடு செய்!
ஓ- ஷ்யூர்!


பிப் தந்தி ஆபீஸை நோக்கி, மற்றவர்-கள் அச்சாபீஸ் ஒன்றை நோக்கி சென்றார்கள். ஒரு மணிநேரம் கழித்து நகரில் எல்லா சுவர்களிலும் போஸ்டர் ஒன்று ஒட்டப்பட்டது-
எச்சரிக்கை!
திருடர்கள், போக்கிரி-கள், சமூக விரோதிகள் தொடர்ந்து உயிர் வாழ ஆசையிருந்தால் உடனே டெக்ஸாஸ் நகரைவிட்டு ஓடிப்போய் விடவேண்-டும்-
-மக்கள் நல குழு
அரைமணிக்குப் பின், டெக்ஸின் அறையில்-
வேறு யாரையும் தெரியாதா, உனக்கு?
இல்லை ஸார், வாங்கையும் மற்ற ஐவரையும் மட்டுமே தெரியும்!
மற்றவர்கள் ப்ளாக்-டிராகன் கூட்ட-மைப்பில் சேர்ந்தது அமைதியாகப் பணியாற்றத்தான்! யாராவதுஇப்படி ஊடுருவி அவர்களுடைய சுமையை ஏற்றுக் கொள்ள முன் வந்தால் கை நீட்டி வரவேற்பார்கள்!
கிட்- நீ போய் டைகரை தேடிப் பிடித்து அவனிடம் நடந்ததை விபரமாக சொல்! இன்றிரவு கால்வெஸ்டன் செல்லும் சாலை யில் நம்மோடு வந்து சேர்ந்து கொள்ளச் சொல்!
யெஸ் டாடி!
எங்களோடு வர உனக்கு இஷ்டம்தானே-நில்ஸன்?
ஷ்யூர்! அந்த துறைமுகப் பகுதி எனக்கு அத்துப்படி- உங்களுக்கு வழிகாட்டி உதவ முடியும்!


வாழ்நாளில் நாம் என்றைக்-குமே மறக்க முடியாத இர-வாக இருக்கப் போகிறது இன்றைய இரவு!
இதற்கிடையே-
என்ன செய்யப் போகிருய் நீ!
எதுவுமில்லை! என் செய்தி கிடைத்ததும் என் நண்பர்கள் உடனே அரசாங்க அதிகாரிகளை இங்கே அனுப்பி வைப்பது நிச்சயம்!
ஆனல்-அப்போது-
மானுவல்-ஹே-மானுவல்-
என்ன விபரீதம்?
ரெட்!
இதைப் படி; கில்லர் குழு விநி-யோகித்துக்கொண்டு போகிறது!
? ?
அடாவடித்தனம் பண்ணுகிருனே!
படு பாவி!
சரியாகப்படவில்லை எனக்கு!
மிரட்சியடையாதே!
அவன் என்னை மட்டும் அச்சுறுத்தி மிரட்ட-வில்லை- மற்றவர்களை-யும்தான்! அவர்களை கூட்டுச் சேர்த்து வலுவான எதிர் அணியை உருவாக்குவோம்!


சம்பந்தப் பட்டவர்கள் அனைவருக்கும் தகவல் அனுப்பி இன்றிரவு பாரடைஸுக்கு வரச் சொல் நெட்!
ஒன்று திரண்டு போராடினால் பயப்பட ஏதுமில்லை என்று கூறு! அந்த சண்டாளனை எப்படியும் ஒழித்துக் கட்டியாக வேண்டும்! செலவு முழுக்க என்னுடையது என்றும் சொல்!
இதற்கிடையே-
இந்த ஒரு செய்தியைத்தான் அனுப்பச் சொன்னான்?
ரெட்- நீ என்னோடு வா! கால்-வெஸ்டனில் உள்ள ஒரு நபருக்கு செய்தி ஒன்றைஎடுத்துச் செல்!
ஓ.கே.
ஆமாம் ஸார்! ஆனால் நான் இந்த செய்தியை உரிய நபருக்கு அனுப்பாமல் உங்களுக்கு தெரிவித்த விபரம் வெளியே தெரிந்தால் என் வேலைக்கே ஆபத்து வந்து விடுவது நிச்சயம்!
பயப்படாதே ஸாண்டி! நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்! அனைத்துக்கும்- உனக்கு ஏதும் நேரிடாது!
15-நிமிடங்களுக்குப் பின், பிப் சென்று டெக்ஸை சந்தித்தார்-
ரொம்ப பிஸியோ? 'துப்புரவு' வேலையை எப்போது தொடங்கப் போகிறீர்கள்- இரவிலா?
யெஸ். ஆனால் டகரில் அல்ல!


இன்றிரவு கால்வெஸ்டனில் உள்ள சீன குடியிருப்புப் பகுதிக்கு போகிறோம்!
ஏதாவது விருந்து கோலாகலமா?
நீயும் வருகிறாயா?
இந்த நட்சத்திரம் நீ நடத்தும் தனிபார் போராட்டத்தில் கலந்து கொள்ள என்னை அனுமதிக்காது-ஆனால் வேறு வகையில் உனக்கு நான் உதவ முடியும்!
எப்படி?
கால்வெஸ்டன் ஷெரீப்பும், டெபுடியும் உன் வழியில் இடைஞ்சலாக வராமல் தவிர்க்க வழி ஒன்று உண்டு. அவர்கள் என் நண்பர்கள். வரச் சொல்லி அழைப்பு விடுத்தேன் என்றால் உடனே இங்கே வந்து விடுவார்கள். நீ உன் இஷ்டத்திற்கு விளையாடலாம் அங்கே!
நல்ல யுக்தி பிப்!
இது- மானுவல் அனுப்ப விரும்பிய தந்தி!
நல்ல காரியம் பிப்!
ஜட்ஜ் பியர்ஸால், 42, விக்டோரியா தெரு, ஆஸ்டின். டெக்ஸாஸ் நகர ஷெரீப் கொல்லப்பட்டு விட்டார். டெபுடியால் நிலைமையை சமாளிக்க முடியவில்லை. நகரில் சமூக விரோதிகளின் அட்டூழியம் தாங்க முடியவில்லை. உதவி தேவை— மிக அவசரம்! —டான் மானுவல்.
குட்! இந்த தாளை நான் வைத்துக் கொள்ளட்டுமா?
எதற்காக?
ஆஸ்டினுக்கு செல்லும் நாளில் ஜட்ஜ் பியர்ஸாலை மறவாது சந்திக்க இது ஒரு நினைவூட்டாக பையில் இருக்கட்டும்.



இனி, இந்த செய்தியை அனுப்பிவிடலாமில்லையா? குட்லக்-டெக்ஸ்!
பின்னர் சந்திப்போம்!
சில மணி நேரம் கழித்து, கால்வெஸ்டனில்-
மானுவலிடமிருந்து ஓர் ஆள் இதை கொண்டுவந்திருக்கிறான்.
?
நம் கூட்டு டெக்ஸாஸுக்கு தெரிந்து விட்டது. உடனே உன் ஆட்களை நீ அனுப்பி வைக்கா விடில் நாளை பிரச்னை கைமிஞ்சி போய்விடலாம்.
செய்வதை விரைவாகச் செய்!
-டான் மானுவல்.
பதிலுக்காக காத்துக் கொண்டிருக்கிறான்- அந்த ஆள்!
இன்றிரவு ஐம்பது ப்ளாக்-டிராகன் ஆட்கள் டெக்லாஸ் செல்வார்கள்- கில்லரையும் அவனது சகாக்களையும் சவக்குழிக்கு அனுப்பாமல் திரும்ப மாட்டார்கள்- என்று போய் மானுவலிடம் தெரிவிக்கச் சொல்!
பாலத்தில் ஒரு போராட்டம்!
வாங்கின் பதிலோடு டெக்லாஸுக்கு விரைந்து திரும்பினான் ரெட்-
ஐம்பது பேர்! அடேயப்பா! கில்லர் குழு தொலைந்தது!



ஒரு மணி கழித்து ரெட் நகரினுள் பிர-வேசித்தபோது, விதி டெக்ஸின் சார்பில் விளையாடியது
CAFE
நில்ஸன்! அவனும் கில்லரோடு சேர்ந்து கொண்டதாக கேள்வி!
இருக்கட்டுமே! சென்ற வருடம் என உயிரை காப்பாற்றியவன் அவன். நன்றிக் கடனாக அவனை நான் இப்போது எச்சரிக்க வேண்டும்!
ஹே - நில்ஸன்!
யாரது-ரெட்டா? என்ன விஷயம்?
நன்றிக் கடனை தீர்க்க ஒரு வாய்ப்பு எனக்கு!
கில்லரோடு ஒட்டிக் கொண்டிருக்கிறாயா-என்ன?
ம்ம்- ஜாக்கிரதையாக பேச வேண்டும் நான்!
சும்மா நெருக்கம்- அவ்வளவுதான்!
இன்றிரவு சீனர்கள் இங்கே வெறியாட்டம் போடப் போகி-றார்கள். கில்லரை சேர்ந்த யாருமே உயிர் பிழைக்கப் போவதில்லை!
நிஜமாகத்தான் சொல்கிறாயா?
சத்தியமாக! உயிர் காப்பாற்றிக் கொள்ள விரும்பினால் கில்லரிட-மிருந்து வெட்டிக் கொண்டுவிடு!
ஷ்யூர்! எச்சரிக்கைக்கு மிக்க நன்றி!


சற்று நேரம் கழித்து-
?
தோட்டா வாங்கிவர என்னை நீ வெளியே அனுப்பியது நம் அதிர்-ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும்!
ஏன்-? தோட்டாக்களுக்கு பதிலாக தங்கக்கட்டிகளை கட்டிக் கொடுத்து விட்டானா?
அதைவிட லாபகரமானது! முன்பு ஒருமுறை என்னால் காப்பாற்றப் பட்ட ஒரு நபரை வழியில்சந்தித் தேன். எனக்கு நன்றிக்கடன்பட்டி ருப்பதாக நினைத்தான் போலும்!
என் திட்டத்தில் அதிக மாற்றத்தை ஏற்படுத்தாது!
இந்தச் செய்தி-?
சீனர்கள் டெக்ஸாஸினுள் புக விருப்பதை நில்ஸன் டெக்ஸுக்கு தெரிய படுத்தினான்-
இப்போதிருந்து, நாம் ஒவ்வொருவராக வெளியேறி வெவ்வேறு திசைகளில் செல்லவேண்டும்-பிறருடைய கவனத்தை ஈர்க்காது இது. அஸ்தமன வேளையில், நகரிலிருந்து கால்-வெஸ்டன் செல்லும் சாலையில் இரண்டாவது மைலில் நாம் மீண்டும் ஒன்று சேருகிறோம்.
அதேபோல், மாலையில் நண்பர்கள் ஒன்று கூடினர்-போராட்டத்திற்கு தேவையான அனைத்து வசதிகளோடும்! டெக்ஸ் இறுதி உத்தரவுகளை பிறப்பித்தார்-
இது தான் திட்டம்- கேள்வி ஏதாவது உண்டா?
நாம் பாலத்தினருகே நிலை கொண்டால் இன்னும் சிறப்பாக இருக்குமே?
ஷ்யூர்!
நல்ல யோசனை!



ஒரு வேளை நிலைமை சீர் கெட்டுப் போனால் சட்டென்று நாம் பின் வாங்கிக் கொள்ள முடியும்- அதே சமயம் சீனர்களை பாலத்தில்அகப் பட்டுக் கொள்ளச் செய்ய வசையுண்டு!
நல்ல யோசனை - அப்படியே செய்வோம்!
குதிரையிலேறி பாலத்தை நோக்கிப் போங்கள் தோழர்களே!
ம் புறப்படுவோமா?
இரண்டு மணி நேரம் கழித்து -
கவனி - பாலத்தில் வந்து கொண்டிருக்கிறார்கள் -
ஏழு எட்டு-ஒன்பது வண்டிகள். பயங்கர மாகத்தான் திட்ட மிட்டிருக்கிறார்கள் -
வெகு தொலைவில் வரு- கிறார்கள். அடையாளம் தெரியவில்லை!
இதோ - நெருங்கி விட்டார்கள்!



சீனர்களா?
ஆம்! பெரிய கூட்டம்!
நாங்கள் கிளம்புகிறோம்!
ம்ம்-ஆனுல் உரிய தருணம் வரை தலைமறைவாகவே இருக்க வேண்டும்!
மறுவார்த்தை ஏதும் கூருமல் கிட்டும் டைகரும் பாலத்தின் கீழே தொங்கியவாறு விரைந்துமுன்னேறிஞர்கள்-
வண்டிகள் நல்ல வேகத்தில் பாலத்தின் மீது வந்து கொண்டிருந்தன-
ஆனுல் முதல் வண்டி பாலத்தின் மறு முனையை நெருங்கி விட்டபோது, திடீரென்று எழுந்த துப்பாக்கிமுழக்கமும் அதிகார குரலும் அங்கே நிலவிய அமைதியை கிழித்தன-
நில்!
கில்லரையும், அவரது நண்பாகளையும் கொன்று குவிக்கத்தானே டெக்ஸாஸுக்குப் போய்க் கொண்டிருக்கிறீர்கள்? உங்களுடைய சிரமத்தைக் குறைக்க நாங்களே இங்கே வந்து விட்டோம்!



'க்ரேட் கன்பூஷியல்-' கில்லர்!
யாரோ நம்மைக் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள்!
என்ன பதிலைக் காணோம்!
துப்பாக்கிகளை மரியாதை-யாக கீழே போடுங்கள்!
நடக்காது!
ட்மீல்
ஓ- இந்த ராகம் தான் உனக்குப் பிடிக்கிறதோ?
ட்மீல்-ட்மீல்
ஆ!
ங்கீய்
இறங்கி ஓடுங்கள்- பதுங்குங்கள்!
சீக்கிரம்!
துப்பாக்கி முழக்கத்தால் மிரட்சியடைந்த குதிரைகள் தங்களை விடுவித்துக்கொண்டு ஓட எடுத்துக்கொண்ட முயற்சியில் சில வண்டிகள் தடுமாறி தறிகெட்டு தண்ணீருக்குள் விழுந்தன-
ட்மீல்....


உதவி! வெளியே குதி!
க்ராஷ்!
ஆ ஆ ஆ!
சீக்கிரம்- வண்டிக்குப் பின்னால் பதுங்கு!
டுமீல்
டுமீல்
நாய்களை சுட்டு வீழ்த்து!
ஏகப்பட்ட பேர்!
எண்ணிக் கொண்டிராதே சுட்டுத் தள்ளு!
முன்னேறுங்கள்- மூன்று பேர் தான்-சுலபமாக தீர்த்துக் கட்டிவிடலாம்!
BANG


எல்லோரும் இறங்கி, அவர்களோடு முன்னோக்கி ஓடுங்கள் - சீக்கிரம்!
யாரும் இல்லை-இங்கே-மேலே ஏறுவோம்!
ஊப்-ப்!
கடைசி வண்டியிலிருந்து குதிரைகளை விடுவி. இருக்கிற குழப்பத்தில், நாம் இங்கிருப்பது சீனர்களுக்கு தெரியாது
எஸ்!
நீங்கள் தோட்டாக்களுக்கு பலியாவதை விரும்பவில்லை நாங்கள்-சமர்த்தாக ஓடிப்போய் விடுங்கள்!
அதிக நேரம் இப்படியே தாக்குப்பிடிக்க முடியாது. அங்கே கிட்டும் டைகரும் என்னதான் செய்கிறார்கள்!
தளராமல் தொடர்ந்து சுடு!
ஆவ்!
டுமீல்
டுமீல்!


ஓடுங்கள்!
கிட் யரோ வருகிருர்கள் கவனி!
ஹோ! யாரோ குதிரைகளை அவிழ்த்து விட்டார்கள்! வாங்- தாய்- லிங்க்- பிடியுங்கள்!
அவர்கள் இப்படி அவசரப் பட்டிருக்க வேண்டியது இல்லை!
ஆவ்!
டைகர் ஒரு கை பிடி!
அங்கே- ஐபே.. ர!
இதோ ஆயிற்று!
சீக்கிரம்- எதிரிகள் கண்டு கொண்டார்கள்!


வரட்டுமே- நம் பங்குக்கு சிலரை சுட்டு வீழ்த்து-வோம்!
டுமீல்! டுமீல்!
ஆ-!
டுமீல்!
டுமீல்! டுமீல்! டுமீல்!
ஆஆ!
இடையில் மாட்டிக் கொண்டார்கள்- வகையாக!
டுமீல்!
ஆவ்!
ஜாக்கிரதை! பின்னாலிருந்து வருகிறது தோட்டா!


சே- இடையில் மாட்டிக் கொண்டோம்! எப்படி- யாவது நாம்- ஆஆ!
செய்ய என்ன இருக்கிறது?
இது போதாதா?
ஊஹும்-தொடர்ந்து சுடு-கார்ஸன்! ப்ளாக் ட்ரா கனுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும்!
டுமீல்! டுமீல்!
அஹ!
ஐயோ-!
ஆவ்-!
நம்மை சுற்றிலும் இருக்கிருர்கள்!
டுமீல் டுமீல்
விடாதே! நம் இருவ ரால் எவ்வளவு சாதிக்க முடியும் என்று உணர்த்துவோம்!
?!
அதிக எண்ணிக்-
கையில் இருந்-
தும், தங்களு-
டைய கை வலு-
விழந்து போய்
விட்ட உண்மை-
யை தெளிவாக
புரிந்து கொண்ட
சீனர்கள் உயிர்
வேறு வழியின்றி
தண்ணீருக்குள்
பாய்ந்தனர்-
தொப்! தொப்!


எல்லோரும் குளிக்கப் போய் விட்டார்களே- என்ன செய்வது?
குளிர்ந்த நீரில் மூழ்கி எழுந்தால் புத்தி தெளிவடையும். மறுபடியும் வம்புக்கு வர மாட்டார்கள்!
நாம் இன்னமும் உயிரோடிருப்பது ஆச்சரியம்தான்!
டிராகனின் குகையில்-
அடுத்து?
போய் குதிரைகளைக் கொண்டு வாருங்கள்!
ப்ளாக் ட்ராகன் கும்பலை ஒரேயடி-யாக ஒழித்துக் கட்ட வேண்டுமா-னால் இப்போதே நாம் வாங்கை போய் சந்திக்க வேண்டும்!
கரெக்ட்!
ஹே அங்கே விபரீதம் ஏதுமில்லையே?



குதிரையிலேறி கால்வெஸ்டனை சென்றடைந்த டெக்ஸும், தோழர்களும் ஓரிடத்தில் குதிரைகளை கட்டிப்போட்டு விட்டு, கால் நடையாக நில்ஸனை பின் தொடர்ந்து சென்றனர்-
அதோ அங்கே! திருப்பத்தில் இருக்கிறது லின்-வு வின் இருப்பிடம்!
இதுதான்!
எல்லோரும் என் பின்னால் வாருங்கள்-
டமார்!
அனைவரும் அப்படி அப்படியே இருங்கள்! உங்களில் யார் லின்-வு? இந்த சூதாட்ட அரங்கின் சொந்தக்காரன்- ப்ளாக் ட்ராகன் கும்பலில் முக்கிய புள்ளி?
யாரும் வாயைத் திறக்க மாட்டீர்கள்- இல்லையா? ஆல்ரைட்!
?
!
அடேய்- நாற்றமடிக்கும் பெருச்சாளியே! லின்-வு எங்கே இருக்கிறாய்?
இங்கே!
டுமீல்


வெளியே வாடா- நச்சுப் பாம்பே!
ஹா!
சே-மட்டமான தந்திரம்!
நான் சொல்வதை கவனமாக கேளுங்கள். இதுதான் ப்ளாக் ட்ராகனுக்கு இறுதி நாள்-மற்றவர்களிடம் போய் இதைச் சொல்லி எச்சரியுங்கள்!
விடிவ்தற்குள் வாங்க், ஹோ-பே, ட்யான்-லோ, ஷாங்-ஹோ, ட்யோ-நா, அனைவரும் லின்-யுவை பின்தொடர்ந்து நரகம் செல்லப் போகிறார்கள். யாரொருவர் ப்ளாக்-டிராகனை மீண்டும் தோற்றுவிக்க முயன்றாலும் தலையில் தோட்டாவோடு தெருப் புழுதியில் பிணமாக விழுவது உறுதி என்று போய் எல்லோரிட-மும் சொல்லி எச்சரியுங்கள்!
பின்னர்-
போய் விட்டார்கள்!
கன்பூஷியஸ்! நான் உடனே போய் மற்றவர்களையும் எச்சரிக்க வேண்டும்!



நீ என்ன நினைக்கிறாய்?
ம்ம்-
சீனர்களை ஒன்று சேர அவ
காசம் கொடுத்தால், பிறகு
அவர்களை வேட்டையாடு-
வதில் சிரமம் இருக்கலாம்!
இல்லை!
சிரமம் இராது-
பாதிப் பேர் ஆற்-
றில் நீந்திகொண்
டிருக்கிறார்கள்
என்பதை மறந்து
விடாதே!
மீந்து இங்கே இருப்பவர்கள் செய்தியை
கேள்விப்பட்டு கிலி ஏற்பட்டிருக்கும்-
ஏற்கனவே கணிசமான தோழர்களை சாவு
கொடுத்து விட்டார்கள். வீணாக மாய்ந்து
போக துணிய மாட்டார்கள்-
வாங்க் இடத்திற்கு வழிகாட்டு
நில்ஸன்! ஒரேயடியாக இந்த சீன
கும்பலை ஒழித்துக் கட்ட முயற்சிப்
போம்!
வாருங்கள்
என் பின்னே!
அரைமணி-கழித்து-
சீக்கிரம் திற-
?
டடாஸ்!



எதிர்த்த வீட்டு மாடியிலிருந்தது டெக்ஸ் குழு
யாரது?
ஷாங்-ஹோ!
அப்படியானால் மற்ற நான்கு தலைவர்களும் இங்குதான் இருக்கக்கூடும்!
ஆம்!
எதற்கும் இவனை கட்டிப் போட்டு வை!
என்னை எதுவும் செய்து விடாதீர்கள்- ப்ளீஸ்!
ஒரு மணி நேரம் விஷமம் செய்யாமல் ஒய்ந்து கிட உனக்கு எதுவும் நேரிடாது!
மாறாக எச்சரிக்கை விடுக்க முனைந்தாயோ அத்தோடு தொலைந்தாய்!
உயிர்மீது ஆசையிருக்கிறது பயலுக்கு! இவனால் எந்த இடைஞ்சலும் வராது!
ம்-வாருங்கள்!
சில நிமிடங்களுக்குப் பின்-
யாரது- கதவைத் தட்டுவது? ஒளிந்து கொள்ள எல்லோரும் இங்கே ஓடி வந்து விட்டார்களோ?


கதவிலிருந்த திறப்பை காவலாளி நகர்த்தியதும் மின்னல் வேகத்தில் ஒரு கை உள்ளே நீண்டது-
?!?
ஷட்-அப்! இல்லையேல் மூளை சிதறிப் போகும்!
இது வெறும் வேடிக்கை பேச்சல்ல என்று புரிந்து கொண்டிருப்பாயே!
நான் சொல்கிறபடி செய்- உனக்கு எந்த ஆபத்தும் வராது!
சுட்டு விடாதீர்கள். இதோ திறக்கிறேன்!
கார்ஸன்! கிட்! உள்ளே போய் பயலை கவனியுங்கள்!
ம்- இனி நீ பிடியை விட்டு விடலாம் டெக்ஸ்!
பின்னர்-
வாங்கின் மறைவிடத்திற்கு எங்களை இட்டுச் செல்!
ஆர்ப்பாட்டமின்றி!



தன தலைவிதியை எண்ணி ஏதோ முணுமுணுத்தவாறு இரகசியத் திறப்பு ஒன்றின் அருகே போய் ஒரு பட்டனை அழுத்தினான்-
அந்த திறப்பு விலகிய கணத்தில் புயல் வேகத்தில் உள்ளே பாய்ந்த அந்தச் சீனன் விஷமத்தனமாக எச்சரிக்கை குரல் கொடுத்தான்.
உதவி!
கெடுத்தானே!
அவன் தப்பிக்க முடியாது!
முட்டாள்!
கொஞ்ச நேரத்திற்கு அவனை முடக்கிப் போட்டு விடும்!
அஹ்!
வாருங்கள்- தோழர்களே!
கன்பூஸியஸ்! நம்மை கண்டுபிடித்து விட்டார்கள்!
கில்லரும் அவன் சகாக் களும் இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள்-
கதவுக்கு வெளியே போய் நின்று முடிந்த வரை அவர்களை தேக்கி நிறுத்தி வை-ஓடு!
?!
?



தேக்கி நிறுத்தவா! நானு- அந்த பிசாசுகளேயா?
சில வினடிகளுக்குப் பின்-
அதோ- ஒருவன்!
சுடு!
?
நோ- நோ- சுடாதீர்கள்!
ஓடி வாருங்கள்- லிப்ட்டுக்குள்!
நாம் ஏன் ஓடி ஒளிய வேண்டும்- கோழைகளே போல்? எதிர்த்து நின்று தொலேத்துக் கட்டுவோமே?
நேரடியாக மோதுவது விவேக- மாகாது! வேறொரு யுக்தியை கையாளுவோம்!
எங்கே அவர்கள்?
உ- உ- உள்ளே!
டெக்ஸ்! ஜாக்கிரதை- ஏதாவது சூழ்ச்சியாக இருக்கக் கூடும்!


அப்படியானால் இவனை முதலில் அனுப்புவோம்!
ஓ- நான் முதலில் போகிறேன்!
பீதியோடு கதவை தள்ளித் திறந்தான் அந்தச் சீனன்!
அதே சணத்தில் சீறிக் கொண்டு வந்த மூன்று தோட்டாக்களும் அவனை முத்தமிட்டன-
டுமீல்!
ஐ-யோ!
டுமீல்! டுமீல்!
நாசமாகப் போகிறவன்!
விரட்டிப் பிடியுங்கள்-விஷ ஜந்துக்களை தப்பியோட அனுமதிக்கலாகாது!
டுமீல்!
வெற்றி எங்களுக்குத் தான்- பொறுத்திருந்து பாரடா- தெரு நாயே!


தோட்டாக்களால் பூட்டை சிதைக்க முடியாது போனல் கதவை உடைப்போம்!
டுமீல்!
கதவின் பின்னல் ஒரு 'லிப்ட்' இருக்கிறது. வாங்கின இருப்பிடத்திற்கு செல்ல அது உதவும்!
லிப்ட்? நம்பவே முடியவில்லையே?
கார்ஸன், கிட்- கதவை உடையுங்கள்!
ஜாக்கிரதை! லிப்ட் அங்கில்லாவிடில் பாதாளம் நோக்கி விழுந்துவிடப் போகிறீர்கள்!
டுமீல்
டுமீல்
விலகி எனக்கு வழிவிடுங்கள். துப்பாக்கி முனையால் ஒரு போடு போட்டு நான் திறக்கிறேன்!
டமார்!
சில விநாடிகளுக்கு பின் டைகர்கதவை தகர்த்து விட்டான். ஆனல் அதற்குள் எதிரிகள் பத்திரமான இடத்துக்கு போய்ச் சேர்ந்து விட்டனர்-
தாமதித்து விட்டோம்- ஓடிப்போய் விட்டார்கள்!


திடீரென்று எங்கிருந்தோ வந்து முளைத்த கம்பி கிராதி, லிப்ட் பாதையை மூடிக் கொண்டு விழுந்தது-
ணாங்!
அதே கணத்தில் அறையினுள் தீ பரவத் தொடங்கியது-
டெக்ஸ்- அங்கே பார்!
அடக் கடவுளே!
நம்மை உயிரோடு வறுக்கப் பார்க்கிறார்களா?
பரவுமுன் அதை அணைத்தாக வேண்டும்- இல்லையேல் ஆபத்து!
நில்ஸன் தைரியமாக முன்னால் பாய்ந்து தீயை அணைக்க முயன்றான். துரதிர்ஷ்டவசமாக எரிந்து கொண்டிருந்த திரைச் சீலையின் ஒரு பகுதி அவனுடைய காலணியோடு ஒட்டிக்கொண்டது-
என் கால் போச்சு- ஆவ்- டெக்ஸ்!
ஹா-ஹா-ஹா! கில்லர் கூட்டத்தோடு எரிந்து சாம்பலாகப் போகிறான்!


தீப்பொறி!
ஆஆஆ! எரிகிறதே!
கில்லர் - என் குரல் கேட்கிறதா - உனக்கு?
நில்ஸனின் காலில் ஒட்டி-யிருந்த தீயை அணைத்துவிட்டு சட்டென்று எழுந்து, குரல்
வந்த திசையில் துப்பாக்கியை திருப்பி, விடாது முழக்கினுர் டெக்ஸ்-
ஆ-ஐயோ!
கில்லரை கொல்லுங்கள்!
கன்பூஸியல்!
இப்படியே நாம் உயிரோடு எரிந்து போக நேரிட்டால், அந்த சைத்தான்களையும் துணைசேர்த்துக் கொள்ளாமல் விடமாட்டேன்!
இது ஒரு ஆறு-தலாகாது-டெக்ஸ்!


நில்ஸன்- தேவலாமா?
யெஸ்- டெக்ஸ் மட்டும் துணிச்சலாக தீயை பிடுங்கி எறிந்திராவிடில் என் காலை நான் இழந்து விட்டிருப்பேன்!
டெக்ஸ்- தீ பரவுகிறது!
அந்த கிராதியை எப்படியேனும் தகர்த்தாக வேண்டும்!
வாங்க்! வாங்க்!
ஹா- பிழைக்க மாட்டேன் நான்!
மிச்சமிருக்கும் தீப்பந்தங்களையும் அந்த அறையினுள் வீசி எறிந்து விட்டு நீங்கள் உயிர் பிழைக்க ஓடுங்கள்!
கதவிலுள்ள லீவரை கீழே இறக்குங்கள். பிறகு- ஆஆ!
சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி இழுங்கள்!
ஊஹூம்- அசைய மாட்டேன் கிறதே!
அப்போது நாலா திசைகளிலும் தீ கொழுந்து விட்டு எரியத்தொடங்கியது-
டெக்ஸ்- ஆபத்து!


புகை மூட்டத்தால் மூச்சுத்திணற, தீ ஜுவாலையால் பார்வை தடுமாற குருட்டாம் போக்கில் இடைவிடாது மேல் திறப்பை குறி வைத்து சுட்டனர்-
சண்டாளர்கள்!
?
பின்னால் வாருங்கள்!
க்ராங்!
ZIP
ZIP
திறப்பை மூடு- சீக்கிரம்!
மிச்சமிருப்பவர்களை அவர்கள் தீர்த்துக்கட்டுமுன் நாம் முந்திக் கொள்ள வேண்டும்!
இதோ- மூடியாயிற்று!
குட்- இனி கட்டிடம் தீக்கிரையாகி சரியு- முன் நாம் வெளி- யேறி ஓடி விட வேண்டும்!
ஆனால், மறு விநாடி-
லீவர்- போச்சு!
?
எப்படி?
தெரியவில்லையே!
திரையை விலக்கி பார்- பாதை இருக்- கலாம்!
திரையை விலக்கி பார்த்த போது-
மூடிக் கிடக்கிறது!
மை காட்- மாட்டிக் கொண்டோம்!


இதற்கிடையே தீ வேகமாக பரவத் தொடங்கியது-
ஹா-ஆஆ!
இன்னும் உயிர் இருக்கிறது!
வெளியே இழு அவனை!
ஐயோ- தீ! என்னை இப்படியேவிட்டு விட்டு போய் விடாதீர்கள்!
முடிந்த வரை உன்னை காப்பாற்ற முயற்சிப்போம் ஆனால் நிலைமையைப் பார்த்தால் நாம் எல்லோருமே வெந்து மடிய போகிறோம் போலிருக்கிறது!
வேறொரு ககவு இருக் கிறது இங்கே!
அப்படியா- எங்கே? சீக்கிரம் சொல்!
ட்ராகன் வரையப்பட்டிருக்கும் திரையை விலக்கி பின்னால் உள்ள லீவரை இழுங்கள்!
நான் போகிறேன் டாடி- வரும் போது அந்தத் திரையைக் கவனித்தேன்!
ஜாக்கிரதையாகப் போ!
அந்த லீவர்- அது தான் உயிர் பிழைக்க ஒரே வாய்ப்பு!
சுழன்று பரவிய புகை மூட்டத்தால் மூச்சு திணற தட்டுத் தடுமாறி முன்னேறிய கிட், ஏற்கனவே பாதி எரிந்து விட்ட திரையை நெருங்கினான்-
அவன் குறிப்பிட்டது இதுவாகத்தானிருக்கும்!
பழுதாகிப் போயிருக்கக் கூடாது- ஆண்டவனே!



உரென்று ஏதோ கடகடவென்று ஓசை எழுந்ததை தொடர்ந்து முள் உருளை சுழலத் தொடங்கியது-
உருளை நகர்கிறது- ஆனால் வழி உருவாக காணோமே?
முழு பலகையும் உள்ளிழுக்கப்பட்டு மறைந்தபின் இரகசிய பாதை கிட்டின் பார்வையில் பட்டனர்-
பிழைத்தோமடா சாமி!
திரும்பி ஓடி வந்தான் கிட்-
கண்டுபிடித்தாயா?
யெஸ்! என் பின்னால் ஓடி வாருங்கள்!
இவனையும் தூக்கிச் செல்வோம்!
ஆனால் செத்து விட்டானே?
அதனாலென்ன? இங்கேயே விட்டு சென்று விட மாட்டோம் என உறுதி கூறியிருக்கிறோமில்லையா... அவன் சொல்லித்தானே லீவர் இருக்கிறதை அறிவோம்... நம் உயிரைக் காப்பாற்றிவனுக்கு இதை கூடவா நாம் செய்யக் கூடாது!
தோழர்கள் அனைவரும் தப்பி வெளியேறும் இரகசிய வழியை நோக்கி விரைந்த வேளையில் மேலேயிருந்து உதவி கோரி கதறும் குரல்கள் இடைவிடாது கேட்டன-
உதவி!
உதவி!
இப்படி- ஜாக்கிரதையாக!


ஒவ்வொருவராக அந்த ராட்சஸ முள் உருளை-யினடியில் நுழைந்து ஜாக்கிரதையாக வெளியேறினர்-
இன்னும் நாம் வெளியேறியபாடில்லையா?
மனம் தளராதே- அபாய கட்டத்தை தாண்டி விட்டோம்!
டெக்ஸ்- அந்த ஒலத்தைக் கேட்டாயா?
ஷ்யூர்! தீ அந்த நீசர்களை விழுங்கத் தொடங்கி விட்டது போலும்!
எப்படியோ மாட்டிக்கொண்டு விட்டார்கள் போலும்!
உயிரோடு வெந்து போவார்கள்!
இந்த நபர் மட்டும் உதவியிராவிடில் நமக்கும் தான் அந்தக் கதி நேர்ந்திருக்கும்!
அவர்கள் நமக்கு என்ன கொடுமை செய்திருந்தாலும் உயிரோடு மாள விடலாமா?
முடிந்தவரை சீக்கிரமாக வெளியேறி ஓடிப் போவது தான் விவேகம்!
தாழிடப்பட்டு இருக்கிறது!
விலகு- பூட்டை நொறுக்கிடலாம்!
டுமீல் டுமீல்


அட அநியாயமே- இன்னமும் உள்ளே தான் இருக்கிறோமா?
ஆம்- அப்படித்தான்! சரி வா- உதவ முடியுமா- பார்ப்போம்!
ஓலம் வந்த இடத்தை குறி வைத்து அவர்கள் படிக்கட்டில் விரைந்த போது திடீரென்று உச்ச ஸ்தாயியில் கேட்டது எதிரிகளின் அலறல்- அதைத்தொடர்ந்து பலத்த ஓசையோடு கட்டிடத்தின் மேற்கூரை சரிந்தது-
ஆஆ!
ஆஆ!
டம்-டமார்!
கட்டிடம் சரிகிறது!
திரும்பி ஓடுங்கள்!
உடனே நாம் வெளியேறி ஓடிப் போகாவிடில் புதையுண்டு மடிவது உறுதி!
ஓடு! ஓடு!
உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அந்த ஐவரும் ஓடினர்- சிறு படகு ஒன்றினுள் குதித்து எங்கே போகிறோம் என்று அறியாமலே இருண்ட குகையினுள் படகை விரைந்து செலுத்தலாயினர்-
வேகம்- இன்னும் வேகமாக!


டமால்!
தொபுக்!
மயிரிழையில் தப்பி விட்டோம்! தப்பிப் பிழைத்தால் கிராமத்து பக்கமாக போய் விடுவேன்- விவசாயம் செய்து பிழைக்க!
நில்ஸன்! அங்கே பார்- வெளிச்சம்!
இனி ஆபத்து இல்லை!
சற்று கழித்து-
டமில்
தப்பி விட்டோம்- ஒரு வழியாக!
பின்னர் தங்கள் குதிரையிலேறி டெக்ஸாஸுக்கு முடிந்த வரை வேகமாக பயணம் செய்தனர்- ஹோட்டலை நெருங்கிய பின் நில்ஸனுக்கு விடைகொடுத்து அனுப்பி வைத்தார் டெக்ஸ்-
உன் உதவிக்கு மிக்க நன்றி நில்ஸன்!
வருகிறேன்- அணைவருக்கும் குட்-பை!
என்ன தான் நடக்கிறது? ஒன்றுமே புரியவில்லையே!
அது மானுவலின் கையாள் ரெட்!


கில்லர் குழுவினரிடம் நெருங்-காதேஎன்று நான் விடுத்த எச்சரிக்கையை பொருட்படுத்தவேயில்லை!
நில்ஸன்!
ஹலோ!
கில்லரிடம் ஒட்டாதே என்றேனே- வாங்கும், சகாக்களும் இன்னும் வந்து சேரவில்லை. இல்லையேல் உன் பாடு ஆபத்தாகி விடும்!
டான் மானுவல் கண்காணிக்கச் சொல்லி அனுப்பினார் என்னை! கில்லரோடு நீ வருவதைபார்த்-தேன். மீண்டும் எச்சரிக்கவே அழைத்தேன்!
சீனர்கள் கில்லர் குழுவி-னரை அடித்துநொறுக்கி கொல்லும் காட்சியை கண்டு களிக்க நின்று கொண்டிருக்கிறாயா?
ஆமாம்!
மானுவலின் உத்தரவு அப்படி!
மானுவல் கிடக்கிறான்- நான் சொல்வதைக் கவனமாகக் கேள்!
முன்னர் ஒரு முறை உன் உயிரை நான் காப்பாற்றி-னேன். பதிலுக்கு என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நீ எனக்கு யோ-சனை சொன்னாய்! சரி-இப்போது உன்னைமீண்டும் கடனாளியாக்கப் போகி-றேன் ரெட்!
போய் வீட்டில் நிம்மதியாகத் தூங்கு- இங்கே நீ காத்து நிற்பதில் அர்த்தமில்லை. ஏனெனில், சீனர்கள் இங்கே வரப் போவதில்லை!
ஏன் தெரியுமா? ப்ளாக் ட்ராகனும் அவனுடைய மொத்த கும்பலும் ஒட்டு மொத்தமாக பரலோகம் போய்ச் சேர்ந்து விட்டார்-கள் சற்று முன்!


உயிரின் மீது உனக்கு ஆசையிருந்தால் உடனே குதிரையிலேறி அவகாசம் இருக்கும் போதே நகரை விட்டு வெளியேறி ஓடிப் போய் விடு!
இல்லையேல் மற்றவர்களோடு நீயும் அழிந்து போவாய்!
ஹேங்!
மானுவலின் கூட்டத்தைக் கில்லரால் சமாளிக்க முடியுமென்று நினைக்கிறாயா?
கில்லரை வெல்ல இங்கே யாராலுமே முடியாது. புரிந்து கொள்!
விடியுமுன் இங்கிருந்து ஓடிப் போய் விடு- அது தான் உனக்கு நல்லது!
ம்ம்- புத்திமதிக்கு நன்றி நில்ஸன்!
என்ன முடிவு செய்திருக்கிறாய்?
கிராமத்தில் வயதான பெரியப்பா ஒருவர் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்
இப்போதைக்கு அவரிடம் போய் விடலாமென்று இருக்கிறேன்!
செய்!
மறு நாள்-
என்ன- ரெட் போய் விட்டானா?
ஆமாம்- மூட்டை முடிச்சுகளோடு!
ஆனால் எங்கே போகிறான் என்ற தகவல் இல்லை!
முட்டாள்! ஏன் இப்படியொரு விபரீத முடிவுக்கு வந்தானோ தெரியவில்லையே!



கில்லருக்குப் பயந்து ஓடி விட்டான் போலும்!
கில்லர்?
ஏதோ அசம்பாவி-தத்திற்கு அறிகுறி இது! வாங்குக்கும் அவன் ஆட்களுக் குமென்னவாயிற்று? ஏன் நேற்றிரவு சொன்னபடி இங்கே வரவில்லை!
விரைவில் தெரிய வரும். கில்பர்ட் எந்த நிமிடமும் தகவலோடு கால்வெஸ்-டனிலிருந்து திரும்பி விடுவான்!
அதோ-- வந்து விட்டான்!
சில நிமிடங்களுக்குப் பின்-
என்ன ஆச்சு? வாங்-கோடு பேசினாயா?
இல்லை- முடியவில்லை! நேற்றிரவு கில்லர் கூட்டத்தோடு கால்வஸ்டனுக்கு வந்தி-ருந்தான். வாங்கும் மற்றவர்களும் செத்துப் போய் விட்டனர்- கில்லரின் கைவரிசை!
என்னடா உளறுகிறாய்?
உளறவில்லை! நிஜம்- அத்தனையும் நிஜம்!
விடு என்னை- இப்படி குரல் வளையை நெறித்தால்எப்படி நான் பேச முடியும்?


மேலே சொல்!
ஊப்-ப்!
ம்ம்ம்- சொல்லுடா!
துறைமுகப் பகுதியை நான் நெருங்கியபோது அங்கே அசாதாரண அமைதி நிலவக்கண்டு துணுக்குற்று விசாரிக்க லானேன்!
முதலில், கில்லரும் அவனது சகாக்களும் வாங்கின் ஆட்கள்மீது பாலத்தில் அதிரடி தாக்குதல் நடத்தியிருக்கிறாகள். ஏகப்-பட்ட சீனர்கள் செத்து விட மீந்தவர்கள் ஆற்றினுள் பாய்ந்து விட்டிருக்கிறார்கள்!
?!
பிறகு கால்வஸ்டனுக்குள் சென்று வின்-வு-வின் வீட்டினுள் புகுந்து அவனைசுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள். பின்னர் வாங்கின் மாளிகையை அனைவரும் உள்ளிருக்க தீக்கிரையாக்கியிருக்கிறார்கள்!
அப்படியா?
வாங்கும் மற்றவர்களும் செத்து விட்டார்களா?
ஆம்! அவர்களுடைய கருகிய உடல்களை வெளியே இழுத்துப் போட்டு கொண்டிருந்தனர்- நான் அங்கே போய்ச் சேர்ந்த போது?
யாரோ எனக்கு துரோகமிழைத்துவிட்டிருக்கி-றார்கள்!
ரெட்!
ஆமாம்! அதனால் தான் அத்தனை வேகமாக ஊரை விட்டே ஓடி விட்டான்போலும்!


அந்தப் பயல் மட்டும் என் கையில் சிக்கினால்-
ஹூம்- அவனை பழி வாங்குவதால் பிரச்சனை தீர்ந்து விடப் போவ-தில்லை மர்னுவல்!
கில்லரை கூட்டத்தோடு ஒழிக்க முடியா-தென்று ஆகி விட்டது. விடிவதற்குள் நாம் ஊரை விட்டே ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை- குறைந்த அவகாசமே இருக்கிறது!
அவனும் அவனுடைய கெடுவும் நாசமாகப் போக! பயலை தீர்த்துக் கட்டாமல் ஊரை விட்டு ஓட நானென்றும் கோழையல்ல!
?
போய் மற்றவர்களையும் உடனே கிளம்பி பாரடைஸுக்கு வரச் சொல்! அதை கோட்டையாக பலப்படுத்துவோம். அந்த கில்லர் எப்படி நம்மை நெருங்குகிறான் என்று பார்ப்போம்!
வா- கில்பர்ட் போகலாம்!
பின்னர்-
ம்ம்- நான் தான் பிப்!
டக்
டக்
உள்ளே வா!
அட- தூங்கிக் கொண்டிருப்பீர்கள் என்றல்லவா நினைத்தேன்!
தூக்கமா- இந்த உச்சிப் பொழுதிலா?
188



பிப்- இவன் டைகர் ஜாக். செவ்விந்திய தோழன் முன்பே சொல்லியிருக்கிறேன்!
ஹலோ டைகர்!
ஹலோ!
நேற்றிரவு கால்வஸ்டனில் பாதி சீனர்களை ஹதம் செய்த சண்டை-யில் இவனுக்கும் பங்குண்டா?
ம்ம்- உனக்கு யார் சொன்னார்கள்- நில்ஸனா?
இல்லை- நில்ஸனை நான் பார்க்-கவேயில்லை. கால்வஸ்டன் ஷெரீப்பிடமிருந்து வந்த கடிதம் இது- படி!
டியர் பிப், நாங்கள் திரும்பி வந்துபார்த்தபோது இங்கே ஒரு பிரளயமேநடந்துகொண்டிருக்ககண்டோம். கயவர்களை ஒழித்து நகரை தூய்மைப் படுத்திய நபர்கள் யாராயினும் அவர்-களுக்கு எங்களு-டைய மனமார்ந்த நன்றியை தெரிவி! —உன் நண்பன் ப்ரெட் நோலன்
நேற்றிரவு நடந்தது என்னவென்று விபரமாக தெரிந்து கொள்ள வேண்டும்- இல்லையா?
ஷ்யூர்!
நடந்தவைகளை விபரமாகஎடுத்-துரைத்தார் டெக்ஸ்- அதை கேட்டு முடித்த பிப் நீண்ட பெருமுச்செ-றிந்தார்-
நானும் உங்களோடு இல்லாமற் போனேனே என்றிருக்கிறது!
ஆனால் காவல் துறையினர் இம்மாதிரி காரியத்தில் ஈடுபட முடியாது!
இந்த ஸ்டாரை தூக்கி எறிந்து விடமுடிந்தால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும்?



அப்படியெல்லாம் சொல்லாதே பிப்- அந்த ஸ்டார் உனக்கு வழங்கும் அதிகாரத்தை தக்க முறையில் பயன்படுத்தி அதற்கு கௌரவத்தை ஏற்படுத்த முயற்சி செய்!
இந்த பதவிக்கு நீதான் ஏற்ற நபர். இங்கே சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவது எப்படி என்று உனக்கு நடத்திக் காட்டி விட்டேன். மக்கள் மதித்துப் போற்றும் புதிய ஷெரீப்பாக செயலாற்ற வேண்டும் நீ!
ஷெரீப்பா? நானா? என்னை இந்த மக்கள் ஷெரீப்பாக தேர்ந்தெடுப்பார்களா?
உனக்கு இஷ்டம் தானே?
ஷ்யூர்- டெக்ஸ்! இது எனது நகரம்! இதை அமைதி தவழும் அழகிய நகரமாக பரிணமிக்கச் செய்துகடந்த கால கசப்புகளை மக்கள் விரைவிலேயே மறக்கசெய்வேன்!
அந்தப் பணியில் என்னை பரிபூரணமாக ஈடுபடுத்திக் கொள்வேன்!
பலே!
நம் நண்பரை ஷெரீப்பாக்குவது பற்றி என்ன நினைக்கிறீர்கள் தோழர்களே?
அருமையான யோசனை!
ஜமாய்த்து விடுவோம்!
ஓ.கே! நம் ரேஞ்சர் பாட்ஜுகளை எடுத்து குத்திக் கொள்ளுங்கள் தோழர்களே! இம்முறை, நம்மோடு பிப்பும் வரப் போகிறான்! கெடு வைத்திருக்கிறோம்- ஞாபகமிருக்கிறதல்லவா?


வாட்? ரேஞ்சர்களோடு நானும் இணைந்து நடவடிக் கைகளில் ஈடுபடப் போகி றேனா?
ஆம்- அதில் உனக்கு இஷ்டம் தானே?
இன்றைய முடிவில் நீ உயிரோடிருந்தால் உன்னை ஷெரீப்பாக தேர்ந்தெடுக்ககொஞ் சமும் தயங்க் மாட்- டார்கள் ஜனங்கள்!
அஹ்!
நிஜமாகவே எனக்கு அந்த தகுதி இருக்கிறதா டெக்ஸ்?
சந்தேகமே கிடை- யாது எனக்கு!
ஓ.கே! டெக்ஸ்-கையாலாகாதவனாக ஆபீஸில் முடங்கிக் கிடப்பதைவிட உன்னோடு தைரியமாக ஆபத்தை எதிர்கொள்வதையே விரும்புகிறேன்!
குட்!
காலி வயிறோடு சண்டையிடபோ- வது சரியில்லை-முதலில் வயிறார உணவு-பிறகுதான் மற்றவை- என்ன?
கரெக்ட்!
பின்னர் அவர்கள் ரெஸ்டாரண்ட் விரைந்த போது- ஊரே ஸ்தம்பித்துப் போனது!
?
மை காட்- ரேஞ்சர்கள்!
என்ன இது?
கவனித்தாயா- அவர்- கள் ரேஞ்சர்கள்!
யாருமே நினைத்துப் பார்க்காத நிஜம்!
191


அரைமணி கழித்து-
நில்ஸன் அதோ-
ஹலோ- ப்ரண்ட்ஸ்!
நகரில் எங்கு பார்த்தாலும் 'ரேஞ்சர்கள் ரேஞ்சர்கள்' என்ற பேச்சுத்தான்! உண்மையை முன்னமே நீங்கள் என்னிடம் சொல்லியிருக்கலாம்!
ஸாரி- நில்ஸன்!
ஸாரி என்று சொல்லி விட்டால் ஆயிற்று? மானுவலை பூண்டோடு அழிக்கும் முயற்சியில் நானும் பங்கேற்கத் துடிக்கிறேன். ஆனால் அந்த பாட்ஜுகளை அணிந்து கொண்டிருக்கும் உங்களோடு நான் எப்படி-
அதை நீங்கள் அணிந்து கொண்டிருக்கையில் நான் உங்களோடு ஒட்டவே முடியாது!
ம்ம்ம்-
உனக்கு ஒரு பாட்ஜ் கிடைக்கிறது என்று வைத்துக்கொள்வோம். நீ அதை ஏற்றுக் கொள்வாயா?
எப்படி?
டெபுடி ஷெரீப் பாட்ஜ் அணிந்து கொள்ள இஷ்டமா-சொல்!
போதுமே- கிண்டல்!
என்னைப்பற்றி உங்களுக்கு நன்கு தெரியும்-
உனக்கு நல்ல எதிர்காலம் உண்டு, நில்ஸன். சரி என்று சொல்-பிப் தன்னை தன் டெபுடியாக ஏற்றுக் கொள்வார்!


ஓ.கே?
ஷ்யூர்! நன்றி, யிப்?
நீங்கள்என் மீது நம்பிக்கை வைத்ததற்காகஎன்றைக்குமே வருத்தப்படநேரிடாது என்று உறுதிபட சொல்வேன்!
குட்!
வழியில் என் ஆபீஸில் நுழைந்து அந்த ஸ்டாரை எடுத்துக் கொள்வோம்!
அதை அணியும் தகுதி எனக்குண்டு என்று செயலில் நிருபிப்பேன்!
அப்போது-
ரேஞ்சர்கள்! அந்த சண்டாளர்கள் ரேஞ்சர்களா?
என்ன செய்யப் போகிறீர்கள்?
என்ன கேள்வி இது! நகரில் நான் தொடர்ந்து வாழ கையில் துப்பாக்கியை ஏந்தினுல்தான் முடியும் என்ருல் அதைச்செய்ய தயங்கவே மாட்டேன்!
தங்களுடைய ரேஞ்சர் பதவியை அவர்கள் துஷ்பிரயோகம் செய்தால் மேலதிகாரிகளிடம் புகார் செய்து அவர்களை உண்டு இல்லை என்ருக்கி விடுவேன்!
! ! ! ?
நடுங்கிக் கொண்டு நில்லாமல் அந்த ரேஞ்சர்களுக்கு பாடம் கற்பிக்க தயாராகுங்கள்!


ரேஞ்சர்களாக இருந்தால் என்ன- இதற்கெல்லாம் பயந்தவனா நான்? பார்த்து விடுகிறேன் ஒரு கை!
?!!
ஆனால் மானுவலின் தலை மறைந்ததும்-
என்ன செய்வோம் நாம்?
நீ என்ன செய்வாயோ- நான குதிரையிலேறி ஓட்டம் பிடிக்கப் போகிறேன்!
நானும்தான்- உயிர்மீது எனக்கு இன்னும் ஆசை குறையவில்லை!
சரியாகச் சொன்னாய்!
முப்பது நிமிடங்களுக்குப் பின்-
அங்கே கவனி!
மானுவலின் ஆட்கள் கிளம்புகிறார்கள்!
வெளியேறுகிறார்களா?
நம்ப முடியவில்லையே?
சற்று நில்லுங்கள்- நகரைவிட்டு வெளியேறுகிறீர்களா?
உங்களுடைய விருப்பம் அதுதானே?
உங்களை சவக்குழிக்கு அனுப்பத் தீர்மானித்திருந்தேன். நீங்கள் வெளியேற தீர்மானித்திருப்பதை வரவேற்கிறேன்! ஆனால் ஒன்று- இங்கே திரும்ப வரும் ஆசை வரவே கூடாது உங்களுக்கு!
சத்தியமாகத் திரும்ப மாட்டோம்!



வாருங்கள் போவோம்!
ஸ்டாரை சம்பாதிக்கும் வாய்ப்பு கைநழுவிப் போகிறதே இப்படி!
கவலைப்படாதே- மானுவலின் அடிவருடிகள் இன்னும் கணிசமான எண்ணிக்கையில் மிச்சம் இருப்பார்கள் அங்கே!
அவர்கள் ஆறு பேரும் வீர நடை போட்டு செல்வதை மக்கள் ஆர்வத்தோடு நின்று கவனித்தனர் -
சற்று நேரம் கழித்து-
தொலைத்துக் கட்டுவேன் உங்களை- நாய்களா!
டுமீல்
ஜாக்கிரதை! அதோ ஜன்னலில்!
டுமீல்
டுமீல்
டுமீல்
ஆஆஆ!
டுமீல்
டுமீல்


அஹ்!
ஐயோ!
தடார்
டுமீல்!
டுமீல்!
நிறுத்துங்கள்- ஒருவர் பாக்கியில்லை!
ஒரு வழியாக டிராகன் நகரின் கடைசித் துஷ்டனும் ஒழிந்தான்!
பின்னர்-
பிரமாதம் நில்ஸன்- ஜன்னல் வழியே நீ குதித்த சாகஸம் என்னை அயர்த்தி விட்டது!
தாங்க்ஸ் டெக்ஸ்!
வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷிபட்டம்! ரொம்ப பெருமை யாக இருக்கிறது எனக்கு!




## வாசகர் கடிதம்!

● **N. சண்முகம், திருவண்ணாமலை-606 602.**

நகைச்சுவை அரசர்கள் 'விச்சு&கிச்சு ஸ்பெஷல்' இதழ் தயார் ஆவதை வரவேற்கிறேன்!

● **வீ. செல்வ குமார், வீ. மாரிமுத்துராஜன், திண்டுக்கல்.**

கொலைப் பசி அருமையான கதை! அதிரடிப் படையினர் தூள் கிளப்பி விட்டனர்.

● **R. ராஜசேகரன், பெரம்பூர்.**

கொலைப் பசியைப் படித்தேன், படித்தேன், படித்தேன். மூன்று முறை படித்தேன். இருந்தும் லயன் காமிக்ஸ் என்னும் ஆவல் பசி இன்னும் அடங்கவில்லை.

● **பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.**

கொலைப் பசிக்கு பேசாமல் ''FOUR(4) FOR HELL'' என்று பெயரிட்டிருக்கலாம். அம்மாடி! ஆங்கில ராணுவப் படம் பார்த்த மாதிரி இருந்தது!

● **K. முருகேசன், திருப்புறம்பியம்.**

விச்சு&கிச்சு கதைகளையெல்லாம் திரட்டி, புதிய சில-வற்றை இணைத்து ஒரு இதழை ரூ. 2/- விலையில் வெளியிடலாமே. அதை நாங்களாகிய வாசகர் வரவேற்கிறோம்.



ஜார்ஜ் நோலனுடன் துப்பறியுங்கள்!
PFD
பென்ஸ்பர்க் நெடுஞ்சாலை ரோந்துப் பிரிவு அதிகாரி ஜார்ஜ் நோலன், முதல் நாள் பின்னிரவு வேளையில் தீப்பற்றி எரிந்து சாம்பலாகி போன பெரிய கிடங்கின் அருகே ட்யூட்டியில் இருந்தார்—
நொடியில் தீ நாற்புறமும் பரவி இருப்பதை பார்த்தால், யாரோ வேண்டுமென்றே தீ வைத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது நோலன்!
இந்த கிடங்கின் சொந்தக்காரருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டுவிட்டதா சார்?
யாரோ ரிச்மாண்டாம்! போனில் தொடர்பு கொள்ள முயன்றும் மறுமுனையில் எடுக்க ஆளில்லை!
விசித்திரமா இருக்கே ஒருவேளை கிடங்குக்கு தீ வைக்க வந்தவர் வீடுதிரும்ப தாமதமாயிட்டுதோ? எதற்கும் நேரில் போய் நான் அவரை பார்க்கிறேன்


உள்ளேயிருப்பவர்களை வரவழைக்க நோலன் கதவை பலமுறை ஓங்கி அறைய வேண்டியிருந்தது-
வாங்க சார்! தீயணைப்பு அதிகாரியின் போன் காலை நான் கேட்டிருக்க முடியாதுதான். நேற்றிரவு ரொம்பவும் அசதியாக இருந்ததால் தூங்க இடைஞ்சலில்லாமலிருக்க ரிஸீவரைத் தூக்கி கீழே வைத்திருந்தேன்.
இந்த தீவிபத்துஎனக்கு பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்துது. அதிர்ஷ்ட வசமாக, கணிசமான தொகைக்கு இன்ஷ்யூர் செய்திருக்கிறேன் நான்
தன் மேலதிகாரி பிரிங்கரிடம் சென்றார் நோலன்—
போனை எடுக்காததற்கு தூங்கிகொண்டிருந்தது காரணமாக இருக்கலாம் அல்லது, நான் சந்தேக படுகிற மாதிரி, அந்த நேரம், தானே கிடங்கில் தீயை உருவாக்கிய பின் விரைந்து வீடு திரும்பிக் கொண்டிருந்ததும் காரணமாக இருக்கலாம்.
அவரின் பிற சொத்துக்களி-லும் புதிரான தீ விபத்துகள் முன்னர் நடந்திருப்பதாக தெரிகிறது. இதே போல அவரிடம் இன்னொரு கிடங்கு உண்டு. அதனுள் வெறும் கழிசடை பொருள் தான் குவிக்கப்பட்டுள்ளன. ஆனால், பெருந்தொகைக்கு இன்ஷ்யூர் செய்திருக்கிறார் அவரை தீவிரமாக கண்-காணிக்கணும் நோலன்!


வேலை நேரம் முடிந்த பின் போலீஸ் தலைமையகத்துக்குகீழிருந்த நிலவறை காரேஜில் மும்முரமாக ஏதோ செய்து கொண்டிருந்தார் நோலன்—
ஹே நோலன், ஓய்வு எடுக்கவில்லையா நீ? இந்த வேலைஎல்லாம் மெக்கானிக்குகள் பார்த்துக்கொள்ள மாட்டார்களா என்ன?
நாளை போலீஸ் ஜிம்கானாவில் நடக்க இருக்கும் சாகஸ விளையாட்டுகளில் நானும் பங்கேற்கி-றேன். அப்போது என் பைக் எக்காரணம் கொண்டும் கைவிட்டு விடலாகாது என்பதை உறுதி செய்திடவே இப்படி.


மறுநாள் பென்ஸ்பார்க் ஸ்டேடியத்தில் குழுமி இருந்த மக்கள், போலிஸ் வீரர்கள் நிகழ்த்திக் காட்டிய அற்புத வீரதீர சாகஸ விளையாட்டுகளைகண்டு பிரமித்து போயினர்-
மார்வெலஸ்!
இப்படி பேலன்ஸ் பண்ண எப்படித் தான் இவர்களுக்கு சாத்தியமாகிறதோ


மயிர்க்கூச்செறிய வைக்கும் படுபயங்கர நிகழ்ச்சிகள் தொடர்ந்தன-
அம்மாடி! இதை எல்லாம் செய்ய ‘தில்’ வேண்டும்!
அடடா! என்ன ஒரு கச்சிதமான டைமிங்! சிறு பிழை நேர்ந்தாலும் போதும், அத்தனை பேரும் அரோகரா!


சில தினங்களுக்கு பின், ரிச்மாண்ட்டின் மாளிகை வழியாக நோலன் ரோந்துசெல்ல நேரிட்டது—
ஓ.கே.நோலன்! இந்தக் கணம் ரிச்மாண்ட் எங்கேயும் தீ உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கவில்லை என்பது சர்வ நிச்சயம். ஆசாமி ஹாயாக டி.வி. பார்த்து கொண்டு உட்கார்ந்து இருக்கிறார் பார்!
P.P.D.


சற்று நேரம் கழித்து, டீ பருக ஒரு சிற்றுண்டி விடுதியினுள் நுழைந்தார் நோலன்—
ஜிம்கானா ஷோவில் உங்களுடைய சாகஸ விளையாட்டுகளை பார்த்தேன் சார். தூள் கிளப்பிவிட்டீர்கள் ரொம்ப அமர்க்களமாக இருந்தது!
அர்த்தமற்ற காரியம் -மக்களின் வரிப்பணம் விரயமானதுதான் கண்ட பலன். திருடர்களைப் பிடிக்க போலீஸாருக்கு பயிற்சி கொடுக்கணுமே தவிர அவர்களை சர்க்கஸ்காரர்கள் ஆக்க முயற்சிக்கலாகாது!


சில மணி நேரம் கழித்து, ட்யூட்டி முடிந்து மீண்டும் ரிச்மாண்ட்டின் மாளிகை வழியே சென்றார் நோலன்—
நீ போய் நிம்மதியாக தூங்கு நோலன். மறுபடியும் ரிச்மாண்ட் விஷமம் செய்ய நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.
இந்த விநாடி அவன் ஏதோ விஷமத்தில் இறங்கியிருக்கிறானென்று அடித்து சொல்வேன். எல்லோரையும் ரிச்மாண்ட்டின் கிடங்கிற்கு வரச் சொல்லுங்கள் -சீக்கிரம்!
நோலன் இவ்வாறு சொல்ல காரணம் என்ன? உங்களால் யூகிக்க முடிகிறதா?
ஆனால் அவர்களங்கு போய் சேருவதற்குள் விபரீதம் கைமிஞ்சிப் போய்விட்டிருந்தது-
உன் எச்சரிக்கை அழைப்பு கேட்டதும் ஓடோடி வந்தோம் இங்கே. தீ சற்று முன்தான் பற்றியிருக்கு இருந்தும் அதை கட்டுபடுத்தவோ அணைக்கவோ இயலுமென்று தோன்றவில்லை!
வெளியேறி ஓட ரிச்மாண்டுக்கு இன்னும் அவகாசம் கிட்டியிராத பட்சத்தில்-ம்ம், ஒரு முயற்சி பண்ணிப் பார்த்துவிடுகிறேன்!
ஹோதீபற்றாத உடுப்பணிந்த யாரோ ஒருநபர் அதோ பின் புறமாக வெளியேறி ஓடு-கிறான் -அங்கு மறைவில் நிற்கும் காரை நோக்கி! ஆனால், அவனை விரட்டிப் பிடிப்பது சாத்தியமல்ல!
அதையும்தான் பார்த்துவிடலாம்!


டீ கடையில் மட்டம்தட்டி பேசிய ஆசாமி இந்நேரம் அருகிருந்து இதை பார்க்கவேண்டும். மக்கள் வரிப்பணம் வீணடிக்கப்படவில்லை என்று நிச்சயம் ஒத்துக்குவான்!
முந்தைய சந்தர்ப்பங்களில் தப்பிவிட்டாய் ரிச்மாண்ட்! ஆனால், இம்முறை அதிர்ஷ்டம் உனக்கு கைகொடுக்கலை! எல்லா வில்லன்களிடமும் இந்த பலவீனம் தப்பாமல் காணப்படுகிறது- கிடைத்தது போதும் என்று திருப்தி அடைந்து தங்கள் விஷமத்தனத்துக்கு எப்போது முற்றுப் புள்ளி வைக்க அவர்களுக்கு தெரிவதே இல்லை!
பின்னர், ரிச்மாண்டின் மாளிகையில்-
இனி நீ விட்டிற்கு போகலாம் நோலன்! ரிச்மாண்ட்டை அரெஸ்ட் செய்து அடைத்து வைத்தாயிற்று
இல்லை- இன்னும் அவன் இங்கு தான் ஜாலியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான். சந்தேகம் இருந்தால் வந்துபாருங்கள் உள்ளே!
அதோ-பார்த்தீர்களா! ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருக்கிறான். இந்த அம்சம் தான் எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. இரண்டாவது முறை அவன் உருவத்தை அதே நிலையில் பார்த்தபோது சந்தேகம் எழுந்தது. அப்படி ஆடாமல் அசையாமல் நீண்ட நேரம் உட்கார்ந்து கொண்டிருக்க பொம்மைகளால் மட்டுமே முடியும்!
முற்றும்.

# கடலில் முளைத்த பேய்!


அந்த விபரீதம் நிகழ்ந்த போது இரவு மணி எட்டு.
எங்களில் மிகவும் துடிப்புள்ள இளைஞனை 'போஸன் கடலரக்கனோடு மோதிப் பார்த்துவிடுவது என்ற தீர்மானத்தோடு ஆக்ரேஷமாக செயலில் இறங்கினன். ஆனல், மறு நிமிடம் - ஆம் அந்த சைத்தான் அவனை கபளீகரம்பண்ணி விட்டது.
மேலே கதையை தொடருமுன் இடைவெளி விட்டு நெட்டு பார்த்தான் ஜெப்ஸ்டோன். அவனுடைய விழிகளில், என்றோ நடந்த அந்த சம்பவத்தின் பிரதிபலிப்பாக பீதி பரவிக் கிடந்தது ..
வேறென்ன ... மாயப் பிசாசுதான்!
அதுசரி .. போஸனை பலிகொண்டது எது?


என்னுடைய ஐம்பது ஆண்டுகால கடல்-வாழ்க்கையில் இது மாதிரி எத்தனையோ பார்த்திருக்கிறேன். ஆழ்கடலை நாம் அலட்சியமாக நினைக்கலாகாது. அதன் ஆழத்தில் பதுங்கிக்கிடக்கும்
ஆபத்துக்கள், விபரீதங்கள் எப்போது எந்த உருவில் வெளிப்பட்டு நம்மை விழ்த்தும் என்று யாராலும் சொல்ல முடியாது ..
என்னது - குதிரை லாடமா?
...அதனால்தான் நான் எந்தக் கப்பலில் பயணம் செய்தாலும் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளத் தவறுவதேயில்லை!
ஆமாம்- அதிர்ஷ்டத்தின் சின்னம்! பேய், பிசாசு போன்ற தீய சக்திகள் நம்மை அண்டவிடாமல் துரத்தியடிக்கும் மகத்துவம் இதற்கு உண்டு...!
அப்போது-
உளறுவதை நிறுத்து ! இம்மாதிரி பத்தாம் பசலித்தனமான விவகாரம் எல்லாம் இந்த அட்லாண்டிக் ஸ்டாரில் இடம்பெறக் கூடாது... புரிகிறதா?
அஹ !
ஏட்டுப்படிப்பு படித்துவிட்டு வந்து அகங்காரமாய்ப் பேசுகிறாய்.. நீண்ட கால அனுபவத்திலிருந்து நான் கூறும் எச்சரிக்கையை அலட்சியம் செய்கிற நீ என்றாவது ஒருநாள் இந்த தவறுக்குரிய விலையாக உன் உயிரையே கொடுக்கவேண்டியிருக்கும்!
திறமைவாய்ந்த ஆனால் மிகக் கெடுபிடியான முதல்நிலை அதிகாரி ஹார்டுவிக் அந்த பெரியவரை நோக்கி சீறினான் ..
பத்திரமான கடல் பயணத்திற்குத் தேவை அதிர்ஷ்டமல்ல கிழவா... அறிவும், திறமையும் தான்!
பெரிய்ய ஜோஸியன் என்ற நினைப்போ . நீ ஓர் அற்ப சமையல் உதவியாள்தான், ஸ்டோன்! சமர்த்தாக வாயை மூடிக்கொண்டு சமையற்கட்டை நோக்கி நடையைக்கட்டு நாளை விடியகாலையில் நாம் பயணத்தை தொடங்கவிருக்கிறோம்
என்ன நாளை காலையிலா? - வெள்ளிக்கிழமையாயிற்றே தேதிவேறு-13!.. புத்திசுவாதீனமுள்ள எந்த மனிதனும் இம்மாதிரி நாளில் கடல் பயணத்தை தொடங்கமாட்டான். உடனடி நான் போய் காப்டனை சந்தித்து இதுபற்றி எச்சரிக்க வேண்டும்.
கிழட்டு பிண்டமே... உன் அரைவேக்காட்டுத்தனமான உளறல்களை எல்லாம் கேட்டு அதன்படி நடக்க காப்டன் ஒன்றும் உன் மாதிரி மறை கழன்ற பேர்வழி இல்லை. மறு பேச்சில்லாமல் இப்போது நீ கீழே போகப்போகிறாயா இல்லையா?
ஹூம் இதுதான் நம் தலைவிதி என்றால் யாரால் அதை மாற்ற முடியும்! ஆனால் என் எச்சரிக்கை ஒருபோதும் பொய்க்காது - ஜாக்கிரதை!
அந்தக் கிழவனின் பிதற்றல்களை எல்லாம் காதில்போட்டுக்கொள்ளாதே... எப்போதோ ரிடையராகியிருக்கவேண்டியவன் கழுத்தை அறுக்கிறான் கூட இருந்து! ம்ம்- .. உன் பெயர் என்ன?
மார்ட்டின்பிலிப்ஸ் ஸார்! புதிதாக வேலைக்கு சேர்ந்துள்ள செய்தி தொடர்பு இளநிலை அதிகாரி.
மறுபடியும் அந்தக் கிழவன் வந்து உன்னை தொல்லைப்படுத்தினால் எனக்கு தகவல் கொடு ..
பாவம் ஜெப்ஸ்டோன்! அவருடைய வயதுக்கும் நீண்ட அனுபவத்துக்குமாவது மரியாதை கொடுத்திருக்கலாம்.


மறுநாள் காலை அட்லாண்டிக் ஸ்டார் தன் நெடிய பயணத்தை தொடங்கியது. அதன் இலக்கு-முதலில் அஸ்ஸென்ஷியன் தீவு.
ஏதோ இன்னிசை கேட்கிறதே என்று சுற்றுமுற்றும் பார்த்தால் அதோ அங்கே ஜெஷ்ஸ்டோன் காற்றலையமாக திசை திருப்பி இசை எழுப்பிக் கொண்டிருக்கிறார்...
பழங்கால யுக்தி...! காலம் மாறிவிட்டது... பாய்மரம் போய் இயந்திரம் வந்து வெகு காலமாகிவிட்டது என்று அந்தக் கிழவனுக்கு யாராவது ஞாபகமூட்டினால் நல்லது.. ஹாஹ... ஹா!
சிரிக்கிறீர்களா.... மூடர்களே- நன்றாக சிரியுங்கள்! நம் வசமுள்ள அனைத்து சக்தியையும் ஒன்றுதிரட்டி நாம் துரிதமாக இவ்விடத்தை கடந்து செல்லாவிடில் இதுவே உங்களுடைய கடைசி சிரிப்பாகிவிடப் போகிறதடா அறிவாளிகளா!
அதோ பெட்ரல் பறவைகள் கூட்டமாக எங்கோ விரைவதை கவனியுங்கள்... புயல் வரப்போகிறது வெகு சீக்கிரத்தில் என்பதை முன்கூட்டிய அறிவிக்கும் நம்பகமான அறிகுறி இது...
கொஞ்சநேரம் வாயை மூடிக்கொண்டு சும்மா இரேன்!
அந்த பெரியவரின் எச்சரிக்கையை யாருமே பொருட்படுத்துவதாக இல்லை அவருடைய கூற்றில் கடுகளவாவது உண்மை இருக்குமேயானால்...
அன்றைய இரவே எந்த முன்னறிவிப்புமின்றி வந்து அதிரடியாக தாக்கியது விபரீதம்...
எல்லோரும் மேல் தளத்துக்கு வரவும்...எல்லோரும் மேல் தளத்துக்கு வரவும் உடனடியாக!
என்ன இதெல்லாம். ? ஒன்றுமே புரியவில்லையே!
புதிரான சூறைக் காற்று...அவசரகால உதவிப் படகு இருக்குமிடத்திற்கு ஓடுங்கள்...
ஆனால்-
ஐயையோ ராட்சஸ அலை ஒன்று நம் கப்பலை தாக்க வருகிறது.
அறுபது மீட்டர் உயரம் எழும்பி பாய்ந்துவந்த அந்த அலை அட்லாண்டிக் ஸ்டாரை ஓங்கி அறைந்து சின்னாபின்னமாக்கி சிதறடித்தது உதவிப் படகுகள் நொறுங்கி உபயோகமற்றுப் போயின-ஒரே ஒரு படகைத் தவிர!
இத்தனை பேரும் எப்படி அந்த ஒரு படகில் போக முடியும்?
யார் யார் அதில் போகவேண்டும் என்பதை நான் தீர்மானிக்கிறேன்...
இதோ— இப்படி..!
ஆஆ...!
ஐயோ!
கையிலிருந்த உறுதியான கட்டையினால் வழியில் இருந்த சிப்பந்திகளை அடித்து வீழ்த்தியவாறு படகு இருந்த இடத்தை நோக்கி முன்னேறினான் ஹார்விக்,



வலியவன் பிழைத்துக்கொள்வான் என்கிற நியதி நடைமுறையாகிக் கொண்டிருந்தது அங்கே
உன்னையும் நான் விட்டு வைக்கப் போவதில்லை... கிழவா!
எதற்காக ? எப்படியும் இன்னும்சிறிது காலத்தில் சாகப்போகிறவன்தானே? ஜெப்-உன் வாழ்க்கையில் பெரும்பகுதியை கடலிலே யே கழித்துவிட்ட நீ இப் போது கடலிலேயே உயிரை விடு!
ஆ... ஐயோ!
அடேய்... இரக்கமற்ற சுயநல பிசாசே... நீயும் செத்தொழிந்து நான் போகுமிடத்திற்கு வந்து சேரும் நாள் அதிக தொலைவில் இல்லை — இது சத்தியம்!
ஹார்டுவிக்கின் வழியில் அகப் பட்டவர்களில் ஜெப் ஸ்டோ னும் ஒருவன்...
வேண்டாம்... அவரை விட்டு விடுங்கள்-பாவம்!
கொந்தளித்துக்கொண்டிருந்த கடல் நீரில் விழுந்த ஜெப்பின் பரிதாபமான முகம் ஒரு விநாடி அப்படியே நிலைத்து பின்னர் மறைந்து போனது ..
மிஞ்சி நின்றவர்கள் அனை வரும் உதவிப் படகில் ஏறிக்கொண்டனர் அதையடுத்து பல தினங்களுக்கு உண்ண உணவோ, குடிக்க நீரோ இன்றி பரிதாபமான முறையில் கடல் பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்தனர் ..
ஒவ்வொருவராக உயிரை விடலா யினர்...
இருபத்தி மூன்றாம் நாள் விடிகாலைப் பொழுது-
மிஸ்டர் ஹார்டு விக்... அதோ அங்கே மேலே என்ன அது . ?
இப்போது நீயும், நானும் மட்டுமே மிஞ்சியிருக்கிறோம் மார்டின் . ஆனால் நாமும் தப்பிப் பிழைக்க போவதில்லை!
நோ.. ! செத்துப்போன மாலுமி களின் ஆவிகள்தான் அல்பாட் ரோஸாக உலவுவதாக சொல் வார்கள். அதை கொல்வது என்பது துரதிர்ஷ்டத்திற்கு வித்திடுவதாகும்.
அது-அல்பாட்ரோஸ்! நம் படகு அதற்கு ஒரு விநோதமான சங்கதியாக த்தான் இருக்கக்கூடும்! அதுமட்டும் படகில் இறங்குமேயானால் நான் அதை அடித்துக் கொன்றுவிடுவேன். அதன் இரத்தமும் இறைச்சியும் நமக்கு சக்தியூட்டக்கூடும்!
அதை . அதை ஒன்றும் செய் யாதீர்கள்!
முட்டாள்-மிகுதி அப்பால்! நாம் உயிர்பிழைக்க கிடைத் திருக்கிறஅரியஒரு வாய்ப்பு இப்போது அந்த பறவை தான் ..
தவறான கணிப்பு ஹார்டு விக் . உன்னை கொண்டு செல்ல வந்திருக்கும் மரண தூதுவன் நான்!
வா...ட்?


அந்தப் பறவையின் பிரம்மாண்டமான இறக்கைகள் சடசடவென்று ஓசை எழுப்பியவாறு ஹார்டுவிக்கின் மீது கவிழ்ந்தன... அதன் வளைந்த அலகுகளும் விழிகளும், தலையும் உருமாற்றமடைந்து...
...ஜெப்ஸ்டோனின் முகம் போல் தோற்றம் கொண்டது.
நோ...!போ-போய்விடு!
நாம் ஒன்று சேர வேண்டிய நேரம் வந்துவிட்டது ஹார்டுவிக் !
வா .. வந்துவிடு —என்னோடு! ஹா ஹ . ஹா!
ஆ!
மறுகணம்-நீர்ப் பரப்பில் இரத்தக் கறை திட்டாக பரவி மறைந்தது.
இது நடந்த சில மணி நேரம் கழித்து அவ்வழியே வந்த ஒரு கப்பல் மார்ட்டின் பிலிப்ஸை காப்பாற்றி உடன் அழைத்துச் சென்றது
அட்லாண்டிக் ஸ்டார் விபத்துக்குள்ளாகி அழிந்து வருடங்கள் பல ஓடிவிட்டன .. இப்போது மார்ட்டின் பிலிப்ஸ் ஒரு கப்பல் காப்டன். அந்த விபரீதம் அவனுடைய நினைவில் பசுமையாக நிலைத்துவிட்டிருந்தது
அதனால்தான் ஒவ்வொரு பயணத்தின் தொடக்கத்திலும் அவன் கப்பலில் எல்லோருடைய பார்வையும் படுகிற பொது இடத்தில் ஒரு குதிரை லாடத்தை கட்டித் தொங்கவிட தவறுவதே இல்லை-
முற்றும்

# சுட்டிப் பயல்!




**இடப் பற்றாக்குறை காரணமாய் "ஆர்ச்சி" சிறு கதையை இணைக்க முடியவில்லை. அடுத்த இதழில் அது இடம்பெறும்!**




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் வெளியிடு பவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி - 626 123. போன்: 21159.
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி. வெளியீடு எண்: 50.

# முந்தைய வெளியீடுகள் !

V.P.P.-ல் பிரதிகள் அனுப்ப இயலாது.

பிரதி ஒன்றுக்கு தபால் செல்வு 0.25 பைசா வீதம் சேர்த்து அனுப்ப வேண்டும்.

## லயன்

1) மாடஸ்டி IN இஸ்தான்புல் ரூ. 2-00
2) கத்தி முனையில் மாடஸ்டி ரூ. 2-00
3) தங்க வேட்டை ரூ. 2-00
4) கல் நெஞ்சன் ரூ. 2-50
5) காணாமல்போன கோடீஸ்வரர் ரூ. 2-00
6) அதிரடிப் படை ரூ. 3-00
7) கராத்தே டாக்டர் ரூ. 2-00
8) பயங்கர நாடகம் ரூ. 2-00
9) டேஞ்சர் டயபாலிக் ரூ. 2-00
10) கடத்தல் வலை ரூ. 2-00
11) ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி ரூ. 2-00
12) இராட்சஸக் குள்ளன் ரூ. 2-00
13) '87 கோடை மலர் ரூ. 5-00
14) லயன் சூப்பர் ஸ்பெஷல் ரூ. 10-00

## திகில்

1) பயங்கரப் பூனை ரூ. 3-00
2) பிசாசுக் குரங்கு ரூ. 2-25
3) மர்ம எரி ரூ. 2-25
4) ரத்தக்காட்டேறி மர்மம் ரூ. 2-25
5) பனி மண்டலக் கோட்டை ரூ. 2-25
6) சைத்தான் துறைமுகம் ரூ. 2-00
7) முகமற்ற கண்கள் ரூ. 2-00
8) பிசாசுக் குகை ரூ. 2-00
9) ஓநாய் மனிதன் ரூ. 2-00
10) கடற்கோட்டை மர்மம் ரூ. 2-00
11) சிரித்துக் கொல்ல வேண்டும் ரூ. 2-00
12) பௌர்ணமி வேட்டை ரூ. 2-00
13) BAT MAN கிறுக்கனா? ரூ. 2-00

## மினி லயன்

1) மரண சர்க்கஸ் ரூ. 1-00
2) துப்பாக்கி முனையில் ரூ. 1-00
3) கறுப்புப் பாதிரி மர்மம் ரூ. 1-00
4) அதிரடி மன்னன் ரூ. 1-25
5) தென்னமெரிக்காவில் மாயாவி ரூ. 2-50
6) கோப்ரா தீவில் ஸ்பைடர் ரூ. 2-50
7) ஆர்டிக் நாகம் ரூ. 2-50
8) விற்பனைக்கு ஒரு ஷெரீப் ரூ. 2-50
9) சூப்பர் சர்க்கஸ் ரூ. 2-00
10) ஒரு கள்ளப் பருந்தின் கதை ரூ. 2-00
11) விசித்திர ஜோடி ரூ. 2-00
12) வெண்ணிப் பிசாசு ரூ. 2-00



லயன் காமிக்ஸ்
50வது
இதழ்!
ரூ.5/-
"பேய் வேட்டை" தாயவிளையாட்டை
கேட்டு வாங்குங்கள்!

# லயன் 50-வது இதழுடன் இணைப்பு!

